பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 03 வியாழக்கிழமை (19.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 358

# தமிழ் பேசும் மக்களின் அரசியலை

# ஒன்றிணைந்து முன்னெடுக்க முயற்சி

## தலைவர்கள் இன்று சுவிஸ் சூரிச்சில் கூடுகின்றனர்

கொழும்பு, நவம்பர் 19

இலங்கையில், தமிழ் பேசும் மக்கள் தொடர்பில் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இன்று முதல் மூன்று நாள்களுக்கு சுவிட்ஸர்லாந்தின் சூரிச் நகரில் நடத்தப்படும் கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காக இலங்கையின் தமிழ், முஸ்லிம் தலைவர்கள் பலர் அங்கு சென்றிருக்கின்றார்கள்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கல்முனை மாநகரசபையின்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான வணிகக்கல்வியும் கணக்கீடும் - I,II, கணிதம் II பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் I, II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## வன்னி அகதி முகாம் மக்களை பாப்பரசர் நேரில் வந்து பார்வையிடுவது அவசியம்

### தமிழ் மக்கள் சார்பில் அழைப்பு

கொழும்பு,நவ,19

இலங்கையில் அகதி முகாம்களிலுள்ள தமிழ் மக்கள் மனிதாபிமானமற்ற முறையில் அரசினால்நடத்தப்படுகின்ற மையைப் பார்வையிட வேண்டுமானால் புனித பாப்பரசர் இலங்கைக்குக் கட்டாயம் விஜயம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கைத் தமிழ் மக்கள் சார்பில் பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பருக்கு அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவ நிபுணர் முரளி தற்காலிக வேலை நீக்கம்

### ஊடகத்துக்குக் கருத்துத் தெரிவித்ததற்காக

கொழும்பு, நவ.19

சுகாதார அமைச்சின் சமூக மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன் சுகாதார அமைச்சினால் நேற்று தற்காலிக வேலை

(20ஆம் பக்கம் பார்க்க)

## 'கிளியரன்ஸ்' தேவையில்லை என்ற தகவல் தெற்கே செல்லவிருந்த மக்களைப் படுத்திய பாடு!

யாழ்ப்பாணம்.நவ.19

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதி தேவையில்லை என வடமாகாண ஆளுநர் அறிவித்த நிலையிலும் நேற்று பய ணம் மேற்கொள்ளச் சென்ற பயணிகளிடம் படையினர் பாதுகாப்பு அனுமதி "கிளியரன்ஸ்" கேட்டுத் திருப்பி அனுப்பியதாகத் திரும்பி வந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தோனேஷிய கப்பலில் இருந்த 78 அகதிகளும் கரைக்கு வந்தனர்

ஜகார்த்தா, நவ.19

இந்தோனேஷியாவில் கடலில் தரித்து நிற்கும் 'ஓசியானிக் வைகிங்' கப்பலிலிருந்து இலங்கையர்கள் அனைவரும் வெளியேறியுள்ளனர். ஏற்கனவே 22 பேர் கப்பலைவிட்டு இறங்கி இந்தோனேஷியக் கரையை அடைந்துள்ளனர். ஐந்து குழந்தைகள், ஐந்து பெண்கள் உட்பட 56 பேர் நேற்று அதிலிருந்து இறங்கியுள்ளனர்.

இதன் பின்னர் இவர்கள் இந்தோனேஷியாவின் டன்யுங் பினாங் தடுப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட கப்பலில் இருந்து ஏற்கனவே கடந்த வெள்ளிக்கிழமை 22 பேர் இறங்கியிருந்தனர்.

'ஓசியானிக் வைகிங்'கிலிருந்து இறங்கியவர்களில் உள்ள குழந்தைகளும் பெண்களும் தனியான இடமொன்றில் தங்க வைக்கப்படுவார்கள் என ஆஸ்திரேலியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்தோனேஷிய அதிகாரிகள் இதனை நிராகரித்துள்ளனர்.

'ஓசியானிக் வைகிங்' கப்பலிலிருந்து இறங்கியுள்ள 78 பேரில் அகதிகள் என ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கு முதலில்

(20ஆம் பக்கம் பார்க்க)

## நாடெங்கிலும் கடும் மழை!

### வெள்ளத்தில் மூழ்கியது தலைநகர்!! மலையகத்தில் மண்சரிவு அபாயம்

கொழும்பு, நவ.19

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு முதல் விடாமல் கொட்டிய கடும் மழை காரணமாகப் பல வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. தலைநகர் கொழும்பு மற்றும் மலையகப் பகுதிகள் நேற்றுக் காலையில் வெள்ளக் காடாகக் காட்சியளித்தன.

கொழும்பில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையால் மூவாயி ரத்து 250 குடும்பங்

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் பொது வேட்பாளரின் பெயர் வெளியாகும்

### ஐ.தே.கட்சி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ.19

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் யாரென்று அறிவிக்கப்படுவார் என்று ஐக் கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்

(20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அரச அதிபர் மற்றும் பிரதேச செயலர்களை நாளை சந்திக்கிறார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம்.நவ.19

யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் பிரதேச செயலர்கள் நாளை வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாட உள்ளனர்.

நாளை மாலை 6 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் இச்சந்திப்பில் யாழ்.மாவட்ட அரச அதிபர், மேலதிக அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இச்சந்திப்பின் போது யாழ்.மாவட்ட அபிவிருத்தி நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (10-86)

தென்மராட்சி மக்களுக்கோர் நற்செய்தி!






லண்டன், சுவிஸ், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா, இத்தாலி, நோர்வே, டென்மார்க், சிங்கப்பூர் , துபாய், நியூசிலாந்து, நெதர்லாந்து, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ்,இந்தியா ஆகிய பதினாறு நாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு நீங்கள் விரும்பும் DVD, CD மற்றும் புடைவை வகைகள், உணவுப்பொருட்கள் போன்றவற்றை துரிதமாகவும், பாதுகாப்பாகவும் அனுப்பிவைக்க உங்களுக்காக....

இல.14 நவீன சந்தை (மேல்மாடி) சாவகச்சேரியில் இன்று 19.11.2009 வியாழக்கிழமை காலை 8 மணி 01 நிமிடத்திலிருந்து 9 மணிவரையுள்ள சுபவேளையில்

S.V.N.ENTERPRISES

எனும் ஸ்தாபனத்தை திறந்து வைக்கிறோம் என்பதை மிக மகிழ்சியோடு தெரிவித்துக் கொள்கின்றோம். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குமான பொதிகள் கொண்டு செல்லும் லொறி போக்குவரத்துச் சேவையினையும் நாம் ஆரம்பிக்கின்றோம் என்பதையும் மிக்க மகிழ்வோடு அறியத்தருகிறோம்.

மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள் : 021 567 2015, 021 567 2016, 0777279691

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யா/வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையின் அதிபர் திரு.சு.தர்மலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சுப்பிரமணியம் தெய்வநாயகம்

அவர்கள் 18.11.2009 புதன் கிழமை காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியும், கவலையும் அடைகின்றோம். அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பாடசாலைச் சமூகம்,*
யா/வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை, வரணி.

## மரண அறிவித்தல்



### இராசா.பொன்னுத்துரை
(முன்னாள் சாரதி-இ.போ.ச)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசா பொன்னுத்துரை (16.11.2009) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், நல்லம்மாவின் அன்புக் கணவரும், சுசிலாதேவி, சாந்தாதேவி (அமரர்), சிவகுமார் (ஜேர்மனி), சரோஜினிதேவி (லண்டன்), மோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சோமசுந்தரம், கமலராணி, விவேகானந்தராஜா (லண்டன்), றொசானி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், கந்தவனம், தங்கம்மா, சரஸ்வதி, மற்றும் நவரத்தினம், ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்திரகுமாரன், பாலகௌரி, பிரதீபன், [illegible]கேசன் (சுவிஸ்), பார்த்தசாரதி (கொழும்பு), வசீகரன், பாவல[illegible]ராஜவன், நாரனன் (ஜேர்மனி), மோனிஷா, நிதர் ஷன், கிறோசிகா, சிவானிக்கா, துவாரகேசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், டிலிபிரஷான், டிலக்ஷனா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2009) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 3 மணி அளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மில் ஒழுங்கை, மல்லாகம்.*
*0213218447, 0213219351* (91209) தகவல்: குடும்பத்தினர்.

## விற்பனைக்குண்டு

எம்மிடம் மரத்தாள் (Brown Paper) விற்பனைக்குண்டு. கிலோ ரூபா 12. மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

தொடர்பு: (சி/562473)
உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.

## ராஜீ திருமண சேவை

இந்து கௌரவ குடும்பம் 34 வயது, ஆயிலியம், 34 வயது பூரம், செவ்வாய்க் குற்றமற்ற லண்டன் பிரஜாவுரிமை உடைய மணமகன்களுக்கு அழகிய மணமகள்கள் தேவை.

H.P: 0774745647 158/3, நாவலர்வீதி,
T.P: 0213735980 (சி/562492) யாழ்ப்பாணம்.

## கடன் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.19

நல்லூர் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் கரித்தாஸ் -கியூடெக் நிறுவனத்தினரின் வாழ்வாதாரத் திட்ட சுயதொழில் சுழற்சிக் கடன் வழங்கும் வைபவம் இன்று வியாழக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

நல்லூர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறும் இந்த நிழ்வில் கரித்தாஸ் -கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி. கி.ஜோ.ஜெயக்குமார் பிரதமவிருந்தினராக கலந்து கொள்வார்.

சிறப்புவிருந்தினராக நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் கலந்து கொள்ள உள்ளார். (1)

## மரண அறிவித்தல்

### இராசையா கனகசபாபதி



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கனகசபாபதி நேற்று (18.11. 2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா போடியார் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், வசந்தகுமார், நிர்மலா, சர்மிளா, ஜமீலா, சகுந்தலா, காலஞ்சென்ற மோகன்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜனி, விஜயலஷ்மி, ஜெகதீஸ்வரன், லோகராஜா, கார்த்தீ கேசன், ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனனி, ஜெகன், ஆனந், இராமேஸ்வரன், ஜெயந்தி, பிரகாஷ், சுரேஷ் (சுபி), மீரா, சகிலா, தனுஷா, ரகுபரன், கார்த்திகா, ஜனாத் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''செல்வஸ்தான்''*
*செங்குந்தா வீதி,* (சி/562494) தகவல்:
*திருநெல்வேலி, கிழக்கு, யாழ்ப்பாணம்.* குடும்பத்தினர்.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை - சுன்னாகம்
## 2010 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றை 2010.01.01 தொடக்கம் 2010.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| இல. | சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப்பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வற்வரி தவிர) | மாத வாடகை (வற்வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 01 | சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கர வண்டித்தரிப்பிடம் உட்பட) | 1,500.00 | 20,000.00 | 4,500,000.00 | -- |
| 02 | உடுவில் கீரிச் சந்தை | 500.00 | 10,000.00 | 70,000.00 | -- |
| 03 | சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 650,000.00 | 250.00 |
| 04 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை | 1000.00 | 10,000.00 | 75,000.00 | 250.00 |
| 05 | கருவாட்டுக்கடை இல.3 | 500.00 | 5,000.00 | 35,000.00 | 250.00 |
| 06 | கருவாட்டுக்கடை இல.4 | 500.00 | 5,000.00 | 35,000.00 | 250.00 |
| 07 | கருவாட்டுக்கடை இல.5 | 500.00 | 5,000.00 | 35,000.00 | 250.00 |
| 08 | கோழிக்கடை இல.6 | 500.00 | 5,000.00 | 60,000.00 | 250.00 |
| 09 | கோழிக்கடை இல.7 | 500.00 | 5,000.00 | 60,000.00 | 250.00 |
| 10 | கோழி உரித்தல் | 500.00 | 5,000.00 | 40,000.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 01 | மருதனார்மடம் சந்தை (துவிச் சக்கரவண்டித் தரிப்பிடம் உட்பட) | 1,500.00 | 20,000.00 | 4,500,000.00 | ...... |
| 02 | இணுவில் பொதுச்சந்தை | 500.00 | 5,000.00 | 25,000.00 | ...... |
| 03 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை (கோத்தியாலடி கொல்களத்தில் மாடுகள் வெட்டப்பட வேண்டும்) | 1,000.00 | 10,000.00 | 90,000.00 | ...... |
| 04 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை (கோத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்பட வேண்டும்) | 750.00 | 10,000.00 | 60,000.00 | 250.00 |
| 05 | மல்வம் சந்தை | 1,000.00 | 5,000.00 | 30,000.00 | ...... |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 01 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 50,000.00 | ...... |
| 02 | ஏழாலை பொதுச் சந்தை | 500.00 | 5,000.00 | 15,000.00 | ...... |

1. கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் : 2009.11.26 பி.ப 2.00 மணிவரை
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் : 2009.11.27 நண்பகல் 12.00 மணிவரை
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படுதல் : 2009.11.27 பி.ப 2.00 மணிக்கு
4. கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர், வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
5. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப்பிரதியையும் கொண்டு வருவதுடன் முக்கியமாக தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச்சான்றிழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. உள்ளூராட்சி மன்றங்களால் ''தவறுநராக'' கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
7. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றுக்கு 12% பெறுமதி சேர் வரியும் காலத்திற்கு காலம் அரசாங்கத்தால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்படல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திகரக் கேள்விகாரர் கேள்வித் தொகையின் 1/3 பங்கை 2009.12.07 ஆம் திகதிக்கு முன் செலுத்துவதுடன் மிகுதி 2/3 பங்கு தொகைக்கு வங்கியில் தங்கள் பெயரில் வைப்புச் செய்தமைக்கான ஆதாரங்களை சமர்ப்பித்து ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஏனைய சந்தைகள் இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பகுதியை 2009.12.07 ஆம் திகதிக்கு முன் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
9. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிரா்கரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
10. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்
11. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம்.
18.11.2009 (சி/562482)

திருமதி சு.முருகநேசன்
செயலாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

## சாவகச்சேரி நகரசபை
### 01.01.2010 முதல் 31.12.2010 வரை
## குத்தகைகளுக்கான கேள்வி அறிவித்தல்

1. கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 03.12.2009 மதியம் 12 மணிவரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 04.12.2009 மு.ப. 10 மணி வரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 04.12.2009 மு.ப. 11 மணி

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல. | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர) | கேள்விப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| | மீள் கேள்வி அறிவித்தல் | | | |
| 1 | சாவகச்சேரி பொதுச்சந்தை, மீன் சந்தை, துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம், வாகனத் தரிப்பிடம் முதலானவை | 4,400,000.00 | 44,000.00 | 1000.00 |
| | கேள்வி அறிவித்தல் | | | |
| 1 | கருவாட்டுக் கடை இல.1 | 75,000.00 | 7,500.00 | 1000.00 |
| 2 | கருவாட்டுக்கடை இல.2 | 75,000.00 | 7,500.00 | 1000.00 |
| 3 | கருவாட்டுக்கடை இல.3 | 75,000.00 | 7,500.00 | 1000.00 |
| 4 | கருவாட்டுக்கடை இல.4 | 75,000.00 | 7,500.00 | 1000.00 |
| 5 | கருவாட்டுக்கடை இல.5 | 75,000.00 | 7,500.00 | 1000.00 |
| 6 | கருவாட்டுக்கடை இல.6 | 75,000.00 | 7,500.00 | 1000.00 |

குறிப்பு:

★ கேள்விப்பத்திரக் கட்டணம், கேள்வித் தொகை, மாதாந்த குத்தகைப் பணம் என்பனவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி VAT (12%) மேலதிகமாகச் செலுத்தப்பட வேண்டும்.

★ கேள்விப்பத்திரங்கள் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையைக் கொண்டுவர வேண்டும். நிழற்படப் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

★ மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

★ போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு.

நகர சபை அலுவலகம்,
சாவகச்சேரி. 18.11.2009 (சி/562485)

திருமதி ம.வசந்தகுமார்
விசேட ஆணையாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9983 தொலைநகல்.: 222 9944

# முடிவு எடுப்பதில் தமிழ்த் தலைமைகளுக்கு அதிக நெருக்கடிகள் காத்திருக்கின்றன

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் தொடர்பான அறிவிப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எந்த நேரத்திலும் வெளியிடுவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெரும் ஆரவார அரசியல் எடுப்புகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதுவரை காட்டி வந்துள்ள காரணத்தால் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முடியாத இக்கட்டுக்குள் அவர் சிக்கிக் கிடக்கின்றார் என்பது வெளிப்படையானது. எந்தச் சூழலிலும் ஜனாதிபதித் தேர்தலை இப்போதைக்கு நடத்தாமல் அவர் தள்ளி வைக்க முடியாது. அப்படிச் செய்வாராயின், ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் என்ற அறிவிப்பைக் கண்டும் அதையொட்டித் தென்னிலங்கை மக்கள் மத்தியில் அத்தகைய பொது வேட்பாளருக்கு சார்பாகக் கிளர்ந்துள்ள ஆதரவு எழுச்சி கண்டும் ஜனாதிபதி பயந்து பின்வாங்கிவிட்டார் என்ற அர்த்தத்தை அது கொடுத்துவிடும்.

அத்தகைய நிலைமை, எப்படியும் அடுத்த ஐந்து மாதங்களுக்குள் நடத்தி முடித்தேயாக வேண்டியிருக்கும் பொதுத் தேர்தலில் அரசுத் தரப்பின் வெற்றி வாய்ப்பைக் கெடுத்துவிடும் என்பதும் உறுதி.

எனவே,பொதுத் தேர்தலில் ஆளும் தரப்பின் வெற்றிக்கான வாய்ப்பைக் கெடுக்காமல் இருப்பதற்காக, ஜனாதிபதித் தேர்தலில் தோற்றுவிடலாம் என்ற அச்சத்தில் அதிலிருந்து தாம் பின்வாங்கிவிட்டார் என்பதான அர்த்தத்தைக் கொடுத்துவிடாமல் செயற்பட வேண்டிய கட்டாயம் அவருக்கு உள்ளது.

எனவே,எப்படியென்றாலும் உடனடியாக ஜனாதிபதித் தேர்தல் ஒன்று அறிவிக்கப்படுவதற்கான வாய்ப்புகளே அதிகம் உள்ளன. அத்தகைய அறிவிப்பு எச்சமயத்திலும் வரலாம்.

அப்படி ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டால் தமிழ்க் கட்சிகள் - குறிப்பாகத் தமிழர்கள் மத்தியில் அதிக செல்வாக்குப்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் - எப்படிச் செயற்படப் போகின்றன என்பதே இன்றைய கேள்வியாகும்.

ஏற்கனவே, எதிர்க்கட்சிகளின் சார்பில் இவ்விவகாரம் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரான இரா. சம்பந்தனுடன் பேச்சுகளை ஆரம்பித்துவிட்டார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அதேசமயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் மனங்களை வென்று தம்பக்கம் திருப்பச் செய்வதற்கான முயற்சிகளை அரசுத் தரப்பும் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது எனக் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று நேற்று முதலாம் பக்கத்தில் தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது.

ஆக, ஜனாதிபதித் தேர்தலில் நேரடியாக இருமுனைப் போட்டி என - ஒருபக்கம் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் மறுபுறத்தில் எதிரணியின் பொது வேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகாவும் என - வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டால், இவர்களில் யாருக்கு ஆதரவைக் கொடுக்குமாறு தமிழ் மக்களைக் கோருவது என்று தெரியாமல் தடுமாறப் போகின்றது தமிழ்க் கூட்டமைப்பு.

'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்; இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்!' என்ற இரண்டுங்கெட்டான் நிலையை எதிர்கொண்டு அது அல்லாட வேண்டியிருக்கும்.

ஏற்கனவே, கூட்டமைப்பின் எம்.பிக்கள் சிலர் இலைமறை காயாக ஆளும் தரப்பின் அதிகாரக் கரங்களின் அரவணைப்புக்குள் நாசூக்காகத் தஞ்சம் புகுந்துள்ள நிலையில், இவ்விடயத்தில் நடுநிலையில் நின்று, சீர்தூக்கிப் பார்த்து, சூழ்நிலை சந்தர்ப்பத்தைத் தமிழர்களுக்கு வலுவான அதிகாரத்தை - பலத்தை - பெற்றுத் தரும் வாய்ப்பாக எப்படி மாற்றுவது என்று தீர்மானிப்பதிலும், அந்தத் திசையில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதிலும் தமிழ்த் தலைமைகளுக்கு இக்கட்டு சொல்லி மாளாத அளவுக்கு இருக்கப்போகின்றது.

தென்னிலங்கையின் இந்தத் தேர்தல் சகதிப் போட்டியில் தன்னுடைய அரசியல் வலிமையை உறுதியாக்கிக் கொள்வது தமிழர்களின் அரசியல் சாணக்கியத்தில்தான் தங்கியுள்ளது. இதில் கோட்டை விட்டால் தமிழர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கான துளியளவு வாய்ப்பும் மறைந்து போய்விடும்.

இவ்விடயத்தில் தமிழர் தலைமைகள் அவசரப்பட்டு விடக்கூடாது. தனிப்பட்ட விருப்பு,வெறுப்புகள், சொந்த ஆதாயங்கள் கருதி பக்கம் சார்ந்து விடக்கூடாது. தமிழர்களின் எதிர்கால நலனுக்கு எது வாய்ப்பானது என்பதை உய்த்தறிவதும், கள நிலைவரங்களை சரிவரக் கணிப்பிடுவதும் இவ்விவகாரத்தில் மிகமிக முக்கியமானவையாகும்.

தமிழர் தலைமைகள் தங்களின் சீட்டை - துரும்பை - நேரத்துடன் பகிரங்கமாக வெளிப்படுத்த இடமளிக்காமல், நெஞ்சுக்கு நெருக்கமாக இறுதிவரை பாதுகாத்துப் பேண வேண்டியிருக்கும். அதாவது, அவசரப்பட்டு அணி சேர்ந்து விடக்கூடாது.

இரண்டு பக்கத்திலும் பேரம் பேசலுக்கான வாய்ப்பை - கதவை - திறந்து வைத்துக்கொண்டு, சமச்சீரான காய் நகர்த்தலை முன்னெடுக்க வேண்டும்.

அதேசமயம், கள நிலைவரக் கணிப்புகளையும் சரியாக மதிப்பிட வேண்டியிருக்கும். கருத்துக் கணிப்புகள், செல்வாக்கு மதிப்பீடுகள் தொடர்பாகத் துல்லியமான தரவுகளைப் பெறுவதும் அவசியமானதாகும்.

முதலிலே, தமிழர் தரப்பின் - சிறுபான்மையினரின் - ஆதரவு இன்றி வெற்றிக்கனியைப் பறிக்கவே முடியாது என்ற தவிர்க்க இயலாத நிலையை தென்னிலங்கையின் இரு பிரதான வேட்பாளர்களின் அணிகளுக்கும் ஏற்படுத்த வேண்டும்.

பின்னர் அதை வைத்துக்கொண்டு, தமிழர்களுக்கு ஆதரவான நிலைமையை ஏற்படுத்தக் கூடிய அணியை ஆதரித்து, அந்தத் தரப்பு வெல்வதை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

அதன்பின்னர் நடப்பதைப் பற்றிப் பின்பு பார்த்துக் கொள்ளலாம்.

இது விடயத்தில் 'கடமையைச் செய்!'என்ற பகவத் கீதை வாசகத்தைக் கைக்கொள்ள வேண்டியதுதான் நமது பொறுப்பாகும்.

அதன் பேறாகவே தமிழர்களுக்கு நற்பேறு கிட்டும் என நாம் நம்பிக்கை கொள்ளலாம்.

# யாழ்ப்பாணத்தில் 20 எரிபொருள் நிலையங்களுக்கு நேற்றுக் காலை முதல் பெற்றோல் விநியோகம்

## இன்றும் தரைப்பாதையூடாக வந்துசேரும்

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்ப்பாணத்திலுள்ள இருபது எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு நேற்றுப் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறை எரிபொருள் களஞ்சியத்தின் உயரதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

நேற்று ஒரேநேரத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள 20 எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கும் சுமார் 66 ஆயிரம் லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

இன்று வியாழக்கிழமையும் சுழற்சி முறையில் சகல எரிபொருள் விற்பனவு நிலையங்களுக்கும் பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளது என்றார்-அந்த அதிகாரி.

பெரும்பாலும் இன்றுடன் பெற்றோலுக்கான தட்டுப்பாடு முற்றாக நீங்கிவிடும். எனவே நுகர்வோர் தமது தேவைக்கேற்ப பெற்றோலைப் பயன்படுத்துமாறும் அளவுக்கு அதிகமாகப் பெற்றோலைக் கொள்வனவு செய்து தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

[illegible]வேளை நேற்றுக்காலையும் த[illegible]தையூடாக 66 ஆயிரம் லீ[illegible]றர் பெற்றோல் எடுத்துவரப்பட்டு [illegible]ரிலுள்ள எரிபொருள் விற்பனை நி[illegible]லையங்களுக்கு விநியோகிக்கப்பட்டது. (50-224)

# நல்லூர் பிரதேச சபையைத் தரமுயர்த்துவது குறித்து ஆராய அரச அதிபர் தலைமையில் குழு

நல்லூர், நவ.19

நல்லூர்ப்பிரதேச சபை நகரசபையாகத் தரமுயர்த்துவது தொடர்பான சிபார்சுகள், அவதானிப்புக்களைச் சமர்ப்பிப்பதற்கென யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நில அளவை உதவி அதிகாரி ஆகியோரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசசபை நகரசபையாகத் தரமுயர்த்துவது குறித்த பல்வேறு தரப்புக்களாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கை உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பொதுமக்களின் கருத்துக்களை எழுத்துமூலமாக மேற்படி குழுவிற்கு தெரிவிப்பதற்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை கொக்குவில் பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (50-11)

# சிறைச்சாலை, புனர்வாழ்வு நிலையத்துக்கு நேற்று மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் விஜயம்

யாழ்ப்பாணம்,நவ.19

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி த.கனகராஜ் உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் யாழ்.சிறைச்சாலை, தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையங்களுக்குச் சென்று அங்குள்ளவர்களின் நிலைமைகளைக் கேட்டறிந்தனர்.

நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் யாழ்.சிறைச்சாலைக்குச் சென்ற இந்தக் குழுவினர் யாழ். சிறைச்சாலை ஆணையாளர் என்.இந்திரகுமாருடன் கலந்துரையாடினர். அத்துடன் கைதிகளை நேரில் சந்தித்துக் குறைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

பின்னர் தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்துக்குச் சென்று அங்கு தங்கவைக்கப்பட்டுள்ளவர்களின் குறைகளையும் கேட்டறிந்து கொண்டனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திற்கு இணைப்பதிகாரி த.கனகராஜ் நியமிக்கப்பட்டதன்பின் முதன் முதலாக இவ்விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-9-224)

# யாழ்.மாவட்டத்தில் ஐந்து பாடசாலைகளுக்கு கட்டடங்களை அமைக்க 175 மில்லியன் ரூபா நிதி

யாழ்ப்பாணம், நவ.19

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து "இசுறுபாய" பாடசாலைகளுக்குப் புதிய கட்டடங்களை அமைப்பதற்கு 175 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் "இசுறுபாய" பாடசாலைகளாக ஐந்து பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றிற்கான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பகுதியில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, வடமராட்சிக் கல்வி வலயத்தில் கரவெட்டி விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், தென்மராட்சி கல்வி வலயத்தில் வரணி மகாவித்தியாலயம், வலிகாம கல்வி வலயத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி என்பனவே "இசுறுபாய" பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட இந்தப் பாடசாலைகளுக்குத் தலா 35 மில்லியன் ரூபா வீதம் 175 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இந்தப் பாடசாலைகளில் புதிய கட்டடங்கள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலும் அடுத்த வருட முற்பகுதியில் இந்தக் கட்டடப் பணிகள் பூர்த்தியடையும் என்றும் அவர் தெரிவித்தார். (50-9-224)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்துக்கு இருவர் நியமனம்

யாழ்ப்பாணம்,நவ.19

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருந்த விசாரணை உதவியாளர்கள் பதவிக்கு இரண்டு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகவலை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி த.கனகராஜ் தெரிவித்தார்

மனிதஉரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் விசாரணை உதவியாளர் பதவி நீண்டகாலமாக வெற்றிடமாக இருந்து வந்தது.

இதனால் மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் கிடைக்கும் முறைப்பாடுகளை விரைவாக விசாரணை செய்வதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியேற்பட்டது.

இதனைக் கருத்திற் கொண்டு மேற்படி பதவிக்கு இரண்டு பேர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்முனையைச் சேர்ந்த இஸ்ஸடின் லத்தீப், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வசந்தராஜ் ஆகியோரே இப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த இரண்டு அதிகாரிகளும் கடந்த வாரம் தமது பதவியினைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்-என்றார். (50-9)

# பொருளாதார நெருக்கடியில் இலங்கை: நாணயநிதியம் வெளியிடும் கருத்து இதுவாம்

## வெளிப்படுத்துகிறார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, நவ.19

இலங்கையின் பொருளாதாரம் வீழ்ந்துவிட்டது. அதனால் நாடு பொருளாதார நெருக்கடி ஒன்றை எதிர்கொண்டு வருகின்றது. சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எவ்) இவ்வாறான கருத்தைக் கொண்டிருப்பதாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்ட போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகப் பணிப்பாளர் டொமினிக் ஸ்ராஸ்-கான் மனித உரிமை கண்காணிப்பு நிர்வாகப் பணிப்பாளர் பிராட் அடாம்ஸுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இலங்கையின் பொருளாதாரம் விழுந்துவிட்டது. அதனால் அந்நாடு பொருளாதார நெருக்கடியொன்றை எதிர்கொண்டு வருகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

எமது பொருளாதாரம் விழுந்து விட்டது என்றால் அதுபற்றி இரண்டு தடவைகள் யோசிக்கவேண்டிய அவசியம் இல்லை. இலங்கையின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருவதாக அரசு கூறிவரும் நிலைப்பாட்டுடன் சர்வதேச நாணய நிதியத்தின் கருத்தினை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

சர்வதேச நிதியத்திடமிருந்து திருப்பிக் கொடுக்கக்கூடிய நிலைமைக்கு அப்பாற்பட்ட அளவில் கடன்களை அரசு பெற்றுக்கொண்டுள்ளது. இந்த நிதிகளைத் தேவையற்று செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தியுள்ளது - என்றார். (ப)

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி | 04 | 20.11.2009 வெள்ளிக்கிழமை |
| திதி: | | சதுர்த்தி பி.இ. 05.36 வரை |
| நட்சத்திரம்: | | மூலம் [illegible] 011.32 வரை |
| [illegible] | | 06.09 - 07.39 வரை |
| ராகுகாலம்: | | 10.39-12.09 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பவே முடியல்ல!..
ஆனால் உண்மை!..

1.8 Dual core Celeron
Asrock G31 M-S
250 GB
1GB Memory
DVD Writer
ATX Casing
15.6" Topview
Keyboard
Mouse
Speaker
38500/=

2.93 Core 2 Duo
Asrock G31 M-S
500 GB
2GB Memory
DVD Writer
ATX Casing
19" Samsung
Keyboard
Mouse
Speaker
58150/=

2.5 Dual core
Asrock G31 M-S
250 GB
1GB Memory
DVD Writer
ATX Casing
15.6" Topview
Keyboard
Mouse
Speaker
41900/=

2.6 Dual core
Asrock G31 M-S
320 GB
1GB Memory
DVD Writer
ATX Casing
15.6" Topview
Keyboard
Mouse
Speaker
42950/=

2.5 Dual core
Asus P5KPL -AM SE
320 GB
1GB Memory
DVD Writer
ATX Casing
16" View Sonic
Keyboard
Mouse
Speaker
46200/=

2.5 Dual core
Asrock G31 M-S
320 GB
2GB Memory
DVD Writer
ATX Casing
17" Dell
Keyboard
Mouse
Speaker
48400/=

2.6 Dual core
Asus P5KPL-AM SE
500 GB
2GB Memory
DVD Writer
ATX Casing
19" Samsung
Keyboard
Mouse
Speaker
52050/=

2.93 Core 2 Duo
Asrock G31 M-S
320 GB
1GB Memory
DVD Writer
ATX Casing
15.6" Topview
Keyboard
Mouse
Speaker
49950/=

**UPS 650V**
- DCP - 4200/=
- East - 4100/=
- PowerIII - 4150/=
- Power Tree - 4900/=

**Moniter**
- 15.6" Topview - 12100/=
- 16" View Sonic - 14500/=
- 17" Dell - 15500/=
- 19" Samsung - 16800/=

**Woofer**
- 2.1 Creative - 2900/=
- 2.1 Logitech - 3450/=
- 2.1 Spectra 2000 - 2750/=
- 5.1 Spectra 2000 - 5750/=
- 5.1 Creative - 7900/=

**Printer**
- Hp DeskJect 1560- 4650/=
- Epson T 10 -

**Router**
- D-Link ADSL 4200-10750/=
- D-Link Dialog Broad Band 6250 - 7500/=

Head Phone 450 - 900/=
Key Board 400- 2150/=
Mouse 400 - 650/=
Modem PCI - 800/=
Web Camera 8.0 - 3600/=
Speaker 400 - 900/=
PCI TV Capture Card - 2750/=
USB HUB 250 - 1200/=
USB Cable 200 - 800/=
Net Work Cable
Epson Ribbion Lq 300+
Recovery Card
Card Reader
USB Light
Lap top Speaker

3 வருட உத்தரவாதம்!

PCST PC SOLUTIONS
TECHNOLOGIES (PVT) LTD
305, Kasthuriyar Road, Jaffna. Tel: 021 222 1101
521/1 Navalar Road, Jaffna. Tel: 021 227 9644


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் மாணவனும் திரு.திருமதி கோகிலேஸ்வரன் - சரோஜா தம்பதியரின் செல்வப் புதல்வனுமான

**கோ.விந்தகன்**

2009 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 171 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் வாழ்வில் வளம்பெற மீசாலை வீரகத்தி விநாயகர் அருள் வேண்டுகின்றோம்.

இவருக்கு கல்வி கற்பித்து ஊக்குவிப்புவழங்கிய பாடசாலை அதிபர் பொறுப்பாசிரியர்கள், ஏனைய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கும் சாவகச்சேரி அன்பொளி கல்வி நிலைய ஆசிரியர்கள் திரு.வே.அன்பழகன்,திரு.எஸ்.செல்வபாஸ்கர் ஆகியோருக்கும் பாராட்டுக்களையும் நன்றியையும் நவில்கின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பப்பா, ஐயா, அப்பம்மா, அப்பா, அம்மா, தம்பிமார் மலரவன், அனுஷன், பூமா, பெரியப்பா, சித்தி, சித்தப்பாமார் குடும்பங்கள்.

(91206)

# ஆங்கில ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம்

சாவகச்சேரி நகர் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் ஆங்கில பாடம் போதிப்பதற்கு தகைமையும் அனுபவமுடைய பெண் ஆசிரியைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை தலைவர், புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம், கண்டுவில் வீதி, சாவகச்சேரி என்னும் முகவரிக்கு எதிர்வரும் 05.12.2009 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

2010 ஆம் ஆண்டுக்கான நிலைய சிறார்களுக்கு ஆங்கில மொழி மூலம் அனைத்து பாடங்களும் கற்பிக்கப்படவுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் நிலையத்தில் படிவத்தினைப் பெற்று எதிர்வரும் 15.12.2009 ஆம் திகதிக்கு முன்னர் நிலையத்தில் கையளிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

நிர்வாக சபை,
புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம்,
(சி/562489) சாவகச்சேரி.

# யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(தேசிய பாடசாலை)

## பழைய மாணவர் சங்கம்

மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டம் டிசெம்பர் மாத முற்பகுதியில் நடைபெறவிருப்பதால் சங்கத்தில் புதிய அங்கத்தவராக இணைய விரும்புவோர் கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்/ அதிபர் (சி/562488) செயலாளர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன ஊழியர்

**இளையதம்பி ஜெயராசசிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நீலாம்பரி உணவகம், நீர்பாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (91205) உரிமையாளரும், சக ஊழியர்களும்.

# கண்ணீர் அஞ்சலி

சுழிபுரம், கம்பனை இராஜராஜேஸ்வரி அம்பாளின் பாதார விந்தங்களுக்கு துள்ளித்திரியும் காலத்தில் இருந்தே தொண்டு ஆற்றியவரும், சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலய தேர்த்திருவிழா உட்பட பல உபயங்களின் உபயகாரரும், பெரும் தெருக்கள் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளருமான

**அமரர் குமாரசூரியர் முத்துக்குமாரசூரியர்**

அவர்களின் ஆன்மா சாந்திபெற இறைஞ்சுகின்றோம்.

சுழிபுரம் மத்தி, சுழிபுரம். (சி/562487) கணபதிப்பிள்ளை இந்திரராசா, கணபதிப்பிள்ளை சிவராசா.

## சாவகச்சேரி இந்துவில் சஞ்சிகை வெளியீட்டு விழா

சாவகச்சேரி, நவ. 19

சாவகச்சேரி இந்துக் கல்லூரி உயர் தர விஞ்ஞான மன்றத்தினால் "அறிவியல் ஊற்று" சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் உயர் தர விஞ்ஞான மன்றத்தின் தலைவர் த.ஆதவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி பிறேமினி சபாரத்தினம் கலந்துகொள்வார். (1-131)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 19

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்று வரும் ஆண்கள், பெண்களுக்கான தாச்சிப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்றைய இறுதிப்போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* ஆண்கள் - தெல்லிப்பழை சுட்டுவன்புலம் மகா வித்தியாலயம் எதிர் மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம்.
* பெண்கள் - ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் எதிர் வீமன்காமம் மகா வித்தியாலயம்.

* * *

யாழ்ப்பாணம், நவ. 19

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் மூன்றாம் மற்றும் இறுதிப்போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

இந்தப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* மூன்றாம் இடம் - இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

இறுதிப்போட்டி - மாதகல் சென். யோசேப் வித்தியாலயம் [illegible] விளான் மத்திய மகா வித்தியாலயம். (1-86)

# மரண அறிவித்தல்

## திருமதி அமிர்தநாதர் இசபேலம்மா

(செல்லம்மா)



சில்லாலை தெற்கைச் சேர்ந்த அமிர்தநாதர் இசபேலம்மா (செல்லம்மா) நேற்று (18.11.2009) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெலிச்சோர் - ஆனாசி தம்பதியினரின் அன்பு மகளும் தொம்மைப்பிள்ளை அமிர்தநாதனின் (அமுது) அன்பு மனைவியும் ராஜசிங்கம் (ஜேர்மனி), புனிதம் (சுவிஸ்), புஸ்பம் (இந்தியா), பங்கிராஸ் (இந்தியா), யோகராஜா (பிரான்ஸ்), யோகராணி (சுவிஸ்), றூபன் (சுவிஸ்), றஞ்சன் (சுவிஸ்), றஞ்சினி, செல்வராணி (பிரான்ஸ்), ராஜி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் அந்தோனிமுத்து, யக்கோமுத்து, மார்த்தா, மரியா, சூசைப்பிள்ளை, மரியாம்பிள்ளை மற்றும் சின்னராசா, சின்னத்துரை ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு. (91203) தகவல்: தொ.அமிர்தநாதர் (கணவர்), பிள்ளைகள், மருமக்கள்.

# அரசாங்க பெறுகை அறிவித்தல்

## சுகாதார சேவைகள் பிரிவு - யாழ்ப்பாணம்

## ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்புச் சேவை, சுத்திகரிப்புச் சேவை பெற்றுக் கொள்ளல் - 2010

2010 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 01.01.2010 தொடக்கம் 31.12.2010 வரையான காலப் பகுதிக்கு பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவை பெற்றுக் கொள்வதற்கான பெறுகைகள் 2009.12.11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பெற்று முற்பகல் 10.15 மணிக்கு திறக்கப்படும். பெறுகைப்பத்திரங்கள் பெற விரும்புவோர் தமது பெறுமதிச் சான்றிதழையும் (Worth Report), எம்மால் குறிப்பிடப்படும் தொகைக்கு ஏற்ப வங்கி உத்தரவாத முறியையும் (Bank Bid Bond) சமர்ப்பித்து பெறுகைப்பத்திரப் பணமாக மீளளிக்க முடியாத ரூபா 500 உம் அட்டவணையில் காட்டப்பட்ட மீளளிக்க கூடிய வைப்புப் பணமும் செலுத்தி 2009.12.10 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

விபரங்கள் பின்வருமாறு:

| இல | விவரம் | மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகை | வங்கி உத்தரவாத முறி | பெறுமதி ஆவணம் |
|---|---|---|---|---|
| 01 | பாதுகாப்புச் சேவை | 3,000.00 | 150,000.00 | 50,000.00 |
| 02 | சுத்திகரிப்புச் சேவை | 3,000.00 | 100,000.00 | 50,000.00 |

சுத்திகரிப்புச் சேவை

| நிறுவனங்கள் | ஆ.வை. பருத்தித்துறை | ஆ.வை. தெல்லிப்பளை | ஆ.வை. சாவகச்சேரி | ஆ.வை. ஊர்காவற்றுறை | பி.வை. சங்கானை | பி.சு.சே.ப. பணிமனை (பண்ணை உட்பட) |
|---|---|---|---|---|---|---|
| தொழிலாளர்கள் எண்ணிக்கை | 20 | 10 | 10 | 08 | 08 | 03 |
| மேற்பார்வையாளர்கள் எண்ணிக்கை | 04 | 02 | 02 | 02 | 02 | -- |

பாதுகாப்புச் சேவை

| | ஆ.வை. பருத்தித்துறை | ஆ.வை. தெல்லிப்பழை | ஆ.வை. சாவகச்சேரி | ஆ.வை. ஊர்காவற்றுறை | பி.வை. சங்கானை | பி.சு.சே.ப. பணிமனை (பண்ணை உட்பட) |
|---|---|---|---|---|---|---|
| பாதுகாப்பு காவலாளிகள் எண்ணிக்கை (பகல்) | 05 | 03 | 03 | 02 | 02 | 03 |
| பாதுகாப்பு காவலாளிகள் எண்ணிக்கை (இரவு) | 03 | 02 | 02 | 02 | 02 | 03 |

சகல பெறுகைகளும் இணைப்பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும் இணைப்பிரதி தனியாகவும் மெழுகு முத்திரை இடப்பட்ட உறைகளில் இட்டு பெறுகைக் கடிதத்தின் இடப்பக்க மேல் மூலையில் பெறுகை விவரம் தெளிவாக எழுதப்பட்டு இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் இடப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தாபாலில் அனுப்புவதாயின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் என்ற விலாசமிட்ட உறையில் வைத்து அனுப்பப்பட வேண்டும். பெறுகைகள் தபாலில் இடப் படின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பேற்க மாட்டாது. நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மேலாக அல்லது தொழில் திணைக்கள கூலிவீதத்திற்கு குறைவாக சமர்ப்பிக்கப்படும் பெறுகைகளும் தெளிவில்லாத அல்லது பிழையாக நிரப்பப்பட்ட பெறுகைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இப் பெறுகைகள் தொடர்பான இறுதித்தீர்மானம் கேள்விச் சபைக்கே உரியது. மேலதிக விவரங்களை இப்பணிமனையில் அலுவலக நேரங்களில் (காலை 9.00 முதல் மாலை 3.30 வரை) அறிந்துகொள்ள முடியும். பெறுகைகள் திறக்கப்படும் போது கேள்விகாரர் அல்லது அவரால் [illegible] பிரதிநிதி கலந்து கொள்ள முடியும்.

[illegible] ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம். (சி/562480) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மாணவரில் 5ஆயிரத்து 215 பேர் இதுவரை பாடசாலைகளில் இணைவு

## மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.19

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மாணவர்களில் நான்கு கல்வி வலயங்களில் இதுவரை 5 ஆயிரத்து 215 மாணவர்கள் பாடசாலைகளில் இணைந்துள்ளனர்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளவர்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளையும் தொடர்வதற்கு பாடசாலைகளில் இணைந்து வருகின்றனர்.

இணைந்து வருகின்ற மாணவர்களுடைய விவரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் எமது கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அதில் யாழ்.கல்வி வலயத்தில் ஆயிரத்து 599 பேரும், தீவகத்தில் 2 ஆயிரத்து 352 பேரும், தென்மராட்சியில் 150 பேரும், வலிகாமத்தில் ஆயிரத்து 114 பேரும் இதுவரை இணைந்துள்ளனர்.

எனவே நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளவர்களில் இதுவரை பாடசாலைகளில் இணைந்து கொள்ளாத மாணவர்களை உடனடியாக இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார் அவர். (50-9)

## இராணுவத்தினரின் காவலரண்கள் சிமெந்தினால் சீரமைக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், நவ.19

யாழ்.நகரப் பகுதி வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள இராணுவத்தினரின் காவலரண்கள் சிமெந்தினால் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

முன்னர் போக்குவரத்திற்கு இடையூறாகக் காணப்பட்ட இந்தக் காவலரண்கள் இப்போது பின்னகர்த்தப்பட்டுச் சிமெந்தினால் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதனைவிட குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாகக் காணப்பட்ட வீதித் தடைகள் மற்றும் காவலரண்கள் போன்றனவும் படையினரால் அகற்றப்பட்டு வருகின்றன. (50-224)

## திடீர் மரண விசாரணையாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.19

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் 1976ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டத்தின் 108ஆம் பிரிவின் கீழ் திடீர் மரண விசாரணையாளர்களை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசங்களான சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம், வரணி ஆகிய இடங்களுக்கும் நல்லூர், சண்டிலிப்பாய் பிரதேசத்தில் மானிப்பாய் நகரசபை, ஆனைக்கோட்டை கிராமசபை உட்பட நெடுந்தீவு, வடமராட்சி வடக்கில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, புலோலி ஆகிய இடங்களில் நிலவும் மரண விசாரணையாளர் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

விண்ணப்பங்களை இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்பதாக 'செயலாளர், நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதி, கொழும்பு - 12' என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக விவரங்களுக்கு 06.11.2009ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையைப் பார்வையிடலாம். (50-201)

## மின்சார நிலையவீதி - ஸ்ரான்லி வீதி ஆகியவற்றை இணைக்கும் வீதியைப் புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.19

யாழ்.மின்சாரநிலைய வீதியையும் ஸ்ரான்லி வீதியையும் இணைக்கும் வீதி நீண்டகாலமாக செப்பனிடப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. இதன் காரணமாக அவ் வீதியால் பயணம் மேற்கொள்ளும் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

யாழ்.நகரின் மையத்தை அடைவதற்கும், வெளியேறுவதற்கும் பாதசாரிகள் மற்றும் இரு சக்கர, முச்சக்கர வண்டிகளில் பயணிப்போர் அவ்வீதியையே அதிகம் பயன்படுத்தி வருகின்றனர்.

குறித்த அவ் வீதியில் வங்கிகளின் கிளைகள், தனியார் வர்த்தக நிலையங்கள் எனப் பல நிறுவனங்கள் அமைந்திருப்பதனால் மக்கள் நடமாட்டமும் அதிகரித்தே காணப்படுகிறது.

அது மட்டுமன்றி புதிதாக தற்போது அதிகரித்துள்ள நடைபாதை வியாபார நடவடிக்கை மற்றும் வீதிச் சோதிடர்களும் இந்த வீதியில் அதிகரித்துள்ளமையால் அதிகரித்த மக்கள் நடமாட்டமும் இருக்கின்றது.



எனவே இந்த வீதியினை செப்பனிட்டு போக்குவரத்தினை நெறிப்படுத்துவதன் மூலம் மின்சார நிலைய வீதி, காங்கேசன்துறை வீதி ஆகியவற்றில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க முடியும் எனப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இடையூறின்றி மக்கள் பயணிக்க நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் தரப்பிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(50-14)

## நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடும் பணி

வடமராட்சி, நவ.19

கரவெட்டிப் பகுதியில் நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரை இடும்பணி இன்று வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

வடமராட்சி தெற்கு, மேற்கு (கரவெட்டி) பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெறும் நிறுவைகள், அளவைகளுக்கான முத்திரை இடும்பணி இடம்பெறுவதால் வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகள் மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தத்தமது நிறுவைகள், அளவைகள் கருவிகளுக்கு முத்திரை இட்டுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகும் முத்திரை இடும் பணி நடைபெறும் தினங்கள் வருமாறு:

நாளை வெள்ளிக்கிழமை, 23ஆம் திகதி திங்கட்கிழமை, 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 26ஆம் திகதி வியாழக்கிழமை. குறித்த தினங்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒருமணி வரையுமே நிறுவைகள், அளவைகள் கருவிகளுக்கு முத்திரை இடும் பணி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50-236)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## கௌரவிப்பு நிகழ்வு

வடமராட்சி,நவ.19

மேலைப் புலோலி சதாவதானி முன்பள்ளி ஆசிரியர் செல்வி சகுந்தலாதேவி கணபதிப்பிள்ளையின் நீண்டகால அர்ப்பணிப்புமிக்க சிறப்பான சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

சைவப்பிரகாச வித்தியாலய மண்டபத்தில் சதாவதானி சனசமூக நிலையத் தலைவர் இ.குகநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் திருமதி ஜெயலட்சுமி இராசநாயகம் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியத் தலைவர் எஸ்.ஜே.செல்வராஜா, வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (50-236)

### சமய சந்நிதிகளில்

வடமராட்சி,நவ.19

தும்பளை சக்தி அம்மன் கோயில் மணவாளக் கோல விழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனை ஒட்டி சங்காபிஷேசம் இடம் பெற்று சுவாமி வீதி உலா வருவார் (203-236)

* * *

யாழ்ப்பாணம், நவ.19

யாழ்ப்பண்ணை, மணிக்கூட்டு வீதி அரசம் விநாயகப் பெருமான் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு யாகபூசை, விசேட அபிஷேகம் என்பன நடைபெறும்.

நாளை மறுதினம் சனிக்கிழமை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வும் நடைபெறும். (50-204)

* * *

யாழ்ப்பாணம்,நவ.19

மூளாய் ஹரிகரப் பெருமாள் ஆலய அஷ்டோத்திரசத சங்காபிஷேக நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு சுவாமி திருவீதியுலா வருதலும் இடம் பெறும். (50-204)

## மணல் பெற விரும்புவோர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,நவ.19

கோப்பாய் மத்தி கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்டவர்களில் மணல் பெறுவதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கட்டடம் அமைக்கப்படும் காணி உறுதி, புதிய கட்டடமாயின் அதன் வரைபடம், அனுமதி பெற்ற உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்ட கடிதம் ஆகியவற்றைக் கொண்டு வரும்படி அப்பகுதி கிராம சேவகர் அறிவித்துள்ளார்.

இதேவேளை ஒரு தடவைக்கு மேல் மணலினைப் பெறுவதாயின் முன்பு பெற்ற அனுமதிப்பத்திரத்தைக் கொண்டு வர வேண்டும் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (201-15)

## கணனி வன் பொருள் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,நவ.19

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் கீழ் யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு கணனி வன்பொருள் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் கல்வி கற்றவர்களாகவும் விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16-35 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்றும், தகுதி உடையவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை 'மாவட்ட முகாமையாளர், NAITA, இல 7, கோயில் வீதி,யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 30.11.2009க்குமுன் அனுப்பி வைக்குமாறும் மாவட்ட முகாமையாளர் கேட்டுள்ளார். (50-10)



மீசாலை ரயில் நிலையத்துக்கு முன்பாக சாவகச்சேரி நகரசபையால் நிர்மாணிக்கப்பட்ட பொது நூலகத்தில் மீசாலைக் கிளைக் கட்டடத் திறப்பு விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைத்து வரப்படுவதையும் அமைச்சர் கட்டடத்தை [illegible] திறந்து வைப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். முன்பள்ளிச் சிறார் ஒருவருக்கு அமைச்சர் பரிசில் வழங்குவதையும் உள்ளூராட்சி உதவி [illegible] உரையாற்றுவதையும் அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்டோரை இறுதிப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக இலச்சினை சிறப்புக்காக பூகோள மற்றும் உள்ளூர் விருதுகளை வென்றுள்ளது செலிங்கோ லைஃப் நிறுவனம்

இலங்கையின் செலிங்கோ லை.ஃப் நிறுவனம் உலகளாவிய அரங்கில் வர்த்தக இலச்சினைக்கான தலைமைத்துவ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. கூட்டாண்மை இலச்சினையில் இந்த நிறுவனம் கொண்டுள்ள ஆளுமைக்கு கிடைத்த அங்கீகாரமாக இது கருதப்படுகின்றது. இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM) உள்ளூர் மட்டத்தில் இதே விருதை வழங்கி செலிங்கோ லை.ஃப்பை கௌரவப்படுத்திய ஒரு சில தினங்களில் இந்த சர்வதேச விருதும் கிடைத்துள்ளது.



உலக வர்த்தக இலச்சினை காங்கிரஸ் (World Brand Congress) மும்பாய் நகரில் இந்த மாதம் 4ஆம் திகதி புதன்கிழமை தாஜ் லேணட்ஸ் என்ட் இல் நடத்திய மாபெரும் கணகவர் விழாவின்போது 2009ஆம் ஆண்டுக்கான உலகளாவிய வர்த்தக இலச்சினை விருது இலங்கையில் காப்புறுதித்துறையில் தலைமை தாங்கும் நிறுவனமான செலிங்கோ லை.ஃப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுமார் ஒருவாரத்துக்கு முன் SLIM நடத்திய வர்த்தக இலச்சினை விருதுவழங்கும் விழாவில் இவ்வாண்டுக்கான சிறந்த சேவைத்துறைக்கான விருது வழங்கும் பிரிவில் செலிங்கோ லை.ஃப்புக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது. இந்தப்பிரிவில் விருதுவழங்கி கௌரவிக்கப்பட்ட ஒரேயொரு காப்புறுதி நிறுவனம் இதுவாகும்.

உலக வர்த்தக இலச்சினை காங்கிரஸால் வழங்கப்பட்ட விருதானது உலகம் முழுவதும் உள்ள மிகவும் வெற்றிகரமான வர்த்தக இலச்சினைகள் மத்தியில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் மிகப்பெரிய தனிப்பெரும் விருதாகும். இந்த விழாவானது சகல பிரிவுகளையும் சேர்ந்த தலைமை நிறுவனங்கள் ஒன்றுகூடும் ஒரு அமர்வாகும். இவ்வாண்டுக்கான விருதுவழங்கல் தொனிப்பொருளானது "BRANDS-Re:Charge; Innovate; Re:Engage in Today's Times" .என்பதாகும்.

"செலிங்கோ லை.ஃப்புக்கு இது உண்மையிலேயே மிகவும் மறக்கமுடியத ஒரு சாதனையாகும்" என்று கம்பனியின் பிரதித்தலைவர் ஆர்.ரெங்கநாதன் கூறினார். "இவ்வாண்டின் வர்த்தக இலச்சினையை வென்றவர்கள் மற்றும் இலங்கையில் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் சேவைத்துறை விருதை வென்றவர்கள் என்றவகைகளில் எமது வர்த்தக இலச்சினை மேம்பாட்டுக்கான 3ஆம் தரப்பு அங்கீகாரத்தை நாம் பெரிதும் மதிக்கின்றோம். குறிப்பாக Word Brand Congress போன்ற கீர்த்திமிக்க சர்வதேச மட்டத்தில் இத்தகைய விருது கிடைக்கின்றபொழுது நாம அதைப் பெரிதும் வரவேற்கின்றோம்"

"கடந்த காலங்களில் கம்பனி எதிர்நோக்கியிருந்த சவால்களின் மத்தியில் இத்தகைய விருதுகள் மிகவும் சிறப்புமிக்கவையாகவும் கருதப்படுகின்றன". என்று அவர் மேலும் சொன்னார்.

மும்பை நகரில் இடம்பெற்ற இந்த விருது வழங்கும் விழாவில் கலந்துகொணட கம்பனியின் சந்தைபபடுத்தல் பிரிவின் உதவிப்பொது முகாமையாளர் சமித ஹேமச்சந்திர மற்றும் வர்த்தக இலச்சினை முகாமையாளர் தில்ஷான் பெரேரா ஆகியோர் கம்பனி சார்பாக விருதைப் பெற்றுக் கொண்டனர்.

செலிங்கோ லை.ஃப் இன் சந்தைப்படுத்தல் பிரிவைப் பாராட்டி கருத்து வெளியிட்ட நிறுவனத்தின் பிரதிப்பிரதம பணிப்பாளர் துஷார ரண சிங்க "நிதித்துறை சேவை நிறுவனங்கள் மீதான நம்பிக்கைகள் 2008ஆம் ஆண்டில் கணிசமாகச் சரிந்து வந்த நிலையில் மற்றும் பணவீக்கம் காரணமாக வருமானத் துறை எதிர்நோக்கிய சிக்கல்களின் மத்தியிலும், நாட்டில் மோதல்கள் உச்சகட்டத்தை அடைந்திருந்த நிலையிலும் செலிங்கோ லை.ஃப் நிறுவனமானது 20% த்துக்கும் அதிகமான வளர்ச்சியைக் கண்டிருந்தது. இது இந்தத்துறையில் எட்டப்பட்ட சராசரி வளர்ச்சிவீதத்தை விட 7% அதிகமானதாகும் செலிங்கோ லை.ஃப்பின் இலச்சினை உறுதியை அளவீடு செய்வதற்கு இது மிகச் சிறந்த ஒரு எடுகோளாக அமைந்திருந்தது" என்று கூறினார்.

செலிங்கோ லை.ஃப்பின் சந்தைப்பிரிவு தலைமைத்துவ உரிமை கோரலை உறுதி செய்யும் வகையில் இலங்கைக் காப்புறுதிச் சபையின் 2008ஆம்ஆண்டு வருடாந்த அறிக்கை அமைந்துள்ளது. இலங்கையின் நீண்டகால (ஆயுள்) காப்புறுதிப்பிரிவில் வருடாந்த வருமானம் 13.9% மாக அதிகரித்து ரூபா.23.613 பில்லியனாக அமைந்துள்ளது, செலிங்கோ லை.ஃப்பின் சந்தா வருமானம் 8.257 பில்லியன் ரூபாவாகும். இது சந்தையில் 34.97 சதவீத பிரதிநித்துவத்தைக் கொண்டுள்ளது. மேலும் இந்த அறிக்கையில் உறுதிசெய்யப்பட்டுள்ள விடயமானது செலிங்கோ லை.ஃப் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் 20.6% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது என்பதாகும். மேலும் காப்புறுதித் துறையில் கணிசமான அளவு சந்தைப் பங்கைக்கொண்டுள்ள நிறுவனமாகவும் இது காணப்படுகின்றது என அந்த அறிக்கை மேலும் சுட்டிக்காட்டுகின்றது.

இதில் கவனிக்கப்படவேண்டிய மற்றொரு முக்கிய விடயம் செலிங்கோ லை.ஃப்ஆனது அதன் கடன் தீர்வு எல்லையை சட்டப்படி வேண்டப்படும் தொகையைவிட ஐந்துமடங்கு அதிகமாக கொண்டுள்ள நிலையிலேயே இந்த சாதனைகள் அனைத்தையும் எட்டியுள்ளது என்று திரு.ரெங்கநாதன் கூறினார்.

செலிங்கோ லை.ஃப்பின் பொனஸ் கொடுப்பனவுச் சாதனை அதன் தலைசிறந்த முகாமைத்துவத்தை பிரதிபலிக்கின்றது.

ஆயுள் காப்புறுதித்துறை தலைவர்களான செலிங்கோ லை.ஃப் காப்புறுதிநிறுவனம் அண்மையில் மூன்று லட்சத்திற்கும் அதிகமான தனது காப்புறுதித்தாரர்களுக்கு 1.4பில்லியன் ரூபாவை வருடாந்த போனஸ் கொடுப்பனவாக வழங்கப்போவதாக அறிவித்துள்ளது. இதன் முக்கியத்துவம் குறித்து நிறுவனத்தின் பிரதித்தலைவர் ஆர்.ரெங்கநாதன் இந்த நேர்காணலில் விளக்கமளிக்கிறார்.

**கே: பொருளாதார வீழ்ச்சி காரணமாக பல நிறுவனங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்மைகளை வழங்க சிரமப்படும் இவ்வேளையில் செலிங்கோ ஆயுள்காப்புறுதி நிறுவனம் முன்னொருபோதும் இல்லாத அளவுககு போனஸ் கொடுப்பனவை அறிவித்துள்ளது. இதை எவ்வாறு விளக்குவீர்கள்?**

ப: பொருளாதார வீழ்ச்சியால் நாங்கள் பாதிக்கப்படவில்லை என்று உரிமை கோரினால் அது தவறானது. எல்லா நிறுவனங்களும் ஏதோ ஒருவகையில் இந்தப்பாதிப்பை சந்தித்துள்ளன .எவ்வாறாயினும் கஷ்டமான காலப்பகுதிகளில்கூட முதலீடுகள் மீதான எமது விவேகமான முகாமைத்துவம் நன்மைகளை ஈட்டித்தந்துள்ளது வாடிக்கையாளர்களுடன் நீண்டகால உறவுகளைக் கொண்டுள்ள கம்பனி என்றவகையில் செலிங்கோ லை.ஃப் நிறுவனம் அதன் சாத்தியமான எல்லா நன்மைகளையும் வாடிக்கையாளருக்கு பகிர்ந்தளிக்க உறுதிபூண்டுள்ளது. 2008ஆம் ஆண்டு அதன் முதலீடுகளுக்கான மீள் வருமானம் 15.48% ஆக உள்ளது. அதேபோல் ஆயுள் நிதியம் மீதான மீள் வருமானம் 12.49வீதமாக அதிகரித்துள்ளது. 2008ஆம் ஆண்டை 8.2பில்லியன் ரூபா சந்தாவருமானத்தோடு நாம் தொடர்ந்து ஐந்தாவது தடவையாக சந்தைத்தலைவர்கள் என்றபெருமையோடு பூர்த்திசெய்துள்ளோம். இவை எல்லாம்தான் இந்த வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த போனஸ் கொடுப்பனவுகளுக்கு காரணங்களாகும்.




**கே: கடந்தஆண்டின் போனஸ் கொடுப்பனவோடு இவ்வாண்டு கொடுப்பனவை எவ்வாறு ஒப்பிடலாம்?**

ப:இவ்வாண்டின் போனஸ் கொடுப்பனவானது 2008டிசம்பர் 31இல் எமது ஆயுள் நிதியத்தின் அசல் பெறுமதியின் அடிப்படையிலானது. இது 2008ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட போனஸ் தொகையைவிட கிட்டத்தட்ட 17% அதிகமானது. ஆனால் இவ்வாண்டு ஒரு புதிய அம்சமும் உள்ளது. போனஸ் சான்றிதழ்களை பெற்றுக்கொள்பவர்களுக்கு சிங்கப்பூர் சென்றுவருவதற்கான ஒருவாய்ப்பு, தொலைக்காட்சிப்பெட்டிகள், DVD உபகரணங்கள், கமராபோன்கள், பிளண்டர்கள் மற்றும் ஆறுதல் பரிசுகள் என்பன உட்பட கவர்ச்சிமிகு பரிசுகளுக்கான வாய்ப்புக்களே அந்தப்புதியவிடயங்களாகும் போனஸ் சான்றிதழ்களை விநியோகிக்கும் எமது பிரதிநிதிகளைச் சந்திக்கும்போது தமது தனிப்பட்ட தகவல்களைச் சீர்செய்து கொள்பவர்களுக்கு இந்தவாய்ப்புக்கள் உள்ளன.

**கே:இந்தப் போனஸைப் பெறும் குதி யாருக்குள்ளது? மேலும் அவர்கள் அதை எவ்வாறு பெறுவார்கள்?**

ப: 2008 டிசம்பர் 31இல் செயற்படத்தக்க நிலையில் உள்ள செலிங்கோ லை.ஃப் காப்புறுதிப்பத்திரங்களைக் கொண்டுள்ள அனைவருக்கும் இந்த வாய்ப்பு உண்டு. இவ்வாண்டு [illegible] பேர்கொண்ட விற்பனைப் படையை வீடுவீடாக அனுப்பி தனிப்பட்ட முறையில் இந்த போனஸ் சான்றிதழ்களை வழங்க நாம் திட்டமிட்டுள்ளோம். மார்ச் நடுப்பகுதியில் இது அரம்பமாகின்றது. வழமையாக போனஸ் சான்றிதழ்கள் தபால்மூலம்தான் அனுப்பப்படுவதுண்டு.

**கே:முதலீட்டு மீள்வருமானம் பற்றி நீங்கள் குறிப்பிட்டீர்கள் கம்பனியின் 21 பில்லியன்ரூபா ஆயுள் நிதிய முதலீடுபற்றி விளக்கமுடியுமா?**

ப: எமது ஆயுள் நிதியத்தின் முதலீட்டு வரிசையானது அரசாங்கப்பிணைகள் (42%) அனுமதியளிக்கப்பட்ட தனியார்வங்கிகள் (17%) அரச வங்கிகள் (15%) காணிகள் (13%) கூட்டாண்மைக்கடன்கள் (7%) ஏனையவை (6%) ஆகும். எமது ஆயுள் நிதியம் தொடர்பான முதலீடுகள் 2000ஆம் ஆண்டின்

## விளம்பர வரணம்

43ஆம் இலக்க காப்புறுதித்தொழில்துறை சட்டத்தின் விதிமுறைகளுக்கும், வழிகாட்டல்களுக்கும் இசைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இது இலங்கைக் காப்புறுதிச் சபையால் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது.

**கே: செலிங்கோ லை.ஃப் வர்த்தகத் துறையில் பதிவுசெய்துள்ள வளர்ச்சிஎன்ன?**

ப: செலிங்கோ ஆயுள் காப்புறுதியின் மொத்தம் பதியப்பட்ட சந்தாவருமானம் 2008இல் 20.6வீதம் அதிகரித்து 8.25 பில்லியன் ரூபாவாக உள்ளது .இது முன்னைய ஆண்டைவிட 1.41பில்லியன் ரூபாவுக்கும் அதிகமானதாகும். ஆயுள் காப்புறுதித்துறைப் பிரிவில் 34 சதவ தத்தை இது கொண்டுள்ளது .கம்பனியின் ஆயுள் நிதியம் இந்தத்துறையில் உள்ளூர் சந்தையில் மிக வேகமாக அதிகரித்து வரும் ஒரு நிதியமாகும். 2008 டிசம்பர் 31இல் இது 21 பில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளது.

**கே:செலிங்கோ லை.ஃப் ஏனைய உறுதியான நிலைகள் எவை?**

ப: எமது கடன் தீர்வு எல்லை அதாவது அனுமதிக்கப்படக்கூடிய சொத்துக்களின் பெறுமதி மற்றும் பொறுப்புக்களுக்கு இடையிலான வித்தியாசம் 2008ஆம் ஆண்டின் சட்ட விதிமுறைகளுக்கு அமைய இருக்க வேண்டிய குறைந்தபட்ச தொகையைவிட ஐந்து மடங்கு அதிகமாக உள்ளது. எல்லா காப்புறுதி நிறுவனங்களும் எல்லா நேரங்களிலும் தமது சட்ட ரீதியான பொறுப்புக்களில் ஐந்து வீதத்துக்குக் குறையாத ஒரு தொகையை கடன தீர்வு எல்லையாகக் கொண்டிருக்கவேண்டும் என்பது விதிமுறையாகும். ஐந்து மடங்கு அதிகமாக உள்ள இந்தத்தொகையானது எமது நிதி ஸ்திரப்பாட்டையும் உரிமைகோரல்கள் அனைத்தையும் எந்தநேரத்திலும் ஈடுசெய்யலாம் என்ற ஆற்றலையும் பிரதிபலிக்கிறது. எமது அசல் பெறுமான மதிப்பீட்டுச்சான்றிதழை உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற வெட்சன் யெட என்ற சுயாதீனமான நிறுவனம் வழங்கியுள்ளது.

**கே: காப்புறுதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு நன்மைகளை அளிக்கும்வகையில் உங்கள் நிறுவனம் அண்மைக் காலத்தில் எடுத்துள்ள நடவடிக்கைகள் எவை?**

ப: செலிங்கோ ஆயுள் குடும்பசவாரி என்ற பெயரில் நாம் ஒரு வியக்கத்தக்க ஊக்குவிப்பை நடத்தினோம் இதன்கீழ் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 20பேரை ஏற்கனவே நாம் சிங்கப்பூருக்கு சகல செலவுகளுடனும்கூடிய ஆடம்பர கப்பல் பயணத்திற்கு அழைத்துச்சென்றுள்ளோம். வெகுவிரைவில் அறுநூறு குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 400 பேரை லெஷர்வேர்ள்ட்டுக்கு ஒருநாள் உல்லாசப்பயணம் அழைத்துச்செல்ல திட்டமிட்டுள்ளோம். இலங்கையில் ஒரு கூட்டாண்மை நிறுவனம் மேற்கொள்ளும் மிகப்பெரிய ஊக்குவிப்புத்திட்டம் இதுவாகும். அத்தோடு உள்ளூர் காப்புறுதித்துறையிலும் இதுவே மிகப்பெரிய ஊக்குவிப்புச் செயற்திட்டமாகும்.



**பாமா புறோமோட்டர்ஸ் நிறுவனம் கடந்த செப்ரெம்பர் மாதம் நடத்திய விளையாட்டு விழாவில் 'அஸ்ரோன்' நிறுவனத்தின் வீரர்கள் பலர் விருதுகளை வென்றனர்.**

**வலைப்பந்தாட்டத்தில் 'அஸ்ரோன்' அணி கேடயத்தை சுவீகரித்ததுடன் சிறந்த பந்து போடுபவர், சிறந்த தடுப்பாளர் விருதுகளையும் வென்றது. அத்துடன் ஆண்களுக்கான தடகளப் போட்டியில் 6 தங்கப்பதக்கங்களையும், விருதுகளையும் பெற்றதுடன் மிக வேகமான வீரன் விருதையும் 'அஸ்ரோன்' வீரர்கள் பெற்றுக் கொண்டனர். அத்துடன் பெண்களுக்கான தடகளப் போட்டிகள், கிரிக்கெட் போட்டி என்பனவற்றிலும் அந்த வீரர்கள் வெற்றிபெற்றனர். வெற்றியீட்டிய 'அஸ்ரோன்' வீரர்கள், வீராங்கனைகளைப் படத்தில் காணலாம்.**

## தாமரைத் தடாகம்

*தீய எண்ணங்களை எப்போதும் உங்களுக்குள் நுழைய விடாதீர்கள். ஒரு தடாகத்தில் தாமரை மலர்ந்திருக்கின்றது. அதே தாடகத்தில் ரத்தத்தை உறிஞ்சும் அட்டை போன்ற பூச்சிகளும் வாழ்கின்றன. தாமரை தண்ணீர் இன்றி வாழாது. அதே போன்று மனித வாழ்க்கையும் அன்பின்றி வாழ முடியாது. ஆகவே உங்களது அன்பான இதயத்தில் வெறுப்பு, கவலை என்ற அட்டைப்பூச்சிகளை வளரும்படி செய்யக்கூடாது. தண்ணீர்ப் பரப்பின் மேல் நீங்கள் படகில் செல்லலாமே தவிர, படகினுள் நீர் நிறைய அனுமதிக்கக்கூடாது. அதுபோல உலகியலான விஷயங்களின் மேல் பற்றுதல் என்கிற நீர், உங்கள் வாழ்க்கைப் படகினுள் நுழைந்து பாழ்படுத்தி விடக்கூடாது.*

*நீங்கள் எல்லாம் அன்பின் திருவடிவம். கடவுள் எங்கும் நிறைந்திருப்பவர். சிலவற்றை தெய்வீகம் எனவும், பிறவற்றை தெய்வீகமற்றவை எனவும் பிரித்துப் பார்த்தல் தவறு. எல்லாமே அதே ஆத்மாவின் பிரதிபலிப்புக்கள்தான். இந்த ஆத்மாவே எல்லோரினுள்ளும் நிறைந்திருக்கின்றது. இந்த ஆத்ம தத்துவமே சூர்ய தத்துவம், இதுவே சத்யதத்துவமும் கூட.*

*ஒருவன் சத்யத்தைப் பின்பற்றினால் பிரேமை என்பது அதன் பிரதிபலிப்பாகிறது. நீங்கள் தெருவில் நடக்கும்போது உங்கள் நிழல் எதன் மேலும் விழலாம். நல்ல தரையிலும் விழலாம். சில கெட்ட சாக்கடை, குப்பை போன்றவற்றிலும் கூட விழலாம். ஆனால் கெட்டவற்றின் மேல் நிழல் விழுந்தால் உங்களுக்கு எதுவும் பாதிப்பு ஏற்படுவதில்லை. நிழல் எதன்மீது விழுகிறது என்றெல்லாம் கவலைப்படாமல் நீ தொடர்ந்து செல்ல வேண்டும். அதேபோல, உன்னுடைய இதயத்தையும் நல்ல உணர்வுகளுடன், எந்தத் தடை வரினும் கவலைப்படாமல் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும். சத்தியத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.*



சுவாமி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கேள்விக்கு என்ன பதில்' போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு

'உதயனில்' வாரந்தோறும் வெளிவரும் 'கேள்விக்கு என்ன பதில்' போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசினை உதயன்- சஞ்சீவி பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் வழங்குவதை முதல் இரண்டு படங்களிலும் உதயன் செய்தி ஆசிரியர் ஞா. குகநாதன் வழங்குவதை ஏனைய படங்களிலும் காணலாம்.




கண்டி வீதி, அரியாலையைச் சேர்ந்த தேவராஜா தனோஜன் பரிசு பெறுவதைக் காணலாம்.




ஏழாலை மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த கு.மகியா பரிசு பெறுவதைக் காணலாம்.




அருளகம் பெண்கள் இல்லம், மருதனார் மடத்தைச் சேர்ந்த செ.ஜெயராஜினி பரிசு பெறுவதைக் காணலாம்.




வாரிவளவு, காரைநகரரைச் சேர்ந்த எஸ்.நிறோஜா பரிசு பெறுவதைக் காணலாம்.

## அறிந்து கொள்ள வேண்டியவை

1) பூமியைக் காட்டிலும் பொறுமை மிக்கது - தாய்மை
2) காற்றை விட வேகம் உள்ளது - மனம்
3) பிறந்ததும் அசைவின்றி இருப்பது - முட்டை
4) வேகத்தால் வளர்ச்சி பெறுவது - நதி
5) வாழ்க்கையில் பெரும் செல்வம் -நோயின்மை
6) இன்சொல்லால் வளர்வது - அன்பு
7) தீராத நோய் - பேராசை
8) உருகும் உள்ளத்தில் உதிப்பது -அன்பு
9)இறுகும் இதயத்தில்இருப்பது -அகந்தை
10) ஒற்றுமையால் வருவது - இன்பம்

தி.தர்சன்,
தரம்-9,
யா/ உடுப்பிட்டி அ.மி.க.

## சிரிப்பு; அது பலரகம்

கண் பார்த்து சிரிப்பவனோ காரியவாதி
கற்பனையில் சிரித்திடுவான் கவிஞன்
மோகத்தில் சிரிப்பவனோ காமவெறியன்
தெரிந்தது போல் சிரித்திடுவான் பசப்புக்காரன்
இடம் தருணம் கண்டு சிரிப்பவனோ படுஎத்தன்
ஓயாது சிரிப்பவன் ஒரு பைத்தியக்காரன்
அளவோடு சிரிப்பானவன் அறிஞன்
தன்நிலை மறந்து சிரிப்பவன் காதல்வசப்பட்டவன்
எள்ளி நகைசெய்பவனோ கையாலாகாதவன்
நம் துயர் கண்டு சிரிப்பவனோ வஞ்சகன்
துன்பத்திலும் சிரித்திடுவான் அவன் நிறை மனிதன்.

சு.தர்ஷனா,
2010 கலை,
யா/பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை.

## கேள்விக்கு என்ன பதில்— 47இல் பரிசு பெறுவோர்

01) ந.செல்வகுமார்,
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.
02) கி.நிர்மலா,
சத்திரந்தை, களபூமி, காரைநகர்.
03) மகேஸ்வரன் சங்கவி,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

**கேள்விக்கு என்ன பதில்?-47இன் சரியான விடை**
**சுவிற்சர்லாந்து.**

## கேள்விக்கு என்ன பதில்? - 49

இந்தியாவில் முதன் முறையாக வந்திறங்கிய வஸ்கொடகாமா உதிர்த்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தைகள் எவை? (சரியான விடையை 26.11.2009 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்).

## சிந்திக்கச் சில வரிகள்...

* கிடைக்காததை நினைத்து ஏங்காதே
கிடைத்தவற்றை எண்ணி திருப்திப்படு
* எதிரிக்கு உன் பலத்தைக் காட்டு
ஆனால் பலவீனத்தைக் காட்டாதே
* விழுவது வெட்கம் அல்ல,
விழுந்து கிடப்பதுதான் வெட்கம்
* ஒருபோதும் போராடாமலே இருப்பதை விட,
போராடித் தோற்பது மேலானது
* கவலைகள் உன்னில் வாழலா[illegible]
கவலைக்குள் நீ வாழாதே
* எதிர்காலத்தை திட்டமிடுங்கள்
ஏனெனில் உங்கள் வாழ்க்கையில்
மீதமுள்ள காலம் அதுதான்
* பிறரிடத்திலிருந்து நீ என்ன எதிர்பார்க்கிறாயோ
அதையே நீ பிறருக்குக் கொடு
* தூக்கி எறியும் குதிரையை விட
சுமந்து செல்லும் கழுதை மேலானது.



அ.யூ.[illegible],
ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி,
புத்தூர்.

## நீ வானில் உலா வரும் நிலா

உனக்கு அணிவிக்க என்னிடம்
தங்க மோதிரம் இல்லை - ஆனால்
தங்கத்தைவிட உயர்ந்த
தமிழ் மொழியோ இருக்கிறது
எப்போதும் என் கவிதைகள் உனக்காய்,
வண்ணமயிலாய் வடிவெடுத்து நிற்கும்...!
நிலா பவனிவரும் வானில்
நட்சத்திரங்கள் அழகுதரா,
உன்னைக் காணும் கணங்களில்
என் கவலைகள் யாவும் பறந்தோடும்.

சௌ.கீர்த்திகா,
சிவன் கோயில் வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

## இளவல்கள் வட்டம்

### வேண்டும்

கற்றிட வேண்டும்
கல்வியை
செய்திட வேண்டும்
உதவியை
துரத்திட வேண்டும்
சோம்பலை
கூறிட வேண்டும்
உண்மையை
நிறுத்திட வேண்டும்
கெட்டவரின் நட்பை
இரசித்திட வேண்டும்
இயற்கையை
நாம் என்றும் எழுதிட வேண்டும்
கவிதையை...!

சிவகுமார் அபர்ணா,
தரம்-10,
இளையபாணன் அ.த.க. வித்தியாலயம்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-....................................
முகவரி :-....................................
:-....................................
.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## இந்த வார வரலாறு

**நவம்பர் 13**



1916 ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி முதலாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது.

**நவம்பர் 14**

சோவியத் கொம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து 'ட்ரொட்ஸ்கி' யும், 'ஸீனோவீவ்' வும் 1927 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி வெளியேற்றப்பட்டனர்.

**நவம்பர் 15**



சர்வதேசப் புகழ்பெற்ற 'ஸ்பைஸ் கேர்ள்ஸ்' என்னும் பொப் இசைக் குழுவினர் 1997ஆம் ஆண்டு தம்முடைய முதலாவது இசைத் தொகுப்பான 'ஸ்பைஸ் கேர்ள்ஸ்' தொகுப்பை வெளியிட்டனர்.

**நவம்பர் 16**

அமெரிக்க நாடகத்துறைக்கு வலுவூட்டிய பிரபல நாடகாசிரியரான 'ஜோர்ஜ் எஸ்.கௌப்மன்' என்பவர் 1889 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி பிறந்தார்.



**நவம்பர் 17**



1988 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி பாகிஸ்தானின் பிரதமராக 'பெனாஸீர் பூட்டோ' தெரிவு செய்யப் பட்டார். இதன் மூலம் இஸ்லாமிய நாடொன்றில் தெரிவு செய்யப்பட்ட முதல் பெண்பிரதமர் என்ற பெருமையை இவர் பெற்றார்.

**நவம்பர் 18**

1626 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் திகதி கிறிஸ்தவ மதத்தின் அதியுயர் கௌரவத்தைப் பெற்ற 'சென்.பீட்டர்' அற்புதராக ரோமாபுரியில் பிரகடனப் படுத்தப்பட்டார்.



**நவம்பர் 19**



இந்திய அரசியலில் ஒரு மகத்தான எழுச்சியை உண்டு பண்ணியவரான இந்திராகாந்தி 1917 ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் திகதி பிறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மாவட்ட வலம் - யாழ்ப்பாணம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## வணிகக் கல்வியும் கணக்கீடும் I — 81-T-I

## 18.11.2009 வெளியீட்டின் தொடர்ச்சி.......

36. பின்வருவனவற்றில் எது கூடிய பாதுகாப்புடைய குறுக்குக் கோடிடல்?
1) 2) 3) 4)




37. பணத்தின் தொழிற்பாடாக கருதமுடியாதது?
1) பரிமாற்ற ஊடகமாக தொழிற்படல்.
2) பெறுமானத்திரட்டாக தொழிற்படல்.
3) பிற்போடப்பட்ட கொடுப்பனவாக தொழிற்படல்.
4) வருமானம் ஈட்டுவதாக தொழிற்படல்.

38. சட்ட ஆளுமையுடைய நிறுவனமாக கருதப்படுவது,
1) சங்கர் ஸ்ரோர்ஸ். 2) சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்.
3) பெப்சி (PVT) லமிட்டட். 4) தம்பையா அன்கோ.

39. புதிய கம்பனிகள் பதிவு செய்யப்படும் சட்டம் எது?
1) 2007ஆம் 7இல கம்பனிச்சட்டம். 2) 1890 பங்குடைமை கட்டளைச்சட்டம்.
3) 1990ஆம் ஆண்டு வியாபார பெயர் பதிவு சட்டம்.
4) 1982ஆம் ஆண்டு கம்பனிச்சட்டம்.

40. கம்பனிகள் உருவாக்கத்திற்கு ஆகக்குறைந்த அங்கத்துவர் எண்ணிக்கை எவ்வளவு?
1) இரண்டு பேர். 2) ஐந்து பேர். 3) ஏழு பேர். 4) ஒருவர்.

## வணிகக் கல்வியும் கணக்கீடும் II — 81-T-II

* **முதலாம் வினா உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

சாலியா என்பவர் பலசரக்கு வணிகம் நடத்தி வருகின்றார் இவர் தனது நிறுவனத்தின் பெயரை சாலியா ஸ்ரோர்ஸ் என அழைத்துக்கொண்டார். இவர் தனது கணக்குகளை ஒவ்வொரு 31/3 இலும் நிறைவு செய்கின்றார். இவர் தனது வர்த்தக செயற்பாட்டை விஸ்தரிப்பதற்கு பார ஊர்தி ஒன்றை பயன்படுத்துவதுடன் வங்கி மூலம் தனது கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்றார். அத்துடன் எதிர்பாராத அபாயங்களை எதிர்கொள்ள காப்புறுதிக் கம்பனியிடம் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை பெற்றுக்கொண்டுள்ளார். 31.03.09இல் பின்வரும் மீதிகளை முன்வைக்கின்றார்.

| | | | |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
| கட்டடம் | 200,000 | 5% வங்கிக்கடன் | 80,000 |
| மோட்டார்வான் | 150,000 | கடன்கொடுநர் | 28,000 |
| 01.04.08இல் இருப்பு | 32,000 | | |
| கடன்பட்டோர் | 36,000 | வரவுகள் | |
| வங்கி | 135,300 | விற்பனை | 178,000 |
| | | பெற்றகழிவு | 3,500 |
| | | பெற்றவாடகை | 2,800 |
| செலவுகள் | | மூலதனம் | |
| கொள்வனவு | 124,800 | மூலதனம் | 400,000 |
| சமம்எபளம் | 4,800 | பற்று | 5,000 |
| மின்சாரம் | 3,200 | | |
| காப்புறுதி | 4,500 | | |
| சுமைஇறக்கல் கட்டணம் | 1,500 | | |
| விளம்பரம் | 2000 | | |
| தொலைபேசி கட்டணம் | 3,200 | | |

**மேலதிக தகவல்கள்:**
1) 31.08.09இல் இருப்பு ரூபா 38,000 ஆகும்.
2) 31.03.09இல் செலுத்தவேண்டிய காப்புறுதிக்கட்டணம் ரூபா 2500
3) மின்சாரக் கட்டணத்தில் ரூபா 1,200 அடுத்துவரும் காலப்பகுதிக்குரியது.
4) கடன்பட்டோரில் 5% அறவிடமுடியாத கடனாக பதிவழிக்குக.
5) கட்டடத்திற்கு 5%, மோட்டாருக்கு 8% பெறுமானத் தேய்விடுக.
6) உடைமையாளர் ரூபா 3,000 பண்டங்களை சொந்த தேவைக்கு பற்றினார்.
7) வங்கிக்கடனுக்குரிய வட்டி இதுவரை செலுத்தப்படவில்லை.

**பின்வருவனவற்றிற்கு விடை தருக.**
01) சாலியா நிறுவனம் எந்த வகையைச் சேர்ந்த நிறுவனம்?
02) இந்நிறுவனம் பதிவு செய்யப்படவேண்டியது அவசியமா?
03) பதிவுசெய்யப்பட நேரின் எந்தச் சட்டத்தின் கீழ் எங்கே பதிவு செய்தல் வேண்டும்?
04) மேலே பயன்படுத்திய வர்த்தகம் என்ற சொல்லின் விளக்கம் யாது?
05) இந் நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் துணைநிலைச் சேவைகள் 5 தருக.
06) 31.03.09 இல் பரீட்சை மீதியை தயாரிக்குக.
07) 31.03.09 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மொத்த இலாபத்தைக் கணிப்பிடுக.
08) 31.0.09 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறியலாபத்தைக் கணிக்குக.
09) 31.03.09 இல் நடைமுறையல்லாச் சொத்தின் ஏட்டுப்பெறுமதி யாது?
10) 31.03.09 இல் இறுதி மூலதனம் யாது?

02. பாரி நிறுவனம் தனது சிறுசெலவுக் கொடுக்கல்வாங்கல்களுக்கு சில்லறைக் காசேட்டினை பின்பற்றி வருகின்றது. 31.10.09இல் முடிவடைந்த மாதத்திற்கான சில்லறை கொடுக்கல்வாங்கல் விவரம் பின்வருமாறு:-

| | |
|---|---|
| 01-10 சில்லறை காசு மீதி 950 | 15-10 பிரயாணம் 70/= |
| 03-10 காகிதாதி 80/= | 18-10 கட.கொடு வழங்கியது 110 /= |
| 05-10 எழுதுபொருள் 40/= | 21-10 பஸ் கட்டணம் 55/= |
| 10-10 சிற்றுண்டி 60/= | 24-10 மென்பானம் 35/= |
| 13-10 தேநீர் 30/= | 28-10 கம்போத்தல் 15/= |
| | 30-10 அழிறப்பர் 10/= |
| | 31-10 கட்டுநிதி மீள நிரப்பப்பட்டது. |

**வேண்டப்படுபவை:-**
1) சில்லறைக் காசேடு என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?
2) சில்லறைக் காசேட்டின் பயன்கள் 3 தருக.
3) வசக்கட்டு நிதி முறைமை என்பதிலிருந்து நீர் விளங்குவது யாது?
4) சில்லறை செலவினத்திற்குரிய இரட்டைப்பதிவு யாது?
5) கட்டுநிதி மீள் நிரப்பலுக்கான இரட்டைப்பதிவு யாது?
6) ஒக்டோபர் மாத சில்லறை காசேட்டை தயாரிக்குக.

03. ராமனும், வீமனும் இரண்டு வியாபாரங்களை நடத்தி வருகின்றனர். ராமனது பரீட்சை மீதி 31.12.08இல் சமப்படாதபோது வீமனது பரீட்சை மீதி சமநிலையில் காணப்பட்டது. ராமன் வீமனிடம் சென்ற தனது பரீட்சை மீதியின் வேறுபாட்டுத் தொகையை எடுத்துக்கூறியதுடன் இதற்கான காரணங்களையும் முன்வைத்தார் அவரால் முன்வைக்கப்பட்ட காரணங்கள்.
1) விற்பனை தினசேரி ரூபா 1,000ஆல் மிகையாக கூட்டப்பட்டது.
2) மின்சாரத்திற்கு வரையப்பட்ட ரூபா2500 காசோலை மின்சாரக்கணக்கில் ரூபா 500 என பதிவிடப்பட்டது.
3) பண்டக் கொள்வனவு ரூபா 10,000 பொறிக்கணக்கிற்கு வரவிடப்பட்டது.
4) அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்பட்ட ரூபா 1500 அறிவிடமுடியாக் கடன் கணக்கில் இரு தடவை பதியப்பட்டது.
5) தீர்க்கப்படாத சம்பளம் ரூபா 2,000 ஏடுகளில் பதியப்படவில்லை.

**வேண்டப்படுபவை:-**
1) வீமனது பரீட்சை மீதி சமப்படுவதன் மூலம் அவரது நிறுவனத்தின் கணக்குகளில் பிழை இல்லை என்ற முடிவுக்கு வருவீரா?
2) மேலே தரப்பட்ட பிழைகளில் பரீட்சை மீதியின் சமத்தன்மையை பாதிக்காத வழுக்கல் இரண்டு தருக.
3) தொங்கல் கணக்கு என்பதிலிருந்து நீர் விளங்குவ்து என்ன?
4) ராமனது பரீட்சை மீதியின் வேறுபாட்டுத்தொகை எவ்வளவு?
5) மேற்படி பிழைகளை திருத்துவதற்கான சரியான நாட்குறிப்பு பதிவுகளை தருக.

04. தீவகப் பகுதியில் வசிக்கும் திருமாறன் தொழில் தேடும் ஒருவர். தென்பகுதி ஒன்றின் உணவு விடுதியில் சமையலாளராக பணியாற்றிய இவர் 83 இனக் கலவரத்தினால் தொழில் வாய்ப்பை இழந்தவர். இவர் தற்போது வசிக்கும் பகுதியில் எதுவித உணவு விடுதியும் இல்லாத காரணத்தால் பல கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள உணவு விடுதியையே இந்த ஊர் மக்கள் பயன்படுத்துவதுடன் இவ் ஊரில் உள்ள பாடசாலைக்கு வரும் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். மேலும் இவ் ஊரில் பெருமளவான மக்கள் அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். 01.10.04இல் அவர் தனது சொந்த சேமிப்பில் இருந்த ரூபா 100,000.00 பயன்படுத்தி மகாலா விலாஸ் என்ற பெயரில் ஒரு வணிகத்தை தொடங்கினார்.
31.10.09 இல் இவரது நிறுவனத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல் விவரம் வருமாறு:-
1) நிறுவனத்திற்கு தேவையான தளபாடங்களை ரூபா 15,000 பெறுமதியில் கடனுக்கு கொள்வனவு செய்தார்.
2) உணவு உற்பத்திக்கு தேவையான பண்டங்களை ரூபா 24,000 விலையில் கொள்வனவு செய்தார்.
3) ரூபா 25,000 பெறுமதியான பண்டங்களை ரூபா 36,000 இற்கு விற்பனை செய்தார்.
4) ஒக்டோபர் மாத வாடகைப்பணம் ரூபா 15,000 செலுத்தப்பட்டது.
5) தளபாடத்தின் ஒக்டோபர் மாத பெறுமானத்தேய்வு ரூபா 800.
6) ஒக்டோபர் மாத ஊழியர் சம்பளம் ரூபா 4,000 நவம்பரில் செலுத்தப்பட்டது.

**வேண்டப்படுபவை:-**
1) உணவு விடுதியை அமைப்பதற்கு ஏதுவான புறக்காரணிகள் எவை?
2) 01.10.09இல் உள்ளவாறான நிலைமையை கணக்கீட்டு சமன்பாட்டில் பதிந்து காட்டுக.
3) கணக்கீட்டு சமன்பாட்டின் மாற்றங்கள் 4 தருக.
4) மேலே தரப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை கீழ்வரும் சமன்பாட்டில் பதிவு செய்து காட்டு தளபாடம் + இருப்பு + காசு = மூலதனம் + (வருமானம் - செலவு) + சென்மதி.
5) ஒக்டோபர் மாத தேறிய இலாபம் எவ்வளவு?

05. சமூகத்தில் பெண்கள் மத்தியில் நற்பெயரை பெற்றுள்ள மல்லிகா, பெண்கள் அபிவிருத்தியை குறிக்கோளாகக் கொண்டு பெண்கள் அபிவிருத்திச் சங்கம் (WDA) எனும் அமைப்பை உருவாக்கத் திட்டமிட்டார். அத்துடன் இது பெண்கள் அபிவிருத்திச் செயற்பாடுகளை மையமாகக் கொண்டு ஒரு தர்ம செயற்பாடுகளுக்கான கம்பனி அமைப்பு ஒன்றாக பதிவுசெய்யத் திட்டமிட்டதுடன் இதில் அங்கத்தவர்களாக 40 பேரை சேர்த்துக்கொண்டதுடன் ஒவ்வொருவரிடமும் வருடாந்த சந்தாவாக ரூபா 200 செலுத்துமாறு கோரப்பட்டார். 31.03.2009 இல் முடிவடைந்த முதல் நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு:-

| | |
|---|---|
| பெற்ற நன்கொடை | 5,000 |
| கலை நிகழ்ச்சி செலவு | 1,100 |
| கலை நிகழ்ச்சி வருமானம் | 3,500 |
| கழக கட்டட வாடகை | 1,500 |
| மின்சாரம் | 800 |
| பெற்ற சந்தா | ? |
| பெண்கள் விழிப்புணர்வு கருத்தரங்கு செலவு | 1,000 |

**மேலதிக தகவல்கள்:**

| | | |
|---|---|---|
| 1) சந்தா | 10.04.2008 | 31.03.2009 |
| வருமதி சந்தா | 500 | 1,000 |
| முற்பண சந்தா | 800 | 500 |

2) மின்சாரத்தில் ரூபா 200 சென்மதியாகவுள்ளது.
3) கட்டட வாடகையில் ரூபா 500 அடுத்துவரும் நிதியாண்டுக்குரியது.

**தயாரிக்குக:**
01) WDA அமைப்பு எந்தச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படல் வேண்டும்?
02) இச்சங்கம் நிதி திரட்டிய வழிகள் இரண்டு தருக.
03) 31.03.2009 இல் முடிவடைந்த வருடத்திற்கான சந்தாக்கணக்கு.
04) 31.03.2009 இல் முடிவடைந்த வருடத்திற்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு.
05) 31.03.2009 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானச் செலவுக் கணக்கு

06. வங்கியில் நடைமுறைக்கணக்கை வைத்திருக்கும் ஆரூரன் என்பவர் தனது 2009.03.31 இல் முடி வடைந்த மாதத்திற்கான காசேட்டு வங்கி மீதி ரூபா 46,500 வெளிப்படுத்தியதாகவும் இம்மாதத்திற்கான வங்கிக்கூற்று மீதி ரூபா 48,000 வெளிப்படுத்தியதாகவும் ஆதங்கப்படுகின்றார். இவ் வேறுபாட்டிற்குக் காரணத்தைத் தனது வீட்டிற்கு அருகாமையில் வணிகப்பாடத்தைக் கற்கும் தரம் 11 மாணவன் ராமிடம் தனது காசுப்புத்தகத்தையும் தான் பெற்றுக்கொண்ட வங்கிக்கூற்றையும் ஒப்படைத்து விளக்கம் கோரினார். அம்மாணவன் இரண்டையும் ஒப்பீடு செய்து வேறுபாட்டிற்கான பின்வரும் காரணங்களைப் பட்டியல்படுத்தினான்.

மறுபக்கம் பார்க்குக.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேறிய மக்களின் தேவைகளை நிறைவேற்ற ஆய்வுக் குழு அமைப்பு!

## அமைச்சர் ரிஷாத் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 19

வவுனியா நலன்புரிமுகாம்களில் தங்கியுள்ள பொதுமக்கள் அனைவரும் மீள்குடியேற்றப்பட்ட பின்னர் அவர்கள் தொடர்பான ஆய்வொன்றை நடத்தி, அதன்மூலம் அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுக்கப்படவுள்ளது - என்று அனர்த்த நிவாரண மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கூட்டத்தொடரின் முதலாவது அமர்வின் வாய்மூல வினாக்களுக்கு விடையளிக்கும் நேரத்தில், இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றம் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.டி.ஏ. ரணவீர பத்திரண கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர்மேலும் கூறியவை வருமாறு -

இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட பின்னர் நாம் முழுமையான ஆய்வொன்றை நடத்தவுள்ளோம். அந்த ஆய்வினை உலக வங்கிக்குச் சமர்ப்பித்து அதன்மூலம் உதவிகளைப் பெற எதிர்பார்த்துள்ளோம்.

மீள்குடியேற்றப்படும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் தலா ரூபா 5000 வழங்கி, அவர்களுக்கென வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்து ரூபா 20,000 ஐ ஆரமப வைப்பாக இட்டு வருகிறோம். இன்னும் சில நாள்களில் மீள்குடியேற்றப் பணிகளை முழுமையாக நிவர்த்தி செய்ய எதிர்பார்க்கிறோம் - என்றார்.

# ஆஸி. கடலில் 41 அகதிகளுடன் படகு: அந்நாட்டுக் கடற்படையினரால் மீட்பு!

கொழும்பு, நவ. 19

41 அகதிகளுடன் சென்ற படகு ஒன்றை ஆஸ்திரேலியக் கடற்படையினர் வடக்கு ஆஸ்திரேலியா அருகே அஷ்மோர் தீவு அருகே மடக்கி தடுத்து நிறுத்தியுள்ளனர்.

அனேகமாக இவர்களும் இலங்கையைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு ஆஸ்திரேலியாவை நோக்கி சென்றுள்ள 43 ஆவது அகதிகள் படகு இது என்பது குறிப்பிடத்தக்கது.

கண்காணிப்பு விமானம் மூலம் இந்தப் படகு வருவது தெரியவந்தது என்றும் இதையடுத்து கடற்படையினர் விரைந்து சென்று தடுத்து நிறுத்தினர் என்றும் கூறப்படுகிறது.

அஷ்மோர் தீவுகளிலிருந்து 90 கடல் மைல் தொலைவில் இந்தப் படகு தடுத்து நிறுத்தப்பட்டது.

அந்தப் படகில் 41 பயணிகளும், 2 ஊழியர்களும் இருக்கின்றனர் என ஆஸ்திரேலியா உள்துறை அமைச்சர் பிரன்டன் ஓகானர் தெரிவித்துள்ளார்.

இவர்களை கிறிஸ்மஸ் தீவுக்குக் கொண்டு சென்று அங்கு உடல் நலப் பரிசோதனை, பாதுகாப்பு சோதனை, அடையாளச் சோதனை ஆகியவை மேற்கொள்ளப்படவுள்ளது.

இவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவில்லை. அனேகமாக இவர்களும் இலங்கையைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கக் கூடும் எனத் தெரிகிறது.

(சி)

# புலிகளின் நிலையை எண்ணி நான் அழுவது யார் காதில் விழப்போகிறது?

## கருணாநிதி உருக்கம்

விடுதலைப் புலிகளின் நிலையை எண்ணிப்பார்த்து நான் மௌனமாக அழுவது யார் காதில் விழப்போகிறது - என்று உருகியுள்ளார் முதல்வர் கருணாநிதி.

அவர் தமிழீழப் போராட்டம் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

வார இதழ் ஒன்றுக்கு இலங்கையின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அளித்துள்ள பேட்டியில், தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முயற்சி நடந்த [illegible]தெல்லாம் அதனைத் தவிர்த்த தோடு, 20[illegible]இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலி[illegible]போது விடுதலைப்புலிகளின் தலை[illegible] பிரபாகரன் தமிழ் மக்களை தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபடச் செய்தார் என்று சொல்லியுள்ளார்.

ரணில் கூறியிருப்பதை கூர்ந்து கவனித்தால் விடுதலைப்புலிகள் போர் தந்திரத்தை எதிர்கால கணிப்போடு கடைபிடிக்காதமைதான் தோல்விக்குக் காரணம் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

விடுதலைப் புலிகள் சார்பாக அவசரப்பட்டு அன்று எடுக்கப்பட்ட அரசியல் முடிவின் விளைவுகள் எப்படி ஆயின? எங்கே போய் முடிந்தன என்பதை எண்ணிப் பார்த்து நான் மௌனமாக அழுவது யார் காதில் விழப்போகிறது.

தமிழர்களின் உயர்வுக்காகப் பாடுபட வேண்டியவர்கள் தமது உயிரை அற்ப ஆயுளில் முடித்துக்கொண்டு போய் விட்டார்களே என்ற ஆதங்கத்தில்தான் நான் இதை எழுதுகிறேன் - என்றுள்ளது.

(சி)

# சரணடைந்த புலி உறுப்பினர்களுக்கு மேலும் 10 புனர்வாழ்வு நிலையங்கள்

## ஆணையாளர் தயா ரத்னாயக்க தகவல்

கொழும்பு, நவ. 19

படையினரிடம் சரணடைந்த மற்றும் மனிதாபிமான நடவடிக்கையின்போது கைதுசெய்யப்பட்ட புலி உறுப்பினர்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கென மேலும் 10 புனர்வாழ்வு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

- இவ்வாறு புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் தயா ரத்னாயக்க தெரிவித்துள்ளார் என இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் தேசிய அபிவிருத்தி தொடர்பான ஊடக மத்திய நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட பணிப்பின்பேரில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நிறுவப்படவுள்ள இப்புனர்வாழ்வு நிலையங்களில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பத்தாயிரம் பேருக்கு புனர்வாழ்வு அளிக்கப்படவுள்ளது.

இதன் முதல்கட்டமாக வவுனியா மெனிக்பாம் பகுதியில் 10 நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இம்மாதம் இவை அமைக்கப்படுவதுடன் மேலும் 10 நிலையங்கள் அடுத்த மாதம் அமைக்கப்படவுள்ளன.

எவ்வாறாயினும் இவர்கள் அனைவருக்கும் உரிய முறையில் புனர்வாழ்வு அளிக்கும் திட்டம் ஜனவரி முதல் ஆரம்பமாகவுள்ளன.

ஒரு வருட காலத்திற்குள் அதனைப் பூர்த்திசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேவைக்கு ஏற்ப புனர்வாழ்வுக்கான காலத்தை நீடிப்பது குறித்து முடிவு எடுக்கப்படும்.

புனர்வாழ்வு அளிக்கப்பட உள்ளவர்களுள் 1,854 பெண் உறுப்பினர்களும் 566 பாடசாலை மாணவர்களும் அடங்குகின்றனர். பாடசாலை செல்லும் மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

கல்வியைத் தொடரத் தகுதியான 273 மாணவர்கள் இலங்கையிலே மிகவும் பிரபல்யம் வாய்ந்த இரத்மலானை இந்துக் கல்லூரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களுக்கான சகல வசதிகளையும் செய்து கொடுக்க 3 கோடி 50 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது - என்றுள்ளது.

(சி)

# 28 நிரந்தர வீடுகளை கியூடெக் அமைக்கிறது

வண்ணை, நவ.19

கொழும்புத்துறை, பாசையூர் பகுதிகளில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் 28 நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கவுள்ளது.

முதலில் 3 வீடுகளுக்கான அடிக்கல் கடந்த 11ஆம் திகதி புதன்கிழமை நடப்பட்டது. மேற்படி வீடுகளைத் துரித கதியில் அமைத்துப் பயனாளிகளிடம் கையளிக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு வீடு மலசலகூட வசதியுடன் நிர்மாணிப்பதற்காக 10 லட்சம் ரூபா செலவிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(50-160)

# பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்குகளை விரைவுபடுத்த நீதியமைச்சு நடவடிக்கை

கொழும்பு, நவ. 19

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணைகளை விரைவுபடுத்தி, குற்றமற்றவர்களை விடுதலை செய்வதற்கு நீதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக சட்ட மா அதிபரின் ஆலோசனையின்பேரில் 11 பேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என நீதியமைச்சின் செயலாளர் சுகத கம்லத் தெரிவித்தார்.

மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோ இக்குழுவுக்குத் தலைமை தாங்குகிறார் என அவர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் சுமார் 600 பேர் தொடர்பாக இந்தக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இவர்களில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சிகளைக் கொண்ட குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களுக்கெதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

இவ்வாறான குற்றச்சாட்டுகளின்பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோரில் 48 பேர் இதுவரை விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வீ ஆர் டீ சில்வா கூறினார்.

இதேவேளை, கடந்த வாரம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார்.

(சி)

# யுத்த வெற்றிக்கு வழிகாட்டியது சிறந்த அரசியல் தலைமைத்துவமே!

## இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, நவ. 19

அரசியல் தலைவர்களே யுத்த வெற்றியின் உண்மையான சொந்தக்காரர்கள் - என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பனொகொடையில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தில் படையினர் முன்னிலையில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு - மிகச் சிறந்த அரசியல் தலைமைத்துவமே யுத்த வெற்றிக்கு வழிகாட்டியது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வு இந்த மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளில் படையினர் காட்டிய அர்ப்பணிப்புத் தொடர்பில் ஜனாதிபதி மகிழ்ச்சியடைந்துள்ளார். இதனால் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் - என்றார். (சி)



யாழ்.நகர்ப்பகுதியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு நேற்று ஒரேசமயத்தில் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

நகரில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றிற்குப் பவுசர் வாகனம் மூலம் பெற்றோல் விநியோகிக்கப்படுவதை முதலாவது படத்திலும் விற்பனை நிலையம் ஒன்றின் முன்னால் பெற்றோல் பெறுவதற்கு மக்கள் தமது வாகனங்களுடன் நீண்ட வரிசையில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நந்தன், சுகந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிலேயே மிகப்பெரிய பயணிகள் கப்பல்



உலகிலேயே மிகப்பெரிய பயணிகள் கப்பல் ஓயாசிஸ் பின்லாந்து நாட்டில் உள்ள துர்கு தளத்தில் கட்டப்பட்டுள்ளது. 360 மீற்றர் நீளம் கொண்ட இக் கப்பல் 16 அடுக்கு மாடிகளைக் கொண்டது.

2700 அறைகள் உள்ளது. இதில் 6,300 பேர் பயணம் செய்யலாம். 2100 பேர் இக் கப்பலில் பணிபுரிகின்றனர். இது ரூ.7500 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

இதில் 4 நீச்சல் குளங்கள், கைப்பந்து, கூடைப் பந்து விளையாட்டு மைதானங்களும் உள்ளன. இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் பொழுது போக்கக் கூடிய பூங்காக்கள், கேளிக்கை விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

கோல்ப் விளையாட்டு மைதானமும் அமைக்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் 780 பேர் அமரக்கூடிய கலை அரங்கமும் கலைநயத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

இக் கப்பல் பின்லாந்தில் இருந்து அமெரிக்காவின் புளோரிடாவுக்கு இன்று தனது பயணத்தைத் தொடங்கியது. இதில் 6300 பேர் பயணம் செய்கின்றனர். இந்தக் கப்பல் கடந்த 10 ஆம் திகதி அமெரிக்கா சென்றடைந் துள்ளது. அங்கு பெருமளவானோர் இக் கப்பலுக்கு வரவேற்பு அளித்துள்ளனர். ★★★★★★★★★★★★★★★★★★★

Solace Feder Deli lucid
DG Bra & Petticoats
மிருதுவான இதமான சுகத்தைத்தந்து உங்களது தோற்றத்தை மெருகூட்டும்
யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யமான கடைகள் எல்லாவற்றிலும் பெற்றுக் கொள்ளலாம்
Angel Bonny Leena
DG Fashion Garment (Pvt) Ltd.
Ashokarama Road, Kondeniya, Dickwella.
Tel:041-2255954/9 Fax:041-2255955
Email:-info@newdgfashions.com
Web:-www.newdgfashions.com
DELIA Ruby Princess Dialog

DG Briefs & Banians
பொலியஸ்டர் இல்லவே இல்லை முற்றுமுழுதாக இயற்கையான பருத்தியிலானது
யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யமான கடைகள் எல்லாவற்றிலும் பெற்றுக் கொள்ளலாம்
DG Fashion Garment (Pvt) Ltd.
Maximum Performance 100% Combed Cotton Quality Fabrics
Ashokarama Road, Kondeniya, Dickwella.Sri Lanka.
Tel:041-2255954/9 Fax:041-2255955
Email:-info@newdgfashions.com
Web:-www.newdgfashions.com

IDD ரூ.5/-
வியத்தகு லான்ட் லைன் கட்டணங்களுடன்
வெளிநாடுகளுக்கு அழையுங்கள்
இந்தியா, கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், சீனா ஆகிய நாடுகளின் எந்தவொரு தொலைபேசி இலக்கத்திற்குமான IDD அழைப்புகளை, நிமிடமொன்றிற்கு ரூ. 5/- என்ற ரீதியில், Per Second கட்டண முறை ஊடாக மேற்கொள்ளுங்கள்.
மேலதிக விபரங்களுக்கு, எந்தவொரு Dialog வாடிக்கையாளர் சேவை நிலையத்தையும் நாடுங்கள்.
Fixed Line
www.dialog.lk
Dialog

செலிங்கோ லை:ப்
குடும்ப சவாரி
நம் அனைவருக்கும்



நீங்கள் செலிங்கோ லை:ப் காப்புறுதிதாரராயின், கீழே உள்ள கூப்பனை நிரப்பி உங்கள் குடும்பப் புகைப்படத்துடன் அருகிலுள்ள செலிங்கோ லை:ப் கிளைக்கு அனுப்புங்கள். செலிங்கோ லை:ப் காப்புறுதிதாரராக இல்லாவிட்டால், 2009 டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் செலிங்கோ லை:ப் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை பெற்றுக்கொள்வதன் மூலம் இப்போட்டியில் பங்குபற்ற முடியும்.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 2 461 461
அல்லது www.ceylincolife.com என்ற இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.
Family Savari
Application Form
4 வெற்றியாளர்களுக்கு சிங்கப்பூரில் சொகுசு கப்பல் சவாரி
200 வெற்றியாளர்களுக்கு சிங்கப்பூர் சவாரி
2,000 வெற்றியாளர்களுக்கு லெஷர் வேர்ல்ட் சவாரி
License No.: WP/GT/2125
செலிங்கோ லை:ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையில் 2009 ஆம் ஆண்டு தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சித்தியடைந்த மாணவர்கள் அதிபர், ஆசிரியர்களுடன் காணப்படுவதைப் படத்தில் காணலாம். (50-112)



யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரியின் வணிக தின விழா அண்மையில் வணிக மாணவர் ஒன்றியத்தினரால் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் வணிக மன்றத்தலைவர் ஜெரிஜோன்சன், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன ஆயுள்முகாமையாளர் எஸ்.ரஞ்சித், யாழ்.நிக்கொட் நிறுவனப் பணிப்பாளர் ஆர்.சிவரூபன், கல்லூரி அதிபர் அருட்பணி எம்.ஜெரோ செல்வநாயகம் அடிகளார், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியர் எஸ்.கணேசன், மன்றப் பொறுப்பாசிரியர் வி.கே.ரவிகரன் ஆகியோர் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.



மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோட்டக் கல்வி அதிகாரி கு.சிவானந்தம் மற்றும் பாடசாலை அதிபர் வே.விநாயகமூர்த்தி, ஓய்வு பெற்ற தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி புல்பா கணேசலிங்கம் ஆகியோர் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம். (50)



உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேசியக் கொடியேற்றுவதையும், அருகில் பாடசாலை அதிபர் மு.விக்கினேஸ்வரன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் வி.கே.கணபதிப்பிள்ளை, ஓய்வுபெற்ற நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (50-49)


# உங்கள் வாழ்க்கைச் செலவைக் குறைக்க இதோ ஒரு சலுகை!

நியூசிலாந்தில் தயாரிக்கப்பட்ட மில்குறோ கிறீமி முழு ஆடைப் பால்மா 400 கிராம் பைக்கெற் ஒன்று

ரூபா **220/-** மட்டுமே.




விநியோகஸ்தர்கள் : DELMEGE MARKETING (PVT) LTD
A MEMBER OF THE DELMEGE GROUP

ரூ.2/-
வெளிச்செல்லும் அழைப்புகள்

## Dialog லான்ட் லைன் தொலைபேசியில் சுதந்திரமாக பேசுங்கள்

Dialog லான்ட் லைன் தொலைபேசியிலிருந்து எந்தவொரு வலையமைப்பிற்கும் அழைப்பதற்கான கட்டணம் இப்போது ரூ. 2/- மட்டுமே.

அனைத்து Dialog வாடிக்கையாளர் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

Fixed Line

Dialog


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது தோழமை நிறுவனமான
பெருமைப்படக்கூடிய EUT கைத்தொழில் நிறுவன
உரிமையாளர்

**வேலுப்பிள்ளை சிறிஸ்கந்தராஜா**

தொழில்நுட்பத்துறையில் ஜனாதிபதி அவர்களிடம்
கடந்த 17.11.2009 அன்று முதன்மை
விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுக்
கொள்வதையிட்டு தோழமை பூண்டிருக்கும் எமது

**HARREES Enterprise**

பெருமை அடைந்து தங்களையும் தங்களின் இந்த
வெற்றிக்குப் பக்க பலமான குடும்பத்தினரையும்
மகிழ்ச்சியுடன் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

HARREES ENTERPRISE
K.K.S வீதி, *சுன்னாகம்,*
(சி/862476) **உரிமையாளரும், ஊழியர்களும்.**

## வலி-கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) நீர்வேலி

**திருமணம், மற்றும் சுப மங்கள வைபவங்களுக்குரிய பந்தல் வாழைக்குலைகள், ஏனைய வாழைக்குலைகள்**

உங்கள் சுப மங்கள வைபவங்களுக்குரிய பந்தல் வாழைக்குலைகள், ஏனைய வாழைக்குலைகள், வாழையிலைகள் ஆகிய வற்றை நீங்கள் ஒருங்கே பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்.

வலி-கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம். நீர்வேலி.

**தொலைபேசி இல .0213211614**

உங்கள் ஓடர்களை காலை 6 மணியிலிருந்து மு.ப 11 மணிவரை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு முற்பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளவும். வாகன வசதி செய்து கொடுக்கப்படும்.

(91198)

## துயர் பகிர்கின்றோம்



எம்முடன் கல்வி மாணி பாட[illegible]யிலனைப் பயிலும்
(2007-2010) சக ஆசிரிய[illegible]ன
**திருமதி சிவராணி நந்தகுமார்**
அவர்களின் அன்புத்தாய்
**திருமதி வேலாயுதம் மனோன்மணி**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடையவும் பிரார்த்தனை செய்கின்றோம்.

*ஆசிரிய மாணவர்கள் கழகம்.*
*கல்விமாணி 2007-2010, 2ஆம் வருடம்.*

(91198)

## சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு ஸ்கந்தவரோதயக் கல்லூரியில்

யாழ்ப்பாணம், நவ.19

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், 'தமிழர் பண்பாட்டியல்' என்ற தலைப்பில் இந்தியா, பாண்டிச்சேரியில் இருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் பக்தவக்சலம் பாரதி சிறப்புரையை நிகழ்த்தவுள்ளார். (204)

## வல்வை றோ.க.த.க பரிசளிப்பு விழா

வல்வை றோ.க.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை ஒன்று கூடல் மண்டபத்தில் அதிபர் நா.கண்ணதாசன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பொறியியலாளர் தி.சேந்தன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை கோட் டக்கல்வி அதிகாரி பா.இரகுநாத னும், கௌரவ விருந்தினராக வல்வை ஒன்றியத் தலைவர் எஸ்.எக்ஸ்குலநாயகமும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் திருமதி ஜெயந்திமதி சேந்தன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கவுள்ளார். (204-70)

## விற்பனைக்கு

நல்லூரிற்கு அருகாமையில் தரமான நிலையில் உள்ள ஹோட்டல் நடத்துவதற்குரிய பொருட்கள், தரமான தளபாடங்கள், பேக்கறி நடத்துவதற்குரிய பொருட்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி:- 077 - 8468316

## மணமகள் தேவை

M.Sc.முடித்து Mechanical Engineer ஆக இருக்கின்ற Canadian P.R. உள்ள சைவசமயம் 29 வயது, ஏழுச் செவ்வாய், பூச நட்சத்திரம், பாவம் 30 உடைய மணமகனுக்கு, வைத்தியத் துறையில் படித்துக் கொண்டிருக்கும் அல்லது படிப்பை முடித்துக் கொண்ட மணமகள் தேவை.

(90672) **தொடர்பு : 0713163508**

## மரண அறிவித்தல்கள்

### Dr.துரைச்சாமி கணநாதன், மகப்பேற்று நிபுணர் (U.K)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் U.K யை வசிப்பிடமாகக் கொண்டவருமான Dr.துரைச்சாமி கணநாதன் கடந்த 10.11.2009ஆம் திகதி லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி Dr.துரைச்சாமி தம்பதியரின் அருமை மகனும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவஞானம் (முன்னாள் விக்ரோறியாக் கல்லூரி அதிபர்) - திருமதி சிவஞானம்(U.K) தம்பதியரின் அன்பு மருமகனும் காயத்திரிதேவி (U.K) யின் அன்புக் கணவரும் திருமதி இந்திராதேவி ஸ்ரீதரன் (கனடா), திருமதி Dr.கலாதேவி சிவயோகநாதன் (கண்டி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2009) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

No: 10 Paddingtor close
Hayes
UB 490h
U.K
T.P: 00442085809851

*தகவல்:*
**லயன் வி.கமலநாதன் (சகோதரன்)**
*யானைக்குட்டி ஒழுங்கை,*
*தெல்லிப்பழை.*

(91199)

### கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்



காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் 17.11.2009 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சிவயோகம் தம்பதியினரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான நவசிவாயம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் யோகேந்திரன் (பதுளை), மங்கையற்கரசி (சுவிஸ்), இராயேஸ்வரி (கண்டி), பாலேந்திரன், தெய்வேந்திரன் (சுவிஸ்), யோகமலர் (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சறோஜினிதேவி (பதுளை), சிவராஜாசேகரம் (சுவிஸ்), செல்வராஜா (கண்டி), திருச்செல்வி, சாந்தி (சுவிஸ்), உதயகுமார் (U.K) ஆகியோரின் அன்பு மாமனும் அனுசியா, அனுஜன், அஸ்வந்தினி, சிவலக்ஷன், கஜலக்சி, நிசாந்தி, டிலக்சி, சாருஜன், நதீரா, திவாகர், திவாகினி ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.11.2009) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நீலகிரி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கருங்காலி,*
*காரைநகர்.*

*தகவல்:*
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(91202)





**சர்வதேச கீர்த்திபெற்ற எமது தேசிய உற்பத்தி ஸ்தாபனத்தில் நீங்களும் பங்குதாரராகும் அரிய வாய்ப்பு**

ரேணுகா எக்ரி புட்ஸ், இந்த நாட்டின் முன்னனி தேங்காய் உணவு உற்பத்தியாளர்களும் சர்வதேச சந்தையாளர்களும் பொது மக்களுக்கு வழங்கும் இலாபகரமான வாய்ப்பு. விவசாயமும் அதைச்சார்ந்த உற்பத்திகளின் தொழிற்துறை, உலகளாவிய ரீதியில் துரித வளர்ச்சியடையும் தொழிற்துறையாக விளங்குகின்றது. வரையறுக்கப்பட்ட ரேணுகா எக்ரி புட் ஸ்தாபனம் முழுமையான ஒரு இலங்கை முயற்சியாகும். இத்துறையின் முன்னோடிஸ்தாபனங்களில் ஒன்றாக விளங்கும் இது என்றும் உறுதிகளை நிறைவேற்றுவதால் உலக அரங்கிலும் பிரசித்தி பெற்றிருக்கின்றது. உயர்மட்ட மதிப்பினை பெற்றுள்ள ரேணுகா தேங்காய் பால் மா தற்போது உள்ளூர் சந்தையிலும் விற்பனையாகின்றது. அத்துடன் ரேணுகா குரூப், தேயிலை,தேசிய உணவுப்பதார்த்தங்கள், இயற்கை உணவுப்பொருட்கள், ஆகியவற்றை உற்பத்தி செய்து சந்தைப்படுத்திவருகின்றது. அத்துடன் போக்குவரத்து, வனவளா உற்பத்திகளும் இவர்களது ஓர் அங்கமாகும். இன்றுவரை 52க்கும் அதிகமான நாடுகளுக்கு தமது தயாரிப்புகளை ஏற்றுமதிசெய்துவரும் ரேணுகா ஸ்தாபனம் 1886ம் ஆண்டளவான சரித்திரத்தைக்கொண்டது. அவர்கள் தமது 270 மில்லியன் ரூபா பெறுமதியான பங்குகளில் 120 மில்லியன் சாதாரண பங்குகளை 2.25 ரூபா வீதம், கொழும்பு பங்கு பரிமாற்ற திரிசாவி போர்ட் மூலம் இலங்கைப் பிரஜைகளுக்கு பங்களிக்கிறார்கள். மேலும் விபரங்களுக்கு எந்தவொரு இலங்கை வங்கிகிளையிலோ அல்லது பங்குத்தரகர்களிடமோ இருந்து எமது பிரசுரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது 4711744 இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம். இல்லையேல் எமது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.
www.renukagroup.com

வரையறுக்கப்பட்ட ரேணுகா எக்ரி புட்ஸ்
**பங்கு விநியோக ஆரம்பம்**
**27 நவம்பர் 2009**

RENUKA
Since 1866
A Renuka Holdings Plc Company


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணிகக் கல்வியும் கணக்கீடும் II - தொடர்ச்சி....

1) மாற்றப்படதா காசோலைகள் இல. 88425 3,500, இல. 88426 2,500
2) வசூலிக்கப்படாத காசோலை 5,600
3) வங்கிக்கட்டணம் 400
4) பாலாவின் நேரடி வைப்பு 2,000
5) நிலையியல் கட்டளை கொடுப்பனவு 1,000
6) காசேட்டின் கொடுப்பனவு பக்க வங்கி நிரல் ரூபா 500 ஆல் கூட்டிக் கூட்டப்பட்டிருந்தது.

வேண்டப்படுபவை:-
1) வங்கிக் கணக்கிணக்கக் கூற்று என்பதிலிருந்து நீர் விளங்குவது யாது?
2) மேற்படி தவறுகளில் காசேட்டில் செம்மையாக்கம் செய்யவேண்டிய விடயங்கள் எவை?
3) மேற்படி விடயங்களில் வங்கிக் கணக்கிணக்கக்கூற்றில் செம்மையாக்க செய்ய வேண்டிய விடயங்கள் எவை?
4) சீராக்கிய காசேட்டை தயார் செய்க.
5) சீராக்கிய வங்கிமீதியை அடிப்படையாகக் கொண்டு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயார் செய்க.

07. வணிக நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்க உத்தேசித்துள்ள கீர்த்தி என்பவர் நிதி, பாதுகாப்பு தொடர்பான பிரச்சினையை எதிர்நோக்குகின்றார். இவர் பல சந்தேகங்களை எழுப்புகின்றார். அதற்கான விடைகளைத் தருக.
01) தனது வணிகத்தின் எத்தேவைகளுக்கு நிதித் தேவைப்படும் என வினாவுகிறார்?
02) வணிகம் நிதி திரட்டும் பிரதான வழிமுறைகள் எவை?
03) நீண்டகால நிதி திரட்டும் வழிமுறைகள் 3 தருக.
04) நிதி திரட்டும் வழிமுறையை தீர்மானிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய 4 காரணிகள் எவை?
05) பாதுகாப்பு கருதி காப்புறுதி ஒப்பந்தம் செய்வதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் எவை?
06) காப்புறுதியின் பிரதான தத்துவங்கள் 3 தருக.
07) இழப்பீட்டுத் தத்துவம் காப்புறுதிக்கு எவ்வாறு உதவுகின்றது?
08) வணிக நிறுவனம் ஒன்றின் தொடர்பாடல் இடம்பெறும் பிரதான பிரிவுகள் எவை?
09) போக்குவரத்தின் அடிப்படை அம்சங்கள் 4உம் எவை?
10) போக்குவரத்து சாதனம் ஒன்றினை தெரிவுசெய்யும்பொழுது கவனத்தில் கொள்ளும் காரணிகள் எவை?

-நிறைவுற்றது-

## கணிதம் - II (புதிய பாடத்திட்டம்) 32-T-II

### பகுதி - A

* ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

01. a) ஒரு புத்தகத்தின் 1/3 பங்கை முதல் நாளும் 2 ஆம் நாள் மிகுதியின்2/5 பங்கையும் வாசித்தபின் மிகுதியாகவுள்ள பக்கங்களின் எண்ணிக்கை 40 ஆகும்.
1) 2 ஆம் நாள் வாசித்த பக்கங்களின் எண்ணிக்கை யாது?
2) மிகுதியாக உள்ள பக்கங்களின் பங்கு யாது?
3) புத்தகத்தில் உள்ள பக்கங்களின் எண்ணிக்கை யாது?

b) குறித்த பத்திரிகைகளை வாசிக்கும் வாசகர்களிடையே எடுக்கப்பட்ட தகவல் பின்வருமாறு:- உதயன், டெய்லிநியூஸ் வாசிப்பவர்களிடையிலான விகிதம் 5:2 ஆகவும், உதயன், ஐலண்ட் வாசிப்பவர்களுக்கு இடையிலான விகிதம் 12:1 ஆகவும் காணப்பட்டன. மேலும் 180 பேர் உதயன் வாசிப்போராகவும் இருந்தனர்.
1) உதயன்: டெய்லிநியூஸ்: ஐலண்ட் விகித்தைக் காண்க.
2) டெய்லிநியூஸ் வாசிப்போர் எத்தனை பேர்?
3) அவர்கள் மொத்தமாக எத்தனை பத்திரிகைகள் வாங்க வேண்டும்?

02. 1) $3^x \times 9^x = 27^2$ எனின், X இன் பெறுமானத்தைக் காண்க.
2) மடக்கை வாய்ப்பாடுகளை உபயோகிக்காது பெறுமானம் காண்க?
1/2lg9+2lg6-3lg3+2lg5
3) மடக்கை அட்டவணையைக் கொண்டு பெறுமானம் காண்க.
$\frac{\sqrt{0.0358\times52.63/}}{(0.387)2}$

03. a) சார்பு $y=(X+2)^2-3$ என்னும் வரைபை வரைவதற்கு X இனதும் Y இனதும் பெறுமானங்களைக் கொண்ட பூரணமற்ற அட்டவணை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

| X | -5 | -4 | -3 | -2 | -1 | 0 | 1 |
|---|---|---|---|---|---|---|---|
| y | 6 | 1 | -2 | .... | ..... | 1 | 6 |

1. அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.
2. X அச்சு வழியேயும் y அச்சு வழியேயும் 10 சிறுபிரிவுகளை ஓர் அலகாகக் கொண்டு மேற்குறித்த சார்பின் வரைபை வரைக.

b) உமது வரைபில் இருந்து,
1. சமச்சீர் கோட்டின் சமன்பாடு யாது?
2. உச்சிப் புள்ளியின் ஆள்கூறு எது?
3. சார்பு மறையாகவும் அதிகரிப்பதாகவும் உள்ள X இன் பெறுமான வீச்சு யாது?
4. $X^2+3X-1=0$ எனும் சமன்பாட்டின் மூலகங்களைக் காண்க.

c) 1. $y=X^2-6X+4$ எனும் சார்பின் திரும்பற்புள்ளியின் ஆள்கூறுகளை உய்த்தறிக.
2. இச் சார்பின் சமச்சீர் அச்சின் சமன்பாட்டை எழுதுக.


04. ஆடைத் தொழிற்சாலையொன்றில் தொழில் புரியும் வேலையாட்களின் வயது பற்றி அட்டவணையொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| வேலையாட்கள் | 16 - 20 | 20 - 24 | 24 - 28 | 28 - 32 | 32 - 36 | 36 - 40 | 40 - 44 | 44 - 46 |
|---|---|---|---|---|---|---|---|---|
| வயது | 10 | 17 | 9 | 8 | 17 | 15 | 6 | 4 |

1) மேற்குறித்த பரம்பலின் நடுப்பெறுமானத்தைக் காண்க.
2) நடுப்பெறுமானங்களைக் கொண்டு மீடிறன் பல்கோணியை அமைக்குக.

05. மனிதன் ஒருவன் 3 விபத்துக்களில் ஏதாவது ஒரு விபத்தில் மரணமடைவான் என எண் ஆரூடம் தெரிவிக்கிறது. 1ஆவது விபத்தில் மரணமடையாவிடின் இரண்டாவது விபத்திலும், இரண்டாவது விபத்தில் மரணமடையாவிடின் மூன்றாவது விபத்திலும் அவன் மரணமடைவான். அவன் மரணமடைவதற்கான நிகழ்தகவு 3/5 ஆகும்.
1) இது சம்பந்தமான நிகழ்வுகளைக் காட்டும் மரவரிப்படத்தை வரைக.
2) இரண்டாவது விபத்தில் மரணமடைவதற்கான நிகழ்தகவு யாது?
3) மூன்றாவது விபத்தில் மரணமடைவதற்கான நிகழ்தகவு யாது?

06. a) திண்மக் கண்ணாடிச் சதுரமுகியொன்றிலே செதுக்கப்பட்ட கூம்பு வடிவச்சாடி ஒன்று படத்திற் காட்டப்பட்டுள்ளது. சதுரமுகியின் மேல் முகத்தின் எல்லா நான்கு பக்கங்களையும் அடிவட்டம் தொடுகிறது. கூம்பின்அச்சானது சதுரமுகியின் சமச்சீரைப் பேணுகிறது. கூம்பின் செங்குத்து உயரம் 3cm எனில், சதுரமுகியின் எஞ்சிய பகுதியின் கனவளவைக் காண்க.
b) கூம்பு செதுக்கப்பட்ட பின்னர் எஞ்சிய திண்மத்தின் மேற்பரப்பளவைக் காண்க.
(அடி ஆரை r உடைய கூம்பின் கனவளவு $1/3\ \pi r^2h$, $\pi = 22/7$ என எடுக்குக.)




### பகுதி - B

* ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை ஏழுதுக.


01. a) கூட்டல் விருத்தி ஒன்றின் 3ஆம் உறுப்பினதும் 6ஆம் உறுப்பினதும் கூட்டுத்தொகை 33 ஆகவும், முதல் 10 உறுப்புகளின் கூட்டுத்தொகை 205 ஆகவும் இருப்பின்,
1. முதல் உறுப்பு, பொது வித்தியாசம் என்பவற்றைக் காண்க.
2. இவ்விருத்தியில் 24 உறுப்புக்கள் உண்டெனின் 24ஆம் உறுப்பைக் காண்க.
3. இவ்விருத்தியின் முழு உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

b) 64, -32, -16, ............ என்ற எண்தொடரியில் (-1/8) எத்தனையாம் உறுப்பு எனக்காண்க.

02. 1) காரணிப்படுத்துக. $x^2 - 10x - y^2 + 25$
2) தீர்க்குக. $3/x + 1/2y = 2$, $5/2x + 3/4y = 2$
3) $y(y-3) + 1 = 0$ என்ற இருபடிச் சமன்பாட்டை நிறைவர்க்கமாக்கல் மூலம் தீர்த்து விடையை 2ஆம் தசமதானத்திற்குத் தருக.

03. நேர்விளிம்பு, கவராயம் cm/mm அளவுகோல் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தியும் அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டியும் பின்வரும் அமைப்புக்களைச் செய்க.
1) AB = 8cm, AD = 6cm, $B\hat{A}D = 60^0$ ஆகவும், AB, AD இலிருந்து சமதூரத்தில் அமைந்துள்ளதும் $A\hat{B}C = 90^0$ ஆகவும் உள்ளதுமான புள்ளி C ஐக் கொண்டதுமான நாற்பக்கல் ABCD ஐ வரைக.
2) DC இன் நீளத்தை அளந்து எழுதுக.
3) AB ஐ B இல் தொடுவதும் BD ஐ நாணாகவும் உடைய வட்டத்தை வரைக.
4) முக்கோண ABD இன் பரப்பளவுக்குச் சமனான பரப்பளவைக் கொண்டதும் ABஐ அடியாகவுடையதும், நீர் 3 இல் வரைந்த வட்டத்தில் புள்ளி E ஐக் கொண்டதுமான முக்கோணி ABE ஐ அமைக்குக.
5) DE இன் நீளத்தை அளந்து எழுதுக.


04. தரப்பட்டுள்ள உருவில் ABCD ஒரு சரிவகம், பக்கம் DCஆனதுE வரை நீட்டப்பட்டு உள்ளது. உருவைப் பயன்படுத்தி,




1) X இன் பெறுமானம் யாது?
2) y இன் பெறுமானம் யாது? இதற்குக் காரணமாக அமைந்த கேத்திரகணிதத் தேற்றம் யாது?
3) இந்த உருவில் உள்ள இரு நாற்பக்கல்களில் வட்ட நாற்பக்கல் ஆவது எது? காரணம் கூறுக.
4) $B\hat{A}D$, $B\hat{F}E$ இற்கு இடையிலான தொடர்பை எழுதுக.

05. வட்டம் ஒன்றின் வில் தொடர்பாக மையக்கோணம், பரிதிக்கோணம் பற்றிய தொடர்பைக் காட்டும் தேற்றத்தைக் கூறுக. உருவில் O சிறிய வட்டத்தின் மையமாகும். $A\hat{P}B = 65^0$ ஆகும்.
a) பின்வரும் கோணங்களைக் கணிக்குக.
1. $A\hat{O}B$
2. $A\hat{C}B$
3. $C\hat{Q}B$

b) பின்வருவனவற்றை நிறுவுக.
1. ΔCQB இரு சமபக்க முக்கோணி.
2. QB//AP




06. a) குமார் தனது வீட்டிலிருந்து வடக்கு நோக்கி 10km சென்று கோவிலை அடைந்தார். பின்னர் கோவிலில் இருந்து கிழக்குப் பக்கமாகச் சென்று நூல் நிலையத்தை அடைகின்றார். வீட்டில் இருந்து நூல் நிலையத்திற்கான திசைகோள் 049 எனின், பொருத்தமான அளவிடைப்படம் வரைவதன் மூலம் கோவிலில் இருந்து நூல்நிலையத்திற்கான தூரம் யாது?

b) பொறியியலாளர் ஒருவர் ஒரு கோபுரத்தின் அடியில் இருந்து 80m தூரத்தில் உள்ள ஓர் இடத்தில் இருந்து அதன் உச்சியை நோக்கியபோது அதன் ஏற்றக் கோணம் 035° ஆக இருந்தது. அதே இடத்திலுள்ள சுவரின் மீதிருந்து கோபுர உச்சியை நோக்கும்போது அதன் ஏற்றக்கோணம் 020° ஆகும். கோபுரத்தின் உயரம் h எனவும், சுவரின் உயரம் X எனவும் கொண்டு,
1. h,x இல் இரு சமன்பாடுகள் பெறுக.
2. சமன்பாட்டைத் தீர்த்து கோபுரத்தின் உயரத்தையும், சுவரின் உயரத்தையும் காண்க.

-நிறைவுற்றது-

ஆசிரியர்: B.குகதாசன்
சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமையில் வாழும் மூத்த பிரஜைகள் தமது கோரிக்கைகளை முன்வைக்குக

யாழ்ப்பாணம், நவ.19

யாழ்.மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மூத்த பிரஜைகள் மன நிம்மதியுடன் வாழ எதிர்பார்க்கும் தேவைகளை பிரதேச செயலாளரின் மூத்த பிரஜைகள் சங்கங்கள் ஊடாகவோ, அல்லது தனிப் பட்டோ எழுதி அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை கேட்டுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்தவரும் எப்படிப் பட்ட தேவைகளைப் பேரவையிடம் எதிர் பார்க்கின்றீர்கள் என்ற விவரங்களைக் குறிப்பிட்டு இந்த மாத முடிவிற்குள் பேரவைச் செயலகத்துக்கு அனுப்பி வைக்க முடியும்.

இந்த வேண்டுகைகள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வேண்டுகையாளர்கள் ஒவ்வொருவரும் தொடர்பு கொண்டு செயற்படவுள்ளதாகவும் யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை தெரிவித்துள்ளது.

(203-10)


செழிப்பான அறுவடைக்கு EDGRO® WATER PUMPS



GREAVES LIMITED

MK12 SP & NSP

Engine Driven Pumps

கமத்தொழிலுக்கும், கட்டிட நிர்மாணத்திற்கும் ஏற்ற உற்ற நண்பன்!



7 Year WARRANTY

EDNA GROUP

எட்னா என்ஜினிரிங் (பிரை) லிமிட்டட்

257, கிராண்பாஸ் வீதி, கொழும்பு-14.

தொலைபேசி: 2472669-78, 2498200 பெக்ஸ்: 2472628

E-mail: agro@edna.lk Web : www.edna.lk

யாழ் தொடர்புகளுக்கு ஸ்ரீபாலன் 0779 483318

- 7 வருட கால உத்தரவாதம்.
- உயர்சக்தியும், நீண்ட கால பாவனைத்தரமும்.
- கூடிய அளவு நீரினைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றல்.
- அதிக எரிபொருள் சிக்கனம்.
- தன்னிச்சையான, தன்னிசையற்ற நீர் நிரப்பல்.
- உதிரிப்பாகங்கள் இலகுவாக பெறலாம்.
- நாடு முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட விற்பனைக்கு பிந்திய சேவை.

நாடெங்கும் உள்ள எமது கிளைகளிலும் விற்பனை முகவர்களிடமும் உங்கள் தேவையை பூர்த்தி செய்து கொள்ளலாம்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **கனகம்மா சந்திரலிங்கம்**

தோற்றம் 19✱01✱1944

மறைவு 30✱11✱2008

திதி: சதுர்த்தி (19.11.2009)

நொடிப்பொழுதில்....
இடியொன்று விழுந்து எம் இதயத்தில்
இமயமே சரிந்தது எம் மனதினில்
அன்னையே! நீ எம்மை விட்டு
ஆண்டவன் அடிசேர்ந்த செய்தியறிந்து
அருகில் இருந்து அரவணைத்த தெய்வமே
ஆண்டொன்றென்ன ஆயிரம் ஜென்மம்வரை
அன்னையே உன்னை நாம் மறவோம்.

C.M.S.லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில். (91192)

உங்கள் பிரிவால் துயருறும்: கணவர், பிள்ளை, சகோதரி, மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஈரவிழிகளுடன் 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 ✿ 11 ✿ 1932

மறைவு 26 ✿ 11 ✿ 2003



அமரர் **தம்பிஐயா பொன்னம்பலம்**

திதி (திருதியை)

குடும்பத்தின் குல விளக்காய் வாழ்ந்து
எம்மை அன்புடன் அரவணைத்து
நன்னெறிகாட்டி வாழ வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

14, கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நல்லூர், நாயன்மார் வீதியைச் சேர்ந்த செல்லப்பா-செல்வராணி தம்பதியரின் புதல்வி செல்வி **காயத்திரி** HNDM. (Dip.) அவர்கள் கடந்த (4.11.2009) அன்று கொழும்பு BMICH இல் முகாமைத்துவப் பட்டம் பெற்றதை யிட்டு பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகாலம் வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

K.நிவேதிகன்,
ரூபி நகைமாடம்,
பலாலி வீதி, திருநெல்வேலி.

(சி/562469)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அமரர் பேராசிரியர்

## சுப்பிரமணியம் வித்தியானந்தன் நினைவுப் பேருரை

**Jaffna Culture : The Forgotten and Vanished**

யாழ்ப்பாணப் பண்பாடு: மறந்தவையும் மறைந்தவையும்

பேருரை வழங்குநர்: பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா (தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்).

இடம்: நூலக கேட்போர் கூடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திகதி: 20.11.2009

நேரம்: மு.ப. 10மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பதிவாளர். (சி/562458)


WESTERN UNION®

மணி டிரான்ஸ்பர்



இலவசம்

வெளிநாட்டிலிருந்து வெஸ்டன் யூனியன் மூலம் அனுப்பப்படும் பணத்தை, NDB வங்கி யாழ்ப்பாணக் கிளையில் மாற்றி இந்த அரிய பரிசினைப்* பெற்றுக்கொள்ளுங்கள்

திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை மு.ப. 09.00 - பி.ப. 15.00 வரை

சனிக்கிழமை மு.ப. 09.00 - பி.ப. 13.00 வரை

(போயா மற்றும் வங்கி விடுமுறைகள் தவிர்த்து)

62/6, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(இவ்விசேட சலுகை 2009 ஒக்டோபர் 19ம் திகதி முதல் டிசெம்பர் 31ம் திகதி வரை மட்டுமே)

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
* கையிருப்புக்கள் முடியும்வரை.

அழையுங்கள் 021 - 2 22 11.80/1

NDB வங்கி


## செயலமர்வு

வடமராட்சி, நவ.19

வடமராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் தரம்9இல் புதியபாடத்திட்டவரலாற்றுப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது. (203-236)

## வாராந்த சொற்பொழிவு

வடமராட்சி, நவ.19

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வாரந்தோறும் நடத்தி வரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் 'தேவி பாகவதம்' என்னும் தலைப்பில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார். (203-236)

## 90ஆவது பிறந்த தினமும் மூன்றாம் ஆண்டு நினைவு நாளும்

தோற்றம் 01 ✱ 11 ✱ 1919



மறைவு 23 ✱ 11 ✱ 2006

## அமரர் சங்கரப்பிள்ளை கார்த்திகேசு

கணித ஆசான், இளைப்பாறிய ஆசிரியர், யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி

திதி: திருதியை (19.11.2009)

குடும்பத்தின் சிறந்த தலைவனாய்
கண்ணியம் மிக்க சீலனாய்
கல்வியிற் சிறந்த கணித ஆசானாய்
உற்றாரும் சுற்றாரும் போற்ற
உயர்ந்து வாழ்ந்த ஐயனே! நீங்கள்
எமைப் பிரிந்து ஆண்டுகள் மூன்று சென்றாலும்
எம் துயர் ஆறவில்லை ஆனாலும்
துர்க்கா தேவியின் திருவருளால்
தங்கள் ஆன்மா சாந்திபெற
நித்தம் நித்தம் இறைவனையே வேண்டுகின்றோம்.

பாடசாலை ஒழுங்கை, மல்லாகம். (91088)

என்றும் உங்கள் நினைவுடன்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சரம்

## சிறுமியால் எறியப்பட்ட பனம் விதை இளைஞனின் தலையைத் தாக்கியது

யாழ்ப்பாணம், நவ.19

சிறுமி எறிந்த பனம் விதை இளைஞனின் தலையைத் தாக்கியதில் இளைஞர் சுயநினைவை இழந்தார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மீசாலை தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கதிரேசு ரமேஸ்குமார் (வயது-21) என்பவர் சுயநினைவிழந்த நிலையில் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (201-207)

## நூலகக் கிளைக் கட்டடம் மீசாலையில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

மீசாலை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்ட சாவகச்சேரி நகரசபையின் பொதுநூலகக் கிளைக்கட்டடம் கடந்த வியாழக்கிழமை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்டது.

நகரசபையின் விசேட ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

நகர சபையின் 2009ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி வாரவிழா ,தேசிய நூலக வாசிப்பு மாத விழா ஆகியவை தொடர்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை அமைச்சர் வழங்கினார். (201-207)

## வலி.மேற்குப் பிரதேசசபையின் பொறுப்பதிகாரிக்குப் பிரியாவிடை

யாழ்ப்பாணம்,நவ.19

வலி.மேற்குப் பிரதேச சபையின் சுழிபுரம் உப அலுவலகப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிக் கடந்த புதன்கிழமை ஓய்வுபெற்றுச் சென்ற சி.சிவராசசிங்கம், உப அலுவலக ஊழியர்களால் பிரியாவிடை நடத்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சுழிபுரம் இலவச ஆயுள்வேத வைத்தியசாலைக்கு வைத்தியராக டாக்டர் ஐங்கரன் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். வவுனியா செட்டிக்குளம் வைத்தியசாலையில் கடமையாற்றிய இவர் பருத்தித்துறையைச் சொந்த இடமாகக் கொண்டவர். இம்மாதம் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையினர் நோய்களுக்கு வேண்டிய ஆயுள்வேத மருந்து வகைகளைக் கொள்வனவு செய்து வைத்தியசாலைக்கு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (201-28)

## நூல் வெளியிடப்பட்டது

சட்டத்தரணி பி.எம்.அன்ரனிப்பிள்ளை எழுதிய 'இலகு ஆங்கிலம் தமிழில்' எனும் நூல் கடந்த 14 ஆம் திகதி யாழ்ப்பாணம், டேவிட் வீதியில் அமைந்துள்ள 'கலைத்தூது' அழகியல் கல்லூரியில் வெளியிடப்பட்டது.

நூலின் முதற் பிரதியை கதீசன் ஹாட்வெயர்ஸ் உரிமையாளர் பி.சேவியரும், சிறப்புப் பிரதியை நியூ றெஸ்ற் கவுஸ் உரிமையாளர் ஏ.மரியநாயகமும் பெற்றுக் கொண்டனர். (201-15)

## வீதியில் ஏற்பட்ட குழிகள் தார் ஊற்றிப் புனரமைப்பு

வண்ணை, நவ.19

யாழ்.அஞ்சல் திணைக்களத்தில் இருந்து சிவன் கோயில் வரையான காங்கேசன்துறை வீதியில் ஏற்பட்டிருந்த சிறிய குழிகள் கொங்கிறீற் தார் போட்டு செப்பனிடப்பட்டுள்ளன.

அதேவேளை, மேற்படி வீதியில் தட்டாத்தெருச் சந்தியில் வடக்காக அமைந்துள்ள வீதியில் பல குழிகள் ஏற்பட்டு போக்குவரத்துக்கு மிகுந்த அசௌகரியங்களைக் கொடுத்து வருகிறது.

சமீபத்தில் ஆரம்பமான பருவப் பெயர்ச்சி மழையால் குழிகளில் நீர் நிரம்பி வாகனப் போக்குவரத்தால் மேலும் குழிகள் தூர்ந்து போய் பாதசாரிகளுக்கும், வாகனங்களுக்கும் மிகுந்த கஷ்ரங்களை ஏற்படுத்தி வருவதும் சுட்டிக்காட்டத்தக்கது. (201-160)

## கட்டாக்காலி மாடுகளால் போக்குவரத்துப் பாதிப்பு

வண்ணை,நவ.19

யாழ். ஆஸ்பத்திரி வீதி மற்றும் காங்கேசன்துறை வீதி ஆகியவற்றில் மத்திய பேருந்து நிலையப் பகுதியில் இருந்து சத்திரத்துச் சந்தி யாழ்.பல நோக்குக் கூட்டுறவு நகர் கட்டடம் மற்றும் வீரசிங்கம் மண்டபம் வரையான பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளால் போக்குவரத்துப் பாதிக்கப்படுவதாகப் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியின் உட்பக்க வீதியான கந்தப்பசேகரம் வீதியில் வதிவோரின் கால்நடைகளே மாலை நேரங்களில் மேற்படி வீதிகளில் மேய்ச்சலுக்கு வருவதனால் போக்குவரத்தின் போது இடையூறுகளை ஏற்படுத்துவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே யாழ்.மாநகரசபை அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து உதவ வேண்டும்மெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (201-160)

## தொழிற்பயிற்சியின் பூர்த்தி விழாவும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், நவ.19

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் ஆனைக்கோட்டையில் நடத்தப்பட்டு வந்த ஆறு மாத கால தொழிற்பயிற்சியின் பூர்த்தி நிகழ்வும், கண்காட்சியும் கடந்த 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை பயிற்சி மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சின் பணிப்பாளர் கே. கோணேஸ்வரன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாகச் சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் என்.நிரஞ்சனா, நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் என்.நிரோசா ஆகியோர் கலந்துகொண்டனர். (204-100)

## இலகுவேலைத் திட்டத்தின்கீழ் சிரமதானப் பணிகள்

நவாலி, நவ.19

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இலகு வேலைத்திட்டத்தின் 4ஆம் கட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொட்டும் மழையில் நனைந்தவாறு வீதியருகிலுள்ள புற்களைத் வெட்டித் துப்புரவாக்கும் பணியில் மக்கள் ஈடுபட்டுள்ளனர். (201-100)

## மாணவர்கள் தயாரித்த கடித உறைகள் வைத்தியசாலைக்கு அன்பளிப்பு

நவாலி, நவ.19

நவாலி சென்.பீற்றேர்ஸ் றோ.க.த.க பாடசாலையின் தரம்5 மாணவர்களால் சுற்றாடல் செயற்பாடுகளுக்கமைய தயாரிக்கப்பட்ட ஒருதொகை சிறிய கடித உறைகள் மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலைக்கு மருந்துக் குளிகைகள் வைத்து நோயாளர்களுக்கு கொடுப்பதற்காக வழங்கியுள்ளனர்.

கடந்த வாரம் பாடசாலை அதிபர் பங்கிராஜ் தலைமையில் வகுப்பாசிரியர் செந்தினி தர்மசீலன் ஆகியோருடன் மாணவர்கள் வைத்தியசாலைக்கு நடந்துசென்று வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி ஏகாம்பரமூர்த்தி புஸ்பராணியிடம் கையளித்துள்ளனர்.

இவர்களது இம்முன்மாதிரிச் செயற்பாட்டைச் சகல மக்களும் பாராட்டியுள்ளதுடன் ஏனைய பாடசாலைகளுக்கும் இது ஓர் எடுத்துக்காட்டாகுமென்று தெரிவித்துள்ளனர். (201-100)

## கோடா வைத்திருந்தவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.19

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா வைத்திருந்த கொடிகாமம் எருவன் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 60 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிவான் கோடா வைத்திருந்த நபருக்கு 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 24 மாத சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (201-207)

# மூத்த பிரஜைகள், பிள்ளைகளைப் பராமரிக்க விரும்புவோருக்கு வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், நவ.19

முதியவர்கள், அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகளைப் பகல், இரவு பராமரிப்பதற்கு விரும்புவோருக்கான வேலைவாய்ப்பு விண்ணப்பத்தை யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை கோரியுள்ளது.


மூத்த பிரஜைகளை பராமரிப்பதற்கு பேரவைக்கு கோரிக்கைகள் பல வந்துள்ளன. எனவே இந்தச் சேவையை விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் கொக்குவிலில் அமைந்துள்ள மூத்த பிரஜைகள் பேரவை காரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விவரங்களை அறிவிக்கும் பட்சத்தில் பராமரிப்பு வேலைகள் ஒழுங்கு செய்துதரப்படும் எனவும் பேரவை தெரிவித்துள்ளது.

இவர்களை இரவு, பகல் பராமரிக்க விரும்புபவர்களும் பகல் நேரத்தில் அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகளைப் பராமரிக்க விரும்புவோரும் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் அதன் செயலாளர் கேட்டுள்ளார். (50-10)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம், நவ.19

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்-பத்மநாபா) கிளை அலுவலகம் சாவகச்சேரியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (201-207)



வடலியடைப்பில் சுமார் 40 வருடங்களுக்கு மேலாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்த துலாவில்வட்டக்குளம் தற்போது செப்பனிடப்பட்டு வருகின்றமையைப் இப்படத்தில் காணலாம். (56-112)

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபருக்கு 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், நவ.19

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் கே.அரியநாயகம் 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து, செலுத்தத் தவறின் 4 வருடங்கள் சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை, சமரபாகையில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவரே பொலிஸாரினால் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனையின் போது பிடிபட்டுக் கொண்டவராவார்.

குறித்த நபரிடமிருந்து கசிப்புக்கோடா, கசிப்பு உபகரணங்கள் ஆகியவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த நபர் பொலிஸாரினால் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இவர் கசிப்பு வைத்திருந்த குற்றத்திற்கு 25 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 6 மாத சிறைத் தண்டனையும், கசிப்பு உற்பத்திக்கான கோடாவை வைத்திருந்த குற்றத்திற்கு 75 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறினால் 12 மாத சிறைத்தண்டனையும், கசிப்பு உபகரணங்களை வைத்திருந்த குற்றத்திற்கு 75 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறினால் 12 மாத சிறைத்தண்டனையும், கசிப்பை வடித்த குற்றத்திற்கு ஒரு லட்சம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறினால் 18 மாத சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

அபகரிக்கப்பட்ட பொருள்கள் நீதிவானின் உத்தரவுப்படி அழிக்கப்பட்டன. (50-204-236)

# 780 இலக்க மாலை நேர பஸ் சேவை சீரின்மையால் மாணவர்கள் அவதி

ஊர்காவற்றுறை,நவ.19

யாழ்ப்பாணத்திற்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் 780 இலக்க பஸ் சேவை சீராக இடம்பெறாததால் மாணவர்களுக்கு கல்விச் செயற்பாடுகள் இலகுவாக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கரம்பொன் சிறிய புஸ்பமகளிர் வித்தியாலய அதிபர் கவலை தெரிவித்துள்ளார்.மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்கள் மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் பஸ் சேவை சீரின்மையால் குழப்பமடைந்த நிலையில் வகுப்புக்கள் எடுக்கும் நிலை உருவாகியுள்ளது. இப்பாடசாலைக்கு செல்வோரில் அதிகமான மாணவர்கள் பஸ்ஸில்தான் பயணம் மேற்கொள்கின்றனர்.

எனவே, மேற்படி பஸ்சேவையை சீராக இடம்பெற நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. • (201-325)

# வன்னி அகதிகளின் தடுத்துவைப்பைக் கண்டித்து சர்வதேச ரீதியல் தொடர் ஆர்ப்பாட்டம்

## சர்வதேச மன்னிப்புச்சபை ஏற்பாடு

கொழும்பு, நவ. 19

இலங்கையில் அரசினால் நடத்தப்படும் முகாம்களில் தமிழ் அகதிகள் வகைதொகை யின்றித் தொடர்ச்சியாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமையைக் கண்டித்து சர்வதேச மன்னிப்புச்சபை உலகளாவிய ரீதியில் மாபெரும் ஆர்ப்பாட்ட நடவடிக்கை ஒன்றை அடுத்துவரும் ஒருவார காலத்துக்குத் தொடர்ச்சியாக நடத்த தீர்மானித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆதரவாளர்கள் கனடா, நேபாளம், பிரான்ஸ், ஜேர்மனி, மொறசியஸ், அமெரிக்கா, சுவிட்ஸர்லாந்து உட்பட 10இற்கும் அதிகமான நாடுகளில் இப்போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஊர்வலங்கள், கையெழுத்து வேட்டைகள், கவிதை நிகழ்வுகள், மேடை நிகழ்ச் சிகள் என்று இப்போராட்ட நடவடிக்கைகள் பல வடிவங்களில் முன்னெடுக்கப்படுகின்றன.

சர்வதேச மன்னிப்புச்சபையின் 'முகாம்களைத் திறந்து விடுங்கள்' ஆர்ப்பாட்ட நடவடிக்கையின் ஒரு பகுதியே இப்போராட்ட நடவடிக்கை என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிறிஸ்தவ உதவி வழங்கும் நிறுவனத்தின் நிதி உதவியுடன் பங்காளி நிறுவனங்களான சொண்ட், ஜெசாக், ரி.ஆர்.ஆர்.ஓ, வி.டி.எவ் ஆகியன இணைந்து 'காலநிலை மாற்றம் இன்றைய உலகின் சவாலாகும்' என்னும் தொனிப் பொருளில் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் கருத்தரங்கு ஒன்றை நடத்தின.

காலநிலை மாற்றம் தொடர்பாகப் பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் இந்நிகழ்வில் வைத்துப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் பேராசிரியர் என். சிவநாதன், கிறிஸ்தவ உதவி வழங்கும் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் திருமதி ம.தர்சினி, விரிவுரையாளர் எஸ்.மிகுந்தன் ஆகியோர் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவதை முதல் நான்கு படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை ஐந்தாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஷ்மன்)


**தேவை**

அனுபவமுள்ள ரொட்டி மேக்கர் உடனடியாகத் தேவை. தொடர்பு: **969, ஷெங்கபே,** கே.கே.எஸ்.வீதி. தொ.பே.:077 4245943, 077 4493615 (89194)

**தேவை**

வீட்டு வேலைக்கும், குழந்தை பராமரிப்புக்கும் பெண் தேவை. (30வயதுக்கு மேற்பட்டவர்).

தொடர்பு: 0714603297 (91193)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

**ரோயல் குளுக்கோஸ்**

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.

PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670

அனைத்துப் பாமஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:

ஸ்ரீ [illegible]

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


### ஆங்கில மொழியாண்மை பயிற்சி நெறி

அரச அலுவலர்களுக்கான ஆங்கில மொழியாண்மை விருத்திப் பயிற்சி நெறியொன்று ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் கடந்த 7 ஆம் திகதி முதல் ஒரு மாத காலத்திற்கு யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

இப் பயிற்சி வகுப்பில் பிரதேச செயலாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொள்வதால் அநேகமான பிரதேச செயலகங்களில் தமது முக்கிய அலுவலகங்களைச் செய்ய வரும் மக்கள் உடனுக்குடன் கடமைகளை நிறைவேற்ற முடியாது பல கஷ்டங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

(50-100)

### ஆசிரியர்களுக்கு தற்காலிக ஏற்பாடு

சுழிபுரம், நவ.19

வவுனியா நலன் புரிநிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட சுழிபுரத்தைச் சேர்ந்த மூன்று ஆசிரியர்கள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இணைந்து கடமையாற்றி வருகின்றனர்

கல்லூரி அதிபரின் சிபார்சுடன் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அனுமதியோடு இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த மூவரில் ஒருவர் ஆண் இருவர் பெண்களாவர்.

(50-28)

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 02 * 08 * 1989



ஆண்டவன் அடியில் 19 * 11 * 2008

**அமரர் செல்வி மகேந்திரன் கௌரி**

இன்று நீ பிரிந்து
ஆறிரண்டு மாதங்கள் ஆகுதே !
தாங்க முடியவில்லை உந்தன் இழப்பை
முகத்திலே சிரிப்பதனை உதிர்ந்துவிட்டு
முத்தான கதை பேசிக் கொள்ளும் செல்லமே
எங்கள் உயிர் இருக்கும்வரை என்றும் உன்
நினைவுடன்....

நிரந்தர முகவரி:
உடுத்துறை வடக்கு, தாளையடி.
தற்காலிக முகவரி :
இன்பர்சிட்டி, பருத்தித்துறை.

**குடும்பத்தினர்.**
தந்தை, தாய், சகோதரிகள், மைத்துனர்.

(90956)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 25 . 01 . 1957



இறைவன் அடியில் 20 . 10 . 2009

**அமரர் இரத்தினம் நேசகுமாரன்**

ஒரு கூட்டில் எட்டுக் குஞ்சுகளாய்
நாம் வாழ்ந்த காலங்கள்
சுவடுகளாய் எம் நெஞ்சினிலே
நாம் வாழும் காலம் வரை
என்றும் எம் மனதில் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இத்தாலியில் இன்று (19.11.2009) வியாழக்கிழமை நடைபெறும். அன்னாரின் நினைவாக அவரின் தாயாரில்லத்தில் மதிய போசனம் நடை பெறும். அதில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை, சகோதரர்
குடும்பத்தினர்.

(91191)


**வீடு விற்பனைக்கு**

டேவிட் வீதிக்கு அருகாமையில் மாடி வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 10A, கதீற்றல் லேன், யாழ்ப்பாணம்.

T.P.: 021 222 5687

(ப/56227)


# CEYLON ELECTRICITY BOARD

(Northern Province)

**REGISTRATION OF SUPPLIERS & SERVICES FOR THE YEAR 2010**

APPlications are invited from Manufacturers, Distributors, Agents, Suppliers and contractors who wish to register themselves for the supply of items and provide services to the Northern Province of Ceylon Electricity Board, Jaffns for the year 2010.

**ITEM CATEGORY**

**(A) Material**

M-1 MCCB, MCBs,ELCBs, RCCB, Cut outs.
M-2 Fuse Links, HRC Fuse, Fuse Carriers, Insulators.
M-3 Bimetallic Clamps, Cable Lugs, Comparison Connectors, ABC Accessories.
M-4 Safety equipment, Small Tools, Measuring instruments, Ladders.
M-5 Copper and A/L Cables, Conductors and Binding wires.
M-6 Nuts & Bolts, Stay Assembly, Washers, Thimbles ect.
M-7 Stay Wires, Cross Arms.
M-8 Meter Boxes & Boards (Wooden)
M-9 Stationery, Office Equipment, Steel Cabinets ect.
M-10 Paint & Hardware.
M-11 Reinforced & Pre Stressed Concrete Poles.
M-12 Computers, Printers, Network & Accessories.
M-13 Electrical Fittings, Halogen Fittings, Flood lights Fittings, Street Lamps, Main Switches, Electrical Appliances ect.
M-14 Jointing Kits (Compound Type, Heat Shrinkable & Resin Type) Roght Angle Boots, Straight Boots, Tubing, Black Cotton Tape, Empire Tapes, Linen Tapes, Oil Impregnated Tape, Oil Resisting Tape, Bitumen Compound, plumbing Metal, Tin Solder.
M-15 Tyres & Tubes for Motor Vehicles.
M-16 LT & HT Cable Tiles.

**(B) Services**

S-1 Registration of Contractors for Transport of Materials (Transformers, Poles ect)
S-2 Registration of Contractors for Provision of Service Connections (Separate Applicants for each ECSC)
S-3 Registration of Contractors for way Leave Clearing (Separate Applicants for each ECSC)
S-4 Registration of Contractors for Construction of MV & LV Distribution Lines & Substations.
S-5 Registration of Contractors for Rehabilitation & Augmentation of MV & LV Distribution Lines, Substation & Service Connection.
S-6 Registration of Contractors for Loss Reduction Works in LV Distribution Lines.
S-7 Registration of Contractors for Man Power Supply Agencies to obtain the services of Clerks, Data. Entry Operators, Office Labourers, Unskilled & Skilled Field Labourers, Drivers & Security Personnel.
S-8 Registration of Contractors for Janitorial Services.
S-9 Printing.
S-10 Repairing & Servicing of Motor Vehicles
S-11 Aluminium & Wooden Partitioning.
S-12 Civil Contractors for Construction of Substations Buildings & Building Repairs (ICTAD) Registered grade - M-8 or above.
S-13 Contractors for Substation, Building Maintenance, Yard Clearing.
S-14 Repair of Electrical, Electronic, Electro Mechanical, Mechanical equipment & Workshop Services.
S-15 Underground cable laying.

**Conditions:**

A complete set of documents for Registration of suppliers & Services (Applications) could be obtained from Office of the Deputy General Manager (Noth), Ceylon Electricity Board, No.500, K.K.S Road, Jaffna, on working day from **20th November 2009 to 15th December 2009** on payment of a non-refundable fee of Rs.500.00 per item in cash or Bank Draft in favour of the General Manager, Ceylon Electricity Board for each item category as mentioned above.

The document shall be duly completed and returned to the Deputy General Manager (North) Ceylon Electricity Board on or before **15th December 2009** at 10.00 hrs.

The applicants are required to submit the documents separately for each category of material and services along with a deposit of Rs.5000.00 for each category of material & Rs.2000.00 for each category of service in cash or Bank Draft drawn in favour of the General Mannager, Ceylon Electricity Board, being the refundable security deposit for each item under category (A) and (B) above.

The Applications received after the scheduled time 15th December 2009 at 10.00 hrs will not be entertained and will be returned unopened.

Terms and conditions for registration of suppliers will be provided along with the applications.

Deputy General Manager (North)
Ceylon Electricity Board,
No.500, K.K.S Road, Jaffna.

(C/582459)

**"Energy is Life Start Savings Now...! For Our Future"**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உல்பா தீவிரவாதிகள் குண்டுத்தாக்கு; அசாமில் பற்றியெரிந்தது டீசல் ரயில்!

## 3 கோடி ரூபாவுக்கு நாசம் என மதிப்பீடு

கவுகாத்தி, நவ.19

அசாமில் உல்பா தீவிரவாதிகள் நடத்திய குண்டுவெடிப்பில், டீசல் கொள்கலன் சரக்கு ரயில் தீப்பற்றி எரிந்தது. இதில் 12 கொள் கலன்களில் இருந்த ரூபா 3 கோடி மதிப் புள்ள டீசல் எரிந்து நாசம் ஆயின.

அசாமில், நுமலிகார் எண்ணை சுத்திக ரிப்பு நிலையத்தில் இருந்து, உத்தரப் பிர தேச மாநிலத்துக்கு டீசல் கொள்கலன் சரக்கு ரயில் கடந்த திங்களன்று புறப்பட்டது. மொத்தம் 51 கொள்கலன்கள் இணைக்கப் பட்டிருந்த அந்த ரயிலில் ஒவ்வொரு கொள் கலனிலும் தலா 70 ஆயிரம் லீற்றர் உயர் ரக (அதிவேக) டீசல் நிரப்பப்பட்டிருந்தது.

இரவு 9.30 மணியளவில், அசாம் மாநிலம் ஜோகர்த் மாவட்டம் மோரியானி ரயில் நிலை யம் அருகே வந்தபோது, பயங்கர வெடிச்சத் தத்துடன் டீசல் கொள்கலன்கள் திடீர் என்று தீப்பற்றி எரியத் தொடங்கின. தீ கொழுந்து விட்டு எரிந்ததால் யாரும் அருகில் நெருங்க முடியவில்லை. தகவல் அறிந்ததும் தீய ணைப்புப் படையினர் அங்கு விரைந்தனர்.

இராணுவம் மற்றும் பொலிஸ் துறையை சேர்ந்த தீயணைப்பு வாகனங்களும் தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட் டன. 12 கொள்கலன்கள் இந்த நாசவேலை யில் முற்றிலும் எரிந்தன. 4 கொள்கலன்கள் தடம் புரண்டு அவற்றில் இருந்த டீசல் வழிந்து ஓடியது. ஏறத்தாழ ரூபா 3 கோடி மதிப் புள்ள டீசல் எரிந்துவிட்டன.

டீசல் முழுவதும் எரியும் வரை தீய ணைப்பு படையினரால் அருகில் நெருங்க முடியாததால், தீயணைப்புப் பணியில் தாம தம் ஏற்பட்டது. ஏறத்தாழ 12 மணி நேரத்துக் குப்பின், நேற்றுமுன்தினம் காலை 9.30 மணி அளவில்தான் தீயை கட்டுப்படுத்த முடிந்தது.

உல்பா தீவிரவாதிகள் இந்த நாச வேலை யில் ஈடுபட்டு இருப்பது முதல் கட்ட விசார ணையில் தெரியவந்தது.

சரக்கு ரெயிலின் 31 கொள்கலன்கள் டீசலு டன் பாதுகாப்பாக மீட்கப்பட்டன என வடக்கு எல்லைப் பகுதி ரயில்வே அதிகாரிகள் தெரி வித்தனர். சில கொள்கலன்கள் தடம்புரண்டு பக்கத்து ரயில் பாதையில் விழுந்ததால், 300 மீற் றர் தூரத்துக்கு ரயில் பாதை சேதம் அடைந் தது. இதனால் அசாம் மாநிலத்தில் ரயில் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டது.



குண்டு வெடிப்பில் தீப்பற்றி எரிந்த டீசல் கொள்கலன் சரக்கு ரயில்.

# இலங்கையின் தாக்குதலைக் கண்டித்து 21 ஆம் திகதி கறுப்பு தினம் அனுஷ்டிப்பு

## தமிழக மீனவர்கள் முடிவு

இராமேஸ்வரம், நவ. 19

இலங்கைக் கடற்படையின் தொடர் தாக் குதலைக் கண்டித்தும், இதுகுறித்து நடவ டிக்கை எடுக்காமல் இருக்கும் மத்திய அர சைக் கண்டித்தும் 21ஆம் திகதி கறுப்பு தினம் அனுஷ்டிக்க தமிழக மீனவர்கள் முடிவு செய்துள்ளனர்.

தங்களது குறைகளைத் தீர்க்க வலியுறுத் தி இராமேஸ்வரத்திலிருந்து 'சென்னைக்கு வாகனப் பேரணியை நேற்றுமுன்தினம் மீனவர்கள் தொடங்கினர். இதை தமிழ்நாடு மீனவர் சம்மேளன ஒருங்கிணைப்பாளர் அன்பழகனார் தொடக்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறி யவை வருமாறு -

இலங்கைக் கடற்படையினரின் தொடர் தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட ஐந்து கோரிக்கைகளை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

இதற்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். மீன்பிடி தொழிலை அமைதி யான முறையில் மேற்கொள்வதற்கான சூழ் நிலை உருவாக்கப்பட வேண்டும்.

இதை வலியுறுத்தி வாகனப் பேரணி யைத் தொடங்கியுள்ளோம். இது சென் னையை நவம்பர் 21ஆம் திகதி அடையும். அன்று முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து எங்களது கோரிக்கைகளைத் தெரிவிப்போம். அன்றைய தினத்தை கறுப்பு தினமாகவும் அனுஷ்டிப்போம் - என்றார்.

# கடல்வழிக் கண்காணிப்பு தீவிரம் மீண்டும் ஹெலிகொப்டர் ரோந்து

மண்டபம், நவ. 19

மோசமான வானிலை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட ஹெலிக்கொப்டர் ரோந்து மீண்டும் தொடங்கியது.

இலங்கைக் கடல் மார்க்கமாக இராம நாதபுரம் மாவட்ட கடலோரப்பகுதிகளில் அன்னியர்கள் ஊடுருவ வாய்ப்புள்ளதால், இந்திய கடற்படை, கடலோர காவல்படை, விமானப்படையினர் கடல் வழிக் கண் காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

கடந்த சில நாள்களாக நிலவிய காற்ற ழுத்த தாழ்வு மண்டலத்தால் பலத்த மழை பெய்தது. இதனால் ஹெலிக்கொப்டர் மூலம் கடல்வழிக் கண்காணிப்புப் பணி கள் நிறுத்தப்பட்டிருந்தன. நேற்றுமுன் தினம் முதல் வானிலையில் நல்ல முன் னேற்றம் ஏற்பட்டதால் மேகமூட்டம் காணப் படவில்லை.

இதைத் தொடர்ந்து, உச்சிப்புளி விமா னப்படையினர் நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் கடல்வழி கண்காணிப்பை ஹெலிக் கொப்டர் மூலம் தொடங்கியுள்ளனர்.

## இந்தியச் செய்திகள்

# 22 இல் அமெ. விரைகிறார் மன்மோகன் 24 இல் ஒபாமாவைச் சந்தித்துப்பேச்சு

டில்லி, நவ.19

5 நாள்கள் பயணமாக பிரதமர் மன் மோகன்சிங் 22 ஆம் திகதி அமெரிக்கா புறப் பட்டுச் செல்கிறார். அவர் 24 ஆம் திகதி ஒபா மாவை சந்தித்துப் பேசுகிறார்.

ஒபாமா ஜனாதிகதியாகப் பதவி ஏற்றபின் னர் பிரதமர் மன்மோகன்சிங் அதிகார பூர்வமாக அமெரிக்க பயணம் மேற்கொள்வது இதுவே முதல்முறை. ஒபாமா பதவி ஏற்ற பின்னர் அமெ ரிக்கா செல்லும் முதலாவது வெளிநாட்டுத் தலைவரும் மன்மோகன்சிங்கே ஆவார்.

அமெரிக்கா செல்லும் பிரதமர் மன்மோ கன்சிங், 24ஆம் திகதி ஜனாதிபதி ஒபாமாவை சந்தித்துப் பேசுகிறார். இருவரும் தீவிரவாத ஒழிப்பில் ஒத்துழைப்பு, பிராந்திய பாதுகாப்பு, சிவில் அணுசக்தித் துறையில் ஒத்து ழைப்பு, ராணுவ ஒத்து ழைப்பு, பருவ நிலை மாற்றம், உணவுப் பாதுகாப்பு ஆகிய பிரச் சினைகள் குறித்து விவாதிக்கிறார்கள்.



சில ஒப்பந்தங்களிலும் இருவரும் கையெ ழுத் திடுகிறார்கள். இருப்பினும், இது குறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இந்தியாவில் நாசவேலை நடத்தத் திட்டமிட் டதாக டேவிட் கோல்மன் ஹெட்லி, தஹா வுர் ஹுசைன் ரணா ஆகியோர் அமெரிக்கா வில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், தீவிரவாதத்தை ஒழிப்பதில் ஒத்துழைப்பது குறித்து ஒபாமா - மன்மோகன்சிங் பேச்சு நடத்துவது முக்கியத்துவம் வாய்ந்தது. உள வுத்துறை தகவல்களை பகிர்ந்து கொள்வது குறித்தும் இருவரும் விவாதிக்கிறார்கள். அணுசக்தி ஒப்பந்த விவகாரத்தில் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றியும் பேசுகிறார்கள்.

பிரதமரின் அமெரிக்கப் பயணம் குறித்து மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். பிரதமரின் பயணம், இந்திய - அமெரிக்க உறவை மேலும் வலுப்படுத்த உதவும் என்று அவர் கூறினார்.

# இந்தியாவுக்குள் ஊடுருவ தீவிரவாதிகள் தயார் நிலை

## எல்லைப் பாதுகாப்புப் படை தகவல்

கொழும்பு, நவ. 19

இந்தியாவுக்குள் ஊடுருவுவதற்கு ஏராள மான தீவிரவாதிகள் எல்லையில் தயார் நிலையில் உள்ளனர் - என்று எல்லைப் பாது காப்புப் படையின் தலைவர் ராமன் ஸ்ரீவத் சவா தகவல் வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில் மேலும் கூறியவை வருமாறு -

சர்வதேச எல்லைக் கோடு மற்றும் எல் லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் ஏராளமான தீவிரவாதிகள் இந்தியப் பகுதிக் குள் ஊடுருவத் தயாராகவுள்ளனர். பனி காலம் தொடங்கிக் கணவாய் பகுதிகள் மூடப் படும் முன்னர் ஊடுருவி விட ஆயத்தமாக இருக்கிறார்கள்.

எல்லையில் பாதுகாப்பைப் பலப்படுத்தி வருகிறோம். கண்ணிவெடியில் டி.ஐ.ஜி.தன் வார் பலியானமை பற்றி பாகிஸ்தானிடம் முறைப்பாடு செய்திருக்கிறோம் - என்றார்.

# சிவனை கணவனாக அடைய பார்வதி விரதமிருந்த 'ரம்பா திரிதியை' இன்று!



சென்னை,நவ. 19

இன்று (வியா ழக்கிழமை) 'ரம்பா திரிதியை' விழா கொண்டாடப்படு கிறது. திருமணமா காத பெண்கள் விர தம் இருந்தால் திரு மணம் நடக்கும் என்பது ஐதீகம்.

அட்சய திரி தியை தினத்தைத்தொடர்ந்து இப்போது ரம்பா திரிதியை வந்துள்ளது. கார்த்திகை மாதம் மூன்றாம் நாள் (இன்று) ரம்பா திரிதியை கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் கன்னிப்பெண்கள் அம்பாளை வேண்டி விரதம் மேற்கொண்டால் இனிமை யான திருமண வாழ்க்கை, உடல் நலம் மற் றும் செல்வ வளம் பெருகும் என்ற நம் பிக்கை உண்டு.

பார்வதி தேவி சிவபெருமானை கணவ னாக அடைவதற்காக மேற்கொண்ட விரதம் ரம்பா திரிதியை. இந்த நாளில் திருமணமா காத பெண்கள் வாழை மரத்தின் அடியில் சாவித்திரி பூஜையை மேற்கொண்டால் அம் பாள் அருளைப்பெறலாம் என்பது ஐதீகம். இந்த விழா கடலில் இருந்து எழுந்தருளிய அப் சரஸ் ரம்பாவைக் குறிப்பதாகவும் அமைகிறது.

ரம்பா திரிதியை அன்று கோதுமை மற்றும் பூக்களைக்கொண்டு மகாலட்சுமிக்கு பூஜை செய்வதால் வீட்டில் வளமும், அமை தியும் பெருகும் என்றும் நம்பப்படுகிறது.

# 'ஹொலிவுட்' படத்தில் நடிக்க நடிகர் ஜெயம்ரவிக்கு அழைப்பு

ஹொலிவுட் படத்தில் நடிக்க ஜெயம் ரவிக்கு அழைப்பு கிடைத்துள்ளது.

'பேராண்மை' படத்தில் வில்லனாக நடித்தவர் ரோலண்ட் கிக்கிங்கர். 'ஹொலி வுட்' நடிகரான இவர், ஆஸ்திரியாவில் வசிக் கிறார். 6 அடி 5 அங்குலம் உயரமும், 130 கிலோ கிலோ எடையும் கொண்ட இவர், 'பேராண்மை' படத்தில் நடித்தபோது, கதாநாயகன் ஜெயம் ரவியுடன் நெருங்கிப் பழகி நண்பரானார்.

அதைத்தொடர்ந்து ரோலண்ட் கிக்கிங் கரை, ஜெயம் ரவி தனது வீட்டுக்கு விருந் துக்கு அழைத்தார். ரோலண்ட் கிக்கிங்கர், சென்னை அசோக்நகரில் உள்ள ஜெயம் ரவியின் வீட்டுக்கு வந்து விருந்து சாப்பிட் டார். விருந்து முடிந்து அவர் புறப்பட்ட போது, அவருக்கு வேட்டி - சட்டை, வலம்புரி சங்கு ஆகி யவைகளை ஜெயம் ரவி பரிசாக அளித்தார்.

'எல்லாமே எனக்கா?' என்று வியந்து போன ரோலண்ட் கிக்கிங்கர், உன்னிடம் நிறையத் திறமை இருக்கிறது. ஹொலிவுட் படத்தில் நடிப்பதற்கான உடல்வாகும் இருக் கிறது. உன்னைப்போன்ற ஒரு நடிகரை எனக்குத் தெரிந்த இயக்குநர் தேடிக்கொண் டிருக்கிறார். ஹொலிவுட் படத்தில் நடிக்க உனக்கு சம்மதமா? என்று கேட்டார்.

'உங்கள் அழைப்புக்கு நன்றி யோசித்து சொல் கிறேன்' என்று ஜெயம் ரவி பதிலளித்தார்.

# சபரிமலையில் பாதுகாப்பு அதிகரிப்பு; மத்திய பொலிஸ் படைகள் குவிப்பு!

திருவனந்தபுரம், நவ. 19

சபரிமலை ஐயப்பன் கோயில் பாதுகாப் புக்காக கூடுதலாக 2 கம்பனி மத்திய பொலி ஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஐயப்பன் கோயிலில் கடந்த 16ஆம் திகதி முதல் மண்டல காலப் பூசைகள் ஆரம்பமாகி நடந்து வருகின்றன. இதையொட்டி, கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டு தொடக்கத் திலேயே அதிக அளவு பக்தர்கள் சபரிமலை யில் குவிந்த வண்ணம் உள்ளனர்.

சபரிமலையில் பக்தர்கள் போல் தீவிரவா திகள் ஊடுருவலாம் என்ற தகவலின் பேரில் கடந்த ஆண்டு முதல் பாதுகாப்புப் பணியில் மத்திய பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள் ளனர். இந்த ஆண்டும் சபரிமலையில் பாது காப்பை அதிகரிக்க மத்திய உளவுத்துறை உத்தரவிட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து நேற்றுமுன்தினம் 2 கம்பனி மத்திய பொலிஸார் சபரிமலைக்கு வந்துள்ளனர். இவர்கள் பம்பை மற்றும் சன்னி தானத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர். சன்னிதானத்தில் ஐயப்பன் கோயிலைச் சுற்றி துப்பாக்கி ஏந்திய பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

தற்போது சபரிமலை பாதுகாப்புப் பணி யில் ஏ.டி.ஜி.பி. சந்திரசேகர் மேற்பார்வை யில் பம்பையில் ஒரு எஸ்.பி. தலைமையில் 6 டி.எஸ்.பிக்கள், 13 இன்ஸ்பெக்டர்கள், 40 சப் இன்ஸ்பெக்டர்கள், சன்னிதானத்தில் 11 டி.எஸ்.பிக்கள், 21 இன்ஸ்பெக்டர்கள், 46 சப்இன்ஸ்பெக்டர்கள் உட்பட 1300 பொலி ஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர 30 கமாண்டோப் படையினர், வெடிகுண்டுப் பிரிவு பொலிஸார், மத்திய மற்றும் மாநில உளவுத்துறைப் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள் ளனர். பக்தர்கள் வேடத்தில் தீவிரவாதிகள் ஊடுருவ வாய்ப்பிருக்கிறது எனக் கருதப் படுவதால் மாறு வேடத்திலும் பொலிஸார் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

# பக்கத்து வீட்டுப் படுக்கையறையை எட்டிப் பார்த்தவர் கைதாகினார்

சென்னை, நவ. 19

பக்கத்து வீட்டுப் படுக்கை அறையை எட்டிப்பார்த்த இளைஞர் போலிஸாரல் கைது செய்யப்பட்டார்.

நொச்சிக்குப்பத்தை சேர்ந்தவர் ஆறு முகம் (பெயர் மாற்றப்பட்டுள்ளது). இவர் தனது மனைவியுடன் தூங்கும்போது, பக் கத்து வீட்டில் வசிக்கும் தனசேகரன் என் பவர் படுக்கை அறையை எட்டிப் பார்த்து வந்துள்ளார். இதை ஆறுமுகத்தின் மாமியார் பார்த்து, தனசேகரனைக் கண்டித்துள்ளார்.

அவர் ஆத்திரம் அடைந்து ஆறுமுகத் தின் மாமியாரை அடித்து உதைத்துள்ளார். மெரினா பொலிஸில் ஆறுமுகம் முறைப் பாடு செய்தார். இதையடுத்து பொலிஸார் அவரைக் கைது செய்து வழக்குப் பதிவு செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் விசா வழங்குவதற்கு ஆங்கில மொழித்திறன் பரீட்சை

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்து

லண்டன், நவ. 19

பிரிட்டிஷ் விசா பெற விண்ணப்பித்தவர்களுக்குக் கட்டாயமாக ஆங்கிலமொழித் திறனை பரீட்சிப்பதற்கான தேர்வு நடத்தப்பட வேண்டுமென்று அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் பிரிட்டிஷ் விசா கேட்டு விண்ணப்பித்துள்ள நூற்றுக்கணக்கான வெளிநாடு களைச் சேர்ந்தோர் பிரச்சினைக்குள்ளாவர் என தெரிவிக்கப்படுகிறது.

லிபரல், ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் விசா பெறுவதற்கான நடைமுறைகளை மேலும் கடுமையாக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளனர் என பிரிட்டிஷ் உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் கிரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் கோர்டன் பிறவுணிடமும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பிரிட்டன் வருபவர்களுக்குப் புதிய கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும். இதனால் நாட்டில் அசம்பாவிதங்கள் நடப்பதையும், தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுவதையும் தவிர்க்கலாம் என்று பிரிட்டிஷ் முன்னாள் தொழிலாளர் பாதுகாப்புத்துறை அமைச்சர் பிராங் பில்ட், மற்றொரு முன்னாள் அமைச்சர் நிக்கோலஸ் ஆகியோரும் கூறியுள்ளனர்.

"பிரிட்டன் வர விரும்புபவர்கள் தங்கள் ஆங்கிலமொழி பேச்சுத் திறனை கண்டிப்பாக நிரூபிக்கவேண்டும். அப்படியானால் தான் அவர்களால் நமது சமூகத்தில் திருப்திகரமான வகையில் நடந்துகொள்ள முடியும். பணியாற்றும் இடங்களிலும் சிறப்பாக செயற்படமுடியும். பிரிட்டிஷ் குடியுரிமை வேண்டுபவர்களுக்கும் இதேபோன்ற கட்டுப்பாடுகள் விதிக்கவேண்டும்'' என்று பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூறியுள்ளனர்.

பிரிட்டனில் அடுத்த ஆண்டு ஜூன் மாதம் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. அப்போது பிற நாட்டவர்களுக்குக் குடியுரிமை வழங்குவதை எதிர்க்கும் குழுவினர் இந்தப் பிரச்சினையை முன்னிறுத்தி பிரசாரம் மேற்கொள்வார்கள் எனத் தெரிகிறது.

வேறு நாடுகளைச் சேர்ந்த டாக்டர்களும், பொறியியலாளர்களும் பிரிட்டன் வருவதற்குப் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என பிரதமர் கோர்டன் பிறவுண் கடந்த செவ்வாய்க்கிழமை உறுதியளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க சிறப்புத் தூதுவர் ரஷ்ய அதிகாரிகளுடன் பேச்சு

வாஷிங்ரன், நவ. 19

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் நிலை குறித்து, அந்நாடுகளுக்கான அமெரிக்காவின் சிறப்புத் தூதர் ரிச்சர்ட் ஹோல்புரூக், ரஷ்ய அதிகாரிகளுடன் மாஸ் கோவில் பேச்சு நடத்தியுள்ளார் என அமெரிக்க அதிகாரிகள் நேற்று புதன்கிழமை தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க அரசின் செய்தித் தொடர்பாளர் இயான்கெல்லி, இது தொடர்பாகப் பத்திரிகையாளரிடம் பேசுகையில், "ஆப்கானிஸ்தானில் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் அமெரிக்காவுக்கு உதவும் நாடுகளுடன் ஹோல்புரூக் பேச்சு நடத்தவுள்ளார். அதன் ஒரு பகுதியாகவே அவர் ரஷ்யாவுடனும் பேச்சு நடத்தியுள்ளார்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

"ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தொடர்பாக ரஷ்யாவுடன் பேச்சு நடத்த வேண்டும் என நீண்ட நாள்களாவே ஹோல்புரூக் எண்ணியிருந்தார். அது தற் போது நிறைவேறியுள்ளது'' என்றும் இயான் கெல்லி கூறினார்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1140 நீலம்

வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம் 03 32 35 40

17-11-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 214,451 | 20/- | 4,289,020/- |
| 2 இலக்கங்கள் | 19,273 | 40/- | 770,920/- |
| 1 இல. + லக்கினம் | 19,569 | 60/- | 1,174,140/- |
| 2 இல. + லக்கினம் | 1,724 | 200/- | 344,800/- |
| 3 இலக்கங்கள் | 502 | 1000/- | 502,000/- |
| 3 இல. + லக்கினம் | 42 | 10,000/- | 420,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| மொத்தம் | | | 8,100,880/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 255,569 | | 8,600,880/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,973,350/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்கார வெற்றியாளர் : கே.இந்திக டி சில்வா கொழும்பு 12

கைத்தொலைபேசி வெற்றியாளர் : ஆர்.ஏ.அன்ரு பெரேரா ஹெயபந்துடுவ

2009 நொவெம்பர் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| அனுராதபுரம் | 400713663-2-20 |
| கம்பஹா | 400712928-8-05 |
| கொழும்பு | 400709542-7-33 |
| கொழும்பு | 400700270-6-33 |
| கண்டி | 400710674-5-15 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


# திபெத் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண சீன - தலாய்லாமா தரப்புகள் பேசவேண்டும்

## பீஜிங் கூட்டுப் பத்திரிகையாளர் மாநாட்டில் பராக் ஒபாமா

பீஜிங், நவ. 19

"சீனாவின் ஒரு பகுதியே திபெத் ஆகும். இந்தப் பிரச்சினை தொடர்பாக சீனத் தலைவர்களும், திபெத் மதத் தலைவர் தலாய்லாமாவின் பிரதிநிதிகளும் விரைவில் பேச்சுகளைத் தொடங்கவேண்டும்'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இரு சாராரையும் வலியுறுத்தியுள்ளார்.

அரச முறைப் பயணமாக சீனா வந்தடைந்த பராக் ஒபாமா, சீன அதிபர் ஹூஜிண்டாவை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசினார். பின்னர் கூட்டுப் பத்திரிகையாளர் மாநாடொன்றில் அவர் உரையாற்றினார். அவர் தம் உரையில், "சீன மக்கள் குடியரசின் ஒரு பகுதியே திபெத் என்பதை அமெரிக்கா அங்கீகரிக்கிறது. அதேநேரத்தில் இந்த விவகாரம் தொடர்பாக தலாய் லாமாவின் பிரதிநிதிகளும், சீனப் பிரதி நிதிகளும் விரைவில் பேச்சுகள் நடத்தவேண்டும். அதுவே அமெரிக்காவின் எதிர்பார்ப்பும், ஆர்வமுமாகும்'' என்றார்.

1950 ஆம் ஆண்டளவில் சீனாவின் ஆதிக்கத்தின் கீழ் திபெத் வந்தது. அப்போதிலிருந்து அது சீனாவால் நிர்வகிக்கப்படுகிறது. ஆயினும், திபெத்துக்கு சீனாவிடமிருந்து விடுதலை கிடைத்தாக வேண்டும் என்னும் பிரிவினைவாத நோக்கத்துடன் தலாய் லாமா செயற்பட்டு வருகிறார் என சீனா குற்றஞ்சாட்டி வருகிறது.

சீன ஆட்சியை எதிர்த்து 1959 இல் கலவரம் நடத்தி தோல்வியுற்ற தலாய் லாமா இந்தியாவுக்குத் தப்பிவந்தார். திபெத் விவகாரம் தொடர்பாக சீனா, தலாய் லாமா ஆகிய தரப்புகளுக் கிடையே 2002 ஆம் ஆண்டிலிருந்து 7 முறை பேச்சுகள் நடந்துள்ளன.

7 ஆவதாக கடந்த ஆண்டு ஜூலையில் நடந்த பேச்சுக்களும் தோல்வியில்தான் முடிவடைந்தன. திபெத்தை தனி நாடாக பிரிக்கும் எண்ணம் தனக்கு இல்லை என்றும் மறுத்து வருகிறார் தலாய் லாமா.

இவ்விவகாரம் தொடர்பாக, பத்திரிகையாளர் மாநாட்டில் பராக் ஒபாமா பேசுகையில், இருதரப்புகளும் பேச்சுகளில் ஈடுபடவேண்டும் என வலியுறுத்தினார். அத்துடன் இதர விவகாரங்கள் குறித்தும் அவர் குறிப்பிட்டார்.

சீன அதிபர் ஹூஜிண்டாவ் இந்த மாநாட்டில் பேசுகையில், "சீன அதிபர் சர்ச்சைக்குரிய வடகொரிய அணுசக்தி திட்டங்கள் தொடர்பாகத் தீர்வு காண பேச்சுகளும், ஆலோசனைகளுமே அவசியம். இதை உணர்ந்து இதற்கேற்ற நடவடிக்கைகள் தொடரவேண்டும். இதற்கான முயற்சியில் அமெரிக்காவும், சீனாவும் கைகோர்த்து செயற்படுகின்றன'' என்றார்.

பீஜிங்கில் இருதலைவர்களும் மேற்கொண்ட பேச்சுகள் இரண்டரை மணி நேரம் நீடித்தன. இந்த பேச்சுகள் தொடர்பாக கூட்டறிக்கையொன்றும் வெளியிடப்பட்டது.

இந்தியா - பாகிஸ்தான் உறவு குறித்தும் இருதலைவர்களும் விவாதித்தனர். இந்தியா - பாகிஸ்தானிடையேயான உறவு மேம்பட சீனா, அமெரிக்கா ஆதரவாக செயற்படும் என்றும் தமது சந்திப்பில் இருதலைவர்களும் உறுதி அளித்துள்ளனர்.

# ஜான்சி ராணி எழுதிய கடிதம் பிரி. நூலகத்தில் கண்டுபிடிப்பு

லண்டன், நவ. 19

இந்தியாவில் முதலாவது சுதந்திரப்போர் ஆரம்பமாவதற்கு (1857) முன்னர் ஜான்சி பகுதியை ஆட்சி செய்த லட்சுமிபாய் அப்போதைய கிழக்கிந்திய கம்பெனியின் ஆளுநர் ஜெனரல் டல்ஹவுசி பிரபுவுக்கு பாரசீக மொழியில் எழுதிய கடிதமொன்று பிரிட்டிஷ் நூலக ஆவண காப்பகத்தில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கணவனை இழந்த துயரத்துடன் லட்சுமிபாய் எழுதிய இந்தக் கடிதத்தில், "எனது கணவர், ஜான்சியை ஆட்சி செய்வதற்கு வசதியாக தாமோதர் ராவ் என்ற குழந்தையை தத்து எடுத்திருக்கிறார். எனவே, வாரிசு இல்லாத ராஜ்ஜியம் என்று கருதி ஜான்சியை உங்களது கட்டுப்பாட்டில எடுத்துக் கொள்ள வேண்டாம்'' என்று கேட்டிருந்தார்.

எனினும், இந்த சுவீகாரத்தை டல்ஹவுசி பிரபு ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் வெள்ளையர்களை எதிர்த்து ஜான்சி ராணி 1857 ஆம் ஆண்டு தனது படைகளைத் திரட்டி போரில் குதித்தார் என்பது வரலாறு.

வெள்ளையர்களின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் அரச ஊழியராகப் பணியாற்றிய லிவின் பென்தாம் போரிங் என்பவர் சேகரித்த ஆவணங்களில் இந்தக் கடிதம் இருந்தது என லண்டன் நூலக ஆராய்ச்சியாளர் தீபிகா அஹ்லாவத் தெரிவித்துள்ளார்.


திரும்பும் யாழ். மண்ணில்......

ஆர்வலர்களின் அறிவுப்பசிக்கு விருந்தளிக்க மிக விரைவில் வெளிவர இருக்கின்றது

## கம்ப்யூட்டர் ருடே

இலங்கையின் முதலாவது தமிழ் கணினிச் சஞ்சிகை

நவீன தகவல் தொடர்பாடல் துறை பற்றிய புதிய தகவல்கள்

சமகால கணினிச் சந்தை

மாணவர்களுக்கான கணினி உலகம்

கணினிக் கற்கைகளின் விவரக் கொத்து

நவீன தொழில்நுட்பங்கள் பற்றிய தொடர்கள்

மற்றும் பல பயனுள்ள பல புதிய தகவல்களுடன், புதுப் பொலிவுடன்......

கம்ப்யூட்டர் ருடே யில் பணியாற்றுவதற்குப் பின்வரும் பதவி நிலைகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

அ. உதவி ஆசிரியர்கள் (Sub Editors)

ஆ. பக்க வடிவமைப்பாளர்கள் (Page Makers / Type Setters)

இ. வரைகலை நிபுணர்கள் (Graphic Designers)

தரமான ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு :
ஆசிரியர் - கம்ப்யூட்டர் ருடே, GATEWAY Language & ICT Centre)
347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல : 0774447646



## மரண அறிவித்தல்

### குமாரசூரியர் முத்துக்குமாரசூரியர்

(பிரதேச பெருந்தெருக்கள் திணைக்கள நிறைவேற்று பொறியியலாளர்)

சுழிபுரம், கம்பனையைப் பிறப்பிடமாகவும் முள்ளியவளையைச் சேர்ந்தவரும் கனடாவில் வாழ்ந்து வந்தவருமான குமாரசூரியர் முத்துக்குமாரசூரியர் 14.11.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் குமாரசூரியர் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும் முள்ளியவளை மயில்வாகனம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் தெய்வநாயகியின் அன்புக் கணவரும் சூரியகுமாரி ஜெயானந்தன், உமாரஞ்சினி சந்திரன், உதயசூரியன், நற்குலசூரியன், சுவிகாரப்புத்திரி ஈஸ்வரி (மாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செ.ஜெயானந்தன், இ.சந்திரன், நிஷாதினி, பிறிஜட் மேரி,கிரஹரி, கௌரி பரமதேவன், கௌசலா லோகன், ஜெயராமன், ஜெயக்குமார், ஸ்ரீதரன், நித்தியாகந்தன், கல்யாணி, முருகமூர்த்தி, சூரியகுமார், கௌரிபாலா, ஸ்ரீரஞ்சன், ஜெயச்சந்திரன், ஞானரஞ்சினி, தேவமஞ்சரி ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற ஞானாம்பிகை தம்பிப்பிள்ளை, காலஞ்சென்ற நன்னித்தம்பி, அன்னப்பா, காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் இராஜராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் தம்பிப்பிள்ளை, சுப்பிரமணியம் செட்டியார், தியாகராஜா, சரவணமுத்து, நன்னித்தம்பி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபிராமி, அல்ஜூன், கோபி, அசாந், அஞ்சலா (ஜோஸ் அஸ்வினி), ஜோயல், அனோஜன், அமீசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(19.11.2009) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு 375, Mount Pleasant Cemetery மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி.

(சி-62486)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற கலாநிதி க.கைலாசபதியின் நினைவுப்பேருரை நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள்.
யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையுரையாற்றுவதையும், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிலையத்தின் முனைவர் பக்தவத்சலபாரதி நினைவுப் பேருரையாற்றுவதையும் முதலிரண்டு படங்களில் காணலாம்.
முனைவர் பக்தவத்சலபாரதிக்கு துணைவேந்தர் தங்கப்பதக்கம் அணிவிப்பதையும், நினைவுப் பேருரையில் கலந்துகொண்ட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆர்வலர்களின் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன், சுகந்தன்)

# தமிழ் இலக்கியத்தின் பெரும் தொன்மை பாணர் மரபிலிருந்தே தொடங்கியது

## கைலாசபதி நினைவுப் பேருரையில் முனைவர் பக்தவத்சல பாரதி

யாழ்ப்பாணம், நவ.19

தமிழ் இலக்கியத்தின் தொன்மையானது பாணர் மரபில் இருந்தே தொடங்குகிறது. இதிலிருந்து தொழிற்பட்டு நீண்ட படி மலர்ச்சிக்குப் பின்னரே புலவர் மரபு ஏற்பட்டது. இந்த நிலையில் தமிழின் தொல்லியல் படி மலர்ச்சியை ஆராய வேண்டுமானால் நம்முடைய ஆய்வை பழங்குடி இலக்கியதில் இருந்து பாணர் மரபிலிருந்து தொடங்க வேண்டும்.

இவ்வாறு புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிலையத்தின் முனைவர் பக்தவத்சலபாரதி தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தின் முதல் தலைவராக விளங்கிய பேராசிரியர் க.கைலாசபதி நினைவுப் பேரரை யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தலைமையில் நேற்று பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

''பாணர் மரவு: பழங்குடி பாணர்கள், வீரயுகப் பாணர்கள், பிற்காலப் பாணர்கள், திராவிட இனவரையியல் நோக்கு'' என்ற பொருளில் முனைவர் பக்தவத்சல பாரதி அங்கு உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

இத்தகைய நோக்கு நிலை இலக்கியவியலுக்குச் சமூகவியலின் - மானிடவியலின் தேவையை உணர்த்தும் மற்றொரு புதிய களமாக இருக்கும், இதேவேளையில் சமூகவியலுக்கோ சங்கப்பாக்களை உருவாக்கிய பாணர்களின் சமூக அசைவியக்கத்தைப் புரிந்து கொள்வதற்குரிய இலக்கியச் சமூகவியலை உணர்த்தும் களமாகவும் இருக்கும். சமூகவியலும் இலக்கியமும் மிகவும் நெருக்கமாக இணைந்து போக்கூடிய ஓர் ஆய்வுக் களத்தை அறிமுகப்படுத்தி அதற்கென ' சமூகவியலும் இலக்கியமும்' என்னும் நூலையும் எழுதியவர் பேராசிரியர் கைலாசபதி. அவரது ஆய்வுத்தடத்தில் மேன்மேலும் ஈடுபடும் எந்தவொரு முயற்சியும் அவரது பயணத்தைத் தொடருவதாகவே அமையும்.

பாணர்களிடம் பல்வேறு கலை மரவுகள் இன்றைய நாடோடிகளிடம் காண முடிகிறது. சமூகப் படி மலர்ச்சியில் தகவல் அமைப்புகளே முக்கியமானவை. முன்தகவமைப்பானது புதிய இடங்களில் சூழலில் குடியேற உதவுகின்றன. பின்தகவமைப்புகள் புதிய சூழலில் தம்மை பொருத்தக் கொள்வதற்கு உதவுகின்றன. குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால் தகவமைப்புக்களே வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற உதவுகின்றது.

இன்றைய நாடோடிகளின் வாழ்வியலில் தகவமைப்புக்களில் பழைய பாணர் நாடோடிகளின் படிமலர்ச்சிக் கூறுகளை இணங்காண முடியும். இத்தகைய படி மலர்ச்சிகளை ஆய்வாகக் கொள்ள வேண்டும். பாணர் மரபில் தொடர்ச்சி பற்றிய சில குறிப்புக்களை மட்டுமே இந்த உரையில் முன் வைத்துள்ளேன்.

வரலாற்று நிலையில் படிமலர்ச்சி நிலையில் பாணர் சமூகத்தின் அமைப்பியல் மாற்றங்கள் மேன்மேலும் ஆராயப் படவேண்டியுள்ளது எனக் கூறினார்.

துணை வேந்தர் சண்முகலிங்கன் பேசும் போது கூறியதாவது:-

சமுதாய சிறப்பியல், ஒப்பீட்டியல், மனிதப் பண்பியல்,தொல்லியல், அரசியல் போன்ற அனைத்து நிலைகளிலும் எங்களோடு வாழ்ந்தவர் கைலாசபதி அவர்கள்.

அவரால் அறிவு பெற்றவர்கள் நாங்கள். எமது பல்கலைக்கழகத்தின் முதல் தலைவர் ஆவார். அவரது நினைவுப் பேருரையை நிகழ்த்த மிகவும் பொருத்தமானவராக புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் முனைவர் பக்தவத்சலபாரதி விளங்குகிறார்.

தமிழ் உலகில் தமிழ் மொழியின் செழுமையை முன்னைய காலத்தை நாங்கள் தெரிந்துகொள்ளக்கூடியதான பல நூல்களைத் தந்து பல விருதுகளைப் பெற்றவர் முனைவர் பக்தவத்சல பாரதி. தமிழ் சமுகத்தின் நீண்ட அரசியல் சமூக பண்பாட்டியல்களை ஆராயவும் மானிட நேயங்களை உணரவும் கிடைத்த வாய்ப்பை அவருடன் பகிர்ந்து கொள்வோம் - என்றார். (ப-111)

# பாதுகாப்பு அனுமதியின்றி தென்பகுதி செல்ல குடாநாட்டு மக்களுக்கு அரசு வசதி

## ஜனாதிபதியின் பிறந்தநாள் பரிசு என்கிறார் ஆளுநர்



கொழும்பு, நவ.19

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமது பிறந்த நாளை ஒட்டியும் மற்றும் ஜனாதி பதிப் பதவியில் நான்காண்டு காலத்தைப் பூர்த்தி செய்வதையிட்டும் நாட்டின் வடபகுதி மக்களுக்கு பரிசொன்றினை வழங்கியுள்ளார் என்று வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக வடமாகாண ஆளுநரின் கொழும்பில் உள்ள உப அலுவலகத்தின் ஊடகப்பிரிவு சிங்களத்தில் நேற்று அனுப்பிய அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளதாவது;-

இதுவரை காலமும் யாழ்ப்பாணப் பொதுமக்களுக்கு தென்பகுதிக்குச் செல்வதற்காக விதிக்கப்பட்டிருந்த சகல தடைகளையும் நீக்குமாறு ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இவ்விடயம் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் வடமா காண ஆளுநருக்கும் இடையேயான விசேட பேச்சுவார்த்தையொன்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

இதுவரை காலமும் யாழ்ப்பாணப் பொது மக்கள் யாழ். குடாநாட்டிலிருந்து வெளியே செல்லும் போது தமது வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் மற்றும் குடா நாட்டுக்கு வெளியில் செல்வதற்கான காரணங்கள் உள்ளடக்கிய பாதுகாப்பு அனுமதி ஒன்றை பெற வேண்டியிருந்தது.

எதிர்காலத்தில் இத்தகைய பாதுகாப்பு அனுமதி எதுவும் பெற்றுக்கொள்ள வேண்டியதில்லை. இந்நாட்டில் மூன்று தசாப்தங்களுக்குப் பின்னர் மலர்ந்துள்ள சுதந்திரத்தின் பலாபலனை அனுபவிக்கும் வாய்ப்பு தென்பகுதி பொது மக்களுக்கு உள்ளது போன்றே வடபகுதி பொது மக்களுக்கும் கிட்ட வேண்டும் என்பது மஹிந்த சிந்தனை திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.



### லொறிகளும் செல்லலாம்

அந்த வகையில் இன்று முதல் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த சகல லொறி உரிமையாளர்களும் தமது வாகனங்களில் பொருள்களை எடுத்துச் செல்வதற்காக முன்பதிவு எதுவுமின்றி பயன்படுத்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ வடபகுதிப் பொது மக்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க தொடர்ச்சியாக நடவடிக் கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குப் பொருள்களை ஏற்றிச்செல்வதற்காக 722 லொறிகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இன்று முதல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எந்தவொரு லொறியும் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கான அனுமதி வழங்கப்படுவதாகவும், அவற்றை நாவற்குழியிலுள்ள களஞ்சியத்துக்கு எடுத்துச்சென்று அந்த லொறிகள் பாதையில் பயணிப்பதற்குத் தகுதி வாய்ந்தவையா? என்பது குறித்த பாதுகாப்புப்பிரிவினரின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் கொழும்புப் பயணத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்படுமென யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார் -என்று உள்ளது. (அ-3)

# கால்நடை வழங்கும் நிகழ்வு

நிஷா புயல் வெள்ளத்தினால் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கால் நடைகளை இழந்தவர்களுக்கு கால்நடைகளை வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

கமநெகும நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 152 பேருக்கு இன்று பி.ப 2 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கால்நடை உற்பத்தித் திணைக்கள உதவிப்பணிப்பாளர் பிரதமவிருந்தினராக கலந்துகொள்வார்.

# நகரில் விளம்பரத் தட்டிகள் நிறுவ புதிய ஏற்பாடு உடன் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், நவ.19

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் விளம்பரத் தட்டிகள், பதாகைகள் மற்றும் 'கட் அவுட்'களை நிறுவுவதாயின் மாநகர சபையின் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் அனுமதி வழங்கப்பட்டு மூன்று வாரங்களுக்குள் அவை நிறுவப்பட வேண்டும் எனவும் யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக மாநகர முதல்வர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். மாநகர சபையின் அனுமதியின்றி அதன் எல்லைக்குள் நிறுவப்பட்டுள்ள அனைத்து விளம்பரப் பதாகைகள், தட்டிகள் போன்றவை தற்போது அகற்றப்பட்டு வருகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் கமநல சேவை அபிவிருத்தித் திணைக் களம் ஆகியவற்றின் எல்லைக்குட்பட்ட வீதிகள் யாழ். மாநகர எல்லைக்குள் உள்ளன.

இந்த வீதிகள் மட்டுமன்றி தனியார் காணிகள், வீட்டுச் சூழல் பகுதிகளிலும் கூட பெரிய விளம்பரங்கள் காணப்படுகின்றன. இனி விளம்பரத் தட்டிகள் மற்றும் 'கட்அவுட்' களை அமைப்பதாயின் யாழ். மாநகர சபையின் அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டும். உரிய அனுமதி வழங்கப்பட்டு மூன்று வாரங்களுக்குள் விளம்பரங்கள் குறிப்பிட்ட இடங்களில் நிறுவப்பட வேண்டும்.குறித்த கால எல்லைக்குள் அவை நிறுவப்படாவிட்டால் அவற்றுக்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்துச் செய்யப்படும்.

இந்த நடவடிக்கை உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளது என்றார் அவர்.

# மனிதபிமான அமைப்புகள் கைவிட்டன; 240 இலங்கையர் நிலை பரிதாபகரம்

கொழும்பு, நவ. 19

சர்வதேச மனிதாபிமான அமைப்புகள் கைவிட்டமையைத் தொடர்ந்து இந்தோனேஷியாவின் ஜாவா துறைமுகத்தில் நிற்கும் கப்பலில் உள்ள இலங்கையர்கள் 240 பேரின் நிலைமை மோசமடைந்துள்ளது.

கப்பலில் இருந்து இறங்க மறுக்கும் 240 இலங்கையர்களுக்கும் கடந்த ஒரு மாத காலமாக உதவிவந்த சர்வதேச தொண்டு அமைப்பு ஒன்று குறிப்பிட்ட துறைமுகத்திலிருந்து விலகியுள்ளது.

கப்பலில் உள்ளவர்களால் தனது பணியாளர்கள் பணயக் கைதிகளாக பிடிக்கப் படலாம் என்ற அச்சம் காரணமாகவே அந்த அமைப்பு விலகியுள்ளது.

இதனால் மருத்துவ பராமரிப்பு, மின்சாரம் போன்றவை அற்ற நிலையில் 246 இலங்கையர்களும் குறித்த கப்பலில் இருக்கின்றனர். அவர்களது கப்பல் நிற்கும் பகுதியில் கடும் மழை பெய்கின்றது.

மேலும் கப்பலில் உள்ள குழந்தைகள் உணவு இல்லாமல் பாதிக்கப்பபட்டுள்ளனர்.

''கப்பலில் நிலைமை மிக மோசமாக வுள்ளது. எமக்கு உதவிகள் எவையும் கிடைக்கவில்லை'' என கப்பலில் உள்ளவர்கள் சார்பில் கருத்துக் கூறியுள்ள அலெக்ஸ் என்பவர் தெரிவித்துள்ளார்.

''இந்தோனேஷியாவில் அதிகாரிகள் இவ்வாறான நிர்ப்பந்தங்கள் மூலம் எம்மை பலவந்தமாகப் படகிலிருந்து இறக்க முயல்கின்றனர்'' என்றும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

''எங்களுக்கு நீதி கிடைக்கும் உலக நாடு ஏதாவது எங்களை ஏற்றுக்கொள்ளும் என்ற எதிர்பார்ப்பில் காத்திருக்கிறோம்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மனித உரிமை விசாரணையை ஆஸ்திரேலியா உன்னிப்பாக அவதானிக்கும்

## அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 19

உள்நாட்டு யுத்தத்தின் போது இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கை அரசு நீதியானதும் சுதந்திரமானதுமான விசாரணைகளை மேற்கொள்கின்றதா என்பது பற்றி ஆஸ்திரேலியா உன்னிப்பாக அவதானிக்கும் என்று ஆஸி. நாடாளுமன்றத்துக்கு உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

ஆஸி. வெளியுறவு அமைச்சர் ஸ்ரீபன் ஸ்மித் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார். ஆஸி.நாட்டு உயர்மட்டக் குழுவொன்று கடந்த வாரம் இலங்கைக்கு நேரில் விஜயம் செய்திருந்தது.

இந்த உயர்மட்டக் குழுவில் ஆஸியின் வெளியுறவு அமைச்சர் ஸ்ரீபன் ஸ்மித், ஆஸியின் இலங்கைக்கான விசேட தூதுவர் ஜோன் மக்காதி ஆகியோர் முக்கியமாக இடம்பிடித்திருந்தனர்.

இந்நிலையில் இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியிருக்கும் வெளியுறவு அமைச்சரிடம் அவரின் இலங்கை விஜயம் குறித்து ஆஸி.நாடாளுமன்றத்தில் சக உறுப்பினர் ஒருவரால் கேள்வி கேட்கப்பட்டது.

ஆஸி.நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான சீஸ்மன் வெளியுறவு அமைச்சர் அவரின் இலங்கைப் பயணம் குறித்து இந் நாடாளுமன்றத்துக்குத் தெரிவிக்கவேண்டும் என்று ஸ்ரீபன் ஸ்மித்திடம் வினவினார்.

அப்போதே வெளியுறவு அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு முக்கியமாகத் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் யுத்தத்தின் இறுதி நாள்களின்போது ஏராளமான மனிதப் பேரழிவுகள், மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள் ஏராளமாக இடம்பெற்றிருக்கின்றன என்று பரவலாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. எனவே, இக்குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை அரசு நீதியான, சுதந்திரமான விசாரணைகளை நடத்தவேண்டும். இதுவே ஆஸியின் எதிர்பார்ப்பு என்று இலங்கை அரசுக்குத் தெரிவித்தேன்.

அமெரிக்காவால் இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கும் யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரிக்க இலங்கை அரசு விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளது. இதை ஆஸி.அரசு மனப்பூர்வமாக வரவேற்கின்றது. ஆனால் இந்த ஆணைக்குழு நீதியான, சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்கின்றது என்பது குறித்து ஆஸி.மிகவும் உன்னிப்பாக அவதானிக்கும்.

இலங்கை அரசு யுத்தத்தில் இடம் பெற்ற மனிதப் பேரழிவுகள் குறித்து பொறுப்புக் கூறத்தான் வேண்டும். ஆனால் இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஆஸ்திரேலியா இயலுமான உதவிகளைச் செய்ய வேண்டியுள்ளது. - என்றார். (அ-சி)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 64 ஆவது பிறந்த தினம் அலரி மாளிகையில் நேற்றுக் கொண்டாடப்பட்டது. அதன்போது ஜனாதிபதி 64 இரட்டைக் குழந்தைகளுக்குக் கேக் ஊட்டுகின்றமையையும், அருகில் அமைச்சர் சிறிபால டி சில்வாவையும் படத்தில் காணலாம்.

## மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீக்கம்செய்யப்பட்டுள்ளார்.

வன்னி நிலைமை தொடர்பாக அமெரிக்காவின் சி.என்.என். செய்தி நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் பங்குபற்றி கருத்து வெளியிட்டமை தொடர்பாக மருத்துவ நிபுணர் கடந்த ஜூலை மாதம் அமைச்சுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டிருந்தார்.

அதன் தொடர் நடவடிக்கையாகத் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சிடம் இருந்து நேற்று அவருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக அறியவந்தது. (அ-1)

## தமிழ்பேசும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் ஹென்றி மகேந்திரன் ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காகச் சூரிச் சென்றுள்ளனர்.

இதேசமயம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வீ.ஆனந்தசங்கரி, ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, 'புளொட்' தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா அணி) தலைவர் ஸ்ரீதரன் (சுகு) ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்ற சூரிச் சென்றுள்ளனர்.

இதேசமயம், இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்கான அழைப்பு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கும் (பிள்ளையானுக்கும்), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரும் அமைச்சருமான முரளிதரனுக்கும் (கருணாவுக்கும்) அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிகிறது.

கிழக்கு மாகாண முதல்வர் சந்திரகாந்தன் வெளிநாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். ஆனால் அவர் மேற்படி கலந்துரையாடலில் பங்குபற்றுவாரா என்பது உறுதி செய்யப்படவில்லை.

எனினும், அமைச்சர் முரளிதரன் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்ற மாட்டார் என்று சில வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, இந்தக் கலந்துரையாடலில் இலங்கை முஸ்லிம்களின் பல்வேறு தலைவர்களும் பங்குபற்றவிருக்கின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி., செயலாளர் நாயகம் ஹஸனலி எம்.பி., அமைச்சர்கள் ரிஷாத் பதியுதீன், அதாவுல்லா போன்றோர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காக சூரிச் சென்றுள்ளனர்.

லண்டனில் கிங்ஸ்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'தமிழர் தகவல் மையம்' என்ற அரச சார்பற்ற அமைப்பே இந்தக் கலந்துரையாடலுக்கான அழைப்பை விடுத்திருக்கின்றது.

இக்கலந்துரையாடலில் சர்வதேச தரப்புகளைச் சேர்ந்த நிபுணர்கள், முக்கியஸ்தர்கள் ஆலோசகர்களாகக் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவர் என்றும் -

கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டவர்களைத் தவிர வேறு வெளியாள்கள் அதில் பங்குபற்றவோ, பார்வையாளர்களாகக் கலந்துகொள்ளவோ அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் -

ஊடகவியலாளருக்கும் கூட இடமளிக்கப்படமாட்டாது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## வன்னி அகதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழ் மக்களுக்காக சர்வதேச ரீதியில் குரல் கொடுத்து வரும் மனித உரிமைகள் ஆர்வலர்களான பாதிரியார் வணபிதா பன் ஜோக்டன், வைத்திய கலாநிதி விரியன் செனவிரட்ண ஆகியோர் இந்த அவசர அழைப்பை பாப்பரசருக்கு விடுத்துள்ளார்கள்.

அகதிகளாக முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பொதுமக்களை இலங்கை அரசு உடன் விடுதலை செய்ய வேண்டும் என்று பாப்பரசர் கடந்த வாரம் அவசரமாகக் கோரியிருந்தார்.

அவர் இவ்வாறு குரல் கொடுத்துள்ளமையை இலங்கைத் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து வரும் இந்த மனித உரிமைகள் ஆர்வலர்கள் மனப்பூர்வமாக வரவேற்றுள்ளனர்.

இருப்பினும் பாப்பரசர் இலங்கைக்கு நேரில் விஜயம் செய்து அகதி முகாம்களை பார்வையிடுவதுன் மூலமாகவே தமிழ் மக்கள் மனிதாபிமானமற்றமுறையில் கொடூரமாக நடத்தப்படுகின்றமையை நேரில் காண முடியும் என்று அவர்கள் பாப்பரசருக்கு அழைப்பு விடுத்துள்ளார்கள்.

அவர்கள் பாப்பரசரிடம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைத் தமிழ் அகதிகளில் அநேகமானவர்களுக்குச் சொந்தமாகச் சென்று மீள்குடியேறுவதற்கு வீடுகள் கிடையாது. அவர்களின் வீடுகள் யுத்தத்தில் அழிந்து விட்டன.

அதேநேரம் ஏனைய தமிழர்களின் வீடுகளில் சிங்களவர்கள் குடியேறியிருக்கிறார்கள். மீள்குடியேற்றப்படும் தமிழர்களின் உயிருக்குக் கூட உத்தரவாதம் இல்லை. ஆகவே தான் சட்டவிரோதமானமுறையில் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குத் தப்பிச்செல்ல அவர்கள் முயற்சிக்கின்றனர்.

எனவே இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அதேநேரம் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முயன்ற இலங்கைத் தமிழ் அகதிகளை ஆஸி இலங்கைக்குத் திருப்பி அனுப்புமானால் அந்தத் தமிழர்களுக்கு மரண தண்டனை வழங்குகின்றமை போலாகிவிடும். இதேநேரம் அகதி முகாம்களில் உள்ள தமிழர்களின் நிலைமை இன்னமும் பரிதாபமாக உள்ளது. இந்த அகதி முகாம்கள் அண்மைய பருவப் பெயர்ச்சி மழையினால் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன. (அ-சி)

## கிளியரன்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் பலரும் விசனம் தெரிவித்தனர்.

வெளிமாவட்டங்களுக்குச் சென்று வருவதற்கான பயண அனுமதி (கிளியரன்ஸ்) நேற்றுத் தொடக்கம் கேட்கப்படமாட்டாது -அவசியமில்லை- அந்த விதி நீக்கப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி பணித்துள்ளதாக யாழ்.அரச அதிபர் தெரிவித்திருந்தார்.

அதனைப் பத்திரிகை வாயிலாக அறிந்த மக்கள் கொழும்பு செல்வதற்காக பயண அனுமதியின்றி அடையாள அட்டை போட்டோ பிரதிகளுடன் சிங்கள மகா வித்தியாலயத்திற்கு சென்ற போது படையினரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஏற்கனவே கடந்த 14ஆம் திகதியன்று பாதுகாப்பு அமைச்சு இவ்வாறான ஒரு தகவலை விடுத்திருந்தமையினால் அன்றும் மக்கள் பல்வேறு இடையூறுகளைச் சந்தித்திருந்தனர்.

நேற்றைய அறிவிப்பின் பின்பும் படையினர் பாதுகாப்பு அனுமதியைக் கேட்டது பயணிகளுக்கு பெரும் சிரமங்களை ஏற்படுத்தியதாக கவலை தெரிவித்தனர். இது தொடர்பாக யாழ்.சிவில் நிர்வாகப் பிரிவு அதிகாரியைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

பயண அனுமதி தொடர்பாக காலையில் அறிவிப்புக் கிடைக்கவில்லை. இதன் காரணமாக மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். பின்னர் உயர் மட்டத்திலிருந்து கிடைத்த உத்தரவை அடுத்து சகலரும் பஸ்கள் மூலம் அனுப்பப்பட்டனர்-என்று கூறினார். (அ-1-10)

(மற்றொரு செய்தி 19ஆம் பக்கத்தில்)

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்கவே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது கூட்டமைப்பில் பல கட்சிகள் இணையத் தொடங்கியுள்ளன. இன்று இலங்கைத் தொழிலாளர் முன்னணி எம்முடன் இணைந்துள்ளது. இதுவரை 13 கட்சிகள் எம்முடன் இணைந்துள்ளன. அடுத்தவாரம் மேலும் 5 கட்சிகள் எம்முடன் இணையும்.

அதேபோல், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுடனும் நாடாளுமன்றுக்கு வெளியே உள்ள கட்சிகளுடனும் நாம் பேச்சு நடத்தி வருகின்றோம்.

தேர்தல்கள் தொடர்பாக இப்போது பரவலாகப் பேசப்படுகின்றது. நடந்து முடிந்த சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் தேர்தல் தொடர்பாக அறிவிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால், அப்படியான அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை.

அரசு எந்தத் தேர்தலை அறிவித்தாலும் அதை எதிர்கொள்ள நாம் தயாராகவே இருக்கின்றோம். ஜனாதிபதித் தேர்தலை அறிவித்தால் அறிவித்த அன்றைய தினமே நாம் எமது பொதுவேட்பாளரை அறிவிப்போம்.

தேர்தல் அறிவிக்கப்பட்டால் அதைக் கண்காணிக்க நிச்சயம் சர்வதேச கண்காணிப்பாளர்கள் அவசியம். அவர்களுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம். அத்தோடு, கடந்த காலத் தேர்தல்களில் போல் அரசு, அரச சொத்துகளைப் பாவிப்பதை நிறுத்த வேண்டும். (அ-சி)

## இந்தோனேஷியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்திரேலியா அடைக்கலம் அளிக்கவுள்ளது. இது அடுத்த சில வாரங்களில் இடம்பெறலாம்.

ஏனையவர்கள் குறித்து விரைவாக ஆராய்ந்து அவர்கள் அகதிகள் என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் உடனடியாக அடைக்கலம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## நாடெங்கிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் இடம்பெயர்ந்துள்ளன என்று கொழும்பு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

கெத்தாராம பகுதியில் ஆயிரத்து 200 குடும்பங்களும் அப்பில்வத்த பகுதியில் ஆயிரம் குடும்பங்களும் மோதர ரெட்பானா தோட்டப் பகுதியில் 350 குடும்பங்களும் கிம்புலாஹெல பகுதியில் 200குடும்பங்களும் இடம் பெயர்ந்துள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### பஸ் நிலையம் நீரில் மூழ்கியது

கொழும்பு புளுமெண்டல் பகுதியிலுள்ள நீர்மின் நிலையம் நீரில் மூழ்கிய தால் கொழும்பின் பல பிரதேசங்களில் நேற்று அதிகாலை முதல் மாலைவரை மின்சாரம் துண்டிக்கப்பட்டி ருந்தது.

கிராண்ட்பாஸ் பகுதியில் 400 வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன என்று மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் ஒருங்கிணைப்பாளர் பத்திரன தெரிவித்தார். மாளிகாவத்தையில் 50 வீடுகளும், பெரியமுல்ல, மஹரகம மற்றும் கடுவெல பகுதிகளில் சுமார் 20 வீடுகளும் நீரில் மூழ்கியுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாளிகாவத்தை வைத்தியசாலைப் பகுதியும் நீரில் மூழ்கியுள்ளது. கடந்த 2005 நவம்பர் மாதத்துக்குப் பின்னர் கொழும்பு மாவட்டத்தில் பதிவான அதிகளவு மழைவீழ்ச்சி இதுவென அனர்த்த முகாமைத்துவ நிலையம் கூறுகிறது.

### கண்டி மாவட்டத்தில் பெருமழை

கம்பளை - கண்டி பிரதான பாதையில் பொல்கும்புர பகுதியில் வீடுகள் சிலவற்றுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதோடு ரயில் பாதையின் குறுக்கே மரம் ஒன்று சரிந்து விழுந்தமையால் 3 வீடுகள் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கண்டி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் 193 மி.மீ மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

கண்டி மாவட்டத்திலும் பல வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன என்று கண்டி மாவட்ட இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்பாளர் மேஜர் கமல் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கண்டி மஹியாவைப் பகுதியில் மண்சரிவு ஏற்பட்டதில் 4 வீடுகள் சேதமடைந்துள்ளன. நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் காயம் அடைந்த ஒருவர் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

களுத்துறை மாவட்டத்திலும் தாழ் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. களுத்துறை, பஸ்கமுவ, பாலிந்தநுவர உள்ளிட்ட பகுதிகளில் பல வீடுகள் நீரில் மூழ்கியுள்ளதால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## மரண அறிவித்தல்

### திருமதி ராஜபூபதி சோமசுந்தரம்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராஜபூபதி சோமசுந்தரம் நேற்று (18.11.2009) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பாபிள்ளை சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி, சிறீதரன் (சிறீ), கலாதேவி (கனடா), ரவீந்திரன் (கனடா), சிவதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசலிங்கம், ஜெயமாலா, பத்மநாதன் (கனடா), அருள்தேவி (கனடா), ஆனந்தராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெனார்த் (கனடா), தாரணி, குககாந்தன் (மாணவன், மானிப்பாய் மகளிர் கல்லூரி), சோபிகா (கனடா), யசிகன் (கனடா), ரனுசன் (கனடா), விபுசன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2009) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப. 3 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலய வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
T.P.: 0214921353, 0014167730136.

தகவல்: சிறீதரன் (சீறி - மகன்),
ரவீந்திரன் (மகன் - கனடா),
இராசலிங்கம் (மருமகன்).


வெளிவந்துவிட்டது
S.L.A.S வழிகாட்டி
தொகுப்பு: த.தவசேகர்
★ 4வகை வினாக்களையும், விளக்கத்தையும் கடந்த கால வினாத்தாள்களையும் விடைகளையும் உள்ளடக்கியது
★ பிரபல புத்தக நிலையங்களிலும் வகுப்பிலும் பெற்றுக் கொள்ளலாம். (விலை 450/- ரூபா)
(91207)

விற்பனையாகிறது
S.L.A.S
நடைபெறவுள்ள இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் - 2010
(முற்றிலும் எதிர்பார்ப்பு வினா விடைகளை உள்ளடக்கியது)
ஆசிரியர்: P.கமலதாஸ்
ரூபா - 450/=
பூபாலசிங்கம் புத்தகசாலை,
(சி/562493)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org